
# கோகுலம்

GOKULAM

டிசம்பர் '93 ரூ. 3.00



# 10 வித்தியாசத்தை கண்டுபிடியுங்கள்






பார்லே

மேங்கோ
பைட்

everest/93/PP/170-tm



# கோகுலம்

1993
டிசம்பர்
மாத இதழ்
மலர் 11
இதழ் 11

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும்.

- பாரதியார்.

# அருமைச் சிறுவர் சிறுமியரே...





எல்லோருக்கும் வணக்கம். தீபாவளி வாழ்த்துகள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி.

போன மாதம் 'பட்டாக பிறந்த கதை' என்று ஒரு கட்டுரை வெளி யாகியிருந்தது. இது 1990 ஆம் ஆண்டில் பிரபல வார இதழ் ஒன்றில் வெளிவந்தது என்பதைக் குறிப்பிட்டு ஏராளமானவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஒரு சிலர், கட்டுரை வெளியான பக்கங் களையே ஜெராக்ஸ் செய்து அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் நன்றி. கோகுலம் ஆசிரியர் ஏமாற்றப்பட்டாலும், ஆயிரக் கணக்கான கோகுலம் வாசகர்களை எளிதில் ஏமாற்றி விட முடியாது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

ஏசுபிரான் அவதரித்த புனிதமான மாதம் இது. இதைச் சிறப்பிக் கும் வகையில் சில பகுதிகள் இந்த இதழில் வெளியாகியுள்ளன. கிறிஸ்துமஸ் கொண்டாடும் வாசகர்களுக்கு கோகுலத்தின் மனமார்ந்த இனிய வாழ்த்துகள்.

சிறுவர் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்த இராஜாஜி, மகாகவி பாரதியார் ஆகியோரின் பிறந்த நாளும் இந்த மாதம்தான்.

எழுத்தாளர்களையும் இலக்கிய வாதிகளையும் ஊக்குவிக்க எத்தனையோ தனியார் அமைப்புகள் அரும்பணியாற்றி வருகின்றன. ஆனால் சிறுபவர்களுக்காக எழுதுவோர்களை இவை கவனிப்ப தில்லை. இதற்கு விதி விலக்கு ஏவிஎம் அறக்கட்டளை, கோவை எல்லப்பா ரங்கம்மாள் அறக்கட்டளை, செல்லப்பன் நினைவுப் பரிசு ஆகியவை மட்டுமே. இந்தப் பட்டியலில் சென்னை 'அனந்தாரி அறக்கட்டளையையும் சேர்க்கலாம். சிறுவர் இலக்கியம் படைப் போருக்கும் இந்த அறக்கட்டளை ரொக்கப் பரிசு வழங்கிப் பாராட்டி வருகிறது. இந்த அறக்கட்டளையின் நிறுவனரான திரு என்.சி. அனந்தாச்சாரி, பிரபல வழக்கறிஞர் என்பதோடு சிறந்த எழுத் தாளரும் கூட. சிறுவர் உலகுக்கு கோகுலம் ஆற்றிவரும் தொண் டைப் பாராட்டும் வகையிலும், வசதியற்ற சிறுவரும் கோகுலத்தைப் படிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திலும் இவர் 50 அனாதைச் சிறுவர் இல்லங்களுக்குத் தமது அன்பளிப்பாக ஆண்டுச் சந்தா கட்டி ஒரு புதிய வழியைத் தொடங்கியுள்ளார். திரு. அனந்தாச்சாரி அவர் களின் தொண்டுள்ளத்தைப் பாராட்டுவதோடு, இவர் காட்டியுள்ள நல்ல வழியை மற்றவர்களும் பின்பற்றலாம்.

பிறந்த நாள், வீட்டில் நடக்கும் குடும்ப விழா போன்ற மகிழ்ச்சி யான நிகழ்ச்சிகளின் போது உங்களுக்குப் பிடித்த ஒரு குழந்தையின் பெயருக்கு கோகுலத்திற்கு ஓராண்டு சந்தா செலுத்தலாம். அப்படி இல்லை என்றால் சிறுவர் அனாதை இல்லங்கள் அல்லது மருத்துவ மனைகளில் உள்ள குழந்தைகள் பிரிவிற்கு ஓராண்டுச் சந்தா கட்ட லாம். சந்தா விவரம் கோகுலத்தின் கடைசிப் பக்கத்தில் கீழே விவர மாக உள்ளது. இதைத் தங்கள் பெற்றோரிடம் காட்டும்படி இதைப் படிக்கும் அருமைச் சிறுவர் சிறுமியரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,


(கௌரவ ஆசிரியர்.)

## 1993 டிசம்பர்

# இந்த இதழில்



✱ பற்கள் பலவிதம் பக்கம் 9




✱ கருடனை வென்ற கருணை வள்ளல் பக்கம் 44





✱ வரிக்குதிரை கறுப்புக் கோடா, வெள்ளைக் கோடா? பக்கம் 23



✱ விண்வெளியுகம் பக்கம் 70

✱ மீன் மழை, இரத்த மழை, தவளை மழை பெய்யுமா? பக்கம் 78



# மறைந்துள்ள விலங்குகள் என்னென்ன?




விடை : ஓநாய், முயல், மான், நரி, கரடி, புலி, மலைப்பாம்பு.






DIAMOND COMICS PVT. LTD. 2715, DARYAGANJ, NEW DELHI-110002

STRIBUTORS: Madras: • Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road. • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore). derabad: • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar.. Bangalore: • Sapna Book Stall, Gandhi Nagar. A.K. Agencies, Rajaji Nagar. • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road.

# கிறிஸ்துமஸ்



சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யூதேயாவில் ''பெத்லேகம்'' என்ற இடத்தில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் ஏசுநாதர் பிறந்தார் என்பது வரலாறு.

முதன் முதலில் ஏசுவைக் காணச் சென்றவர்கள் ஆடு மேய்ப்பவர்கள்தான். அவர்களுக்கு தேவ தூதர் இந்தச் செய்தியைத் தெரிவித்தார். அவர்கள் குழந்தை ஏசுவைத் தரிசித்து, ஆராதித்து பரிசுகளை வழங்கினார்கள்.

''மெசியா'' மக்களை மீட்கவே ஏசு பிறந்தார் என்பது யூதமறை நம்பிக்கை. கீழ்த்திசை ஞானிகளும், தாங்கள் கண்ட வால் நட்சத்திரம் வழிகாட்ட ஏசு பிறந்த பெத்லகேமுக்கு வந்து தரிசித்துப் பணிந்தனர். இதன் அடிப்படையில்தான் கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி ஒவ்வொரு கிறிஸ்துவர் வீட்டிலும் நட்சத்திரம் தொங்க விடப்படுகிறது. ''விண்மீனைக் கண்டு தெய்வீகக் குழந்தை ஒன்று உலகில் பிறந்திருக்கிறது'' என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டது தெய்வத்தின் அருளால்தான்.

ஏசுவின் பிறப்பு ஒரு மலையடிவார குகையில் மாட்டுக் குடிலில் என்று விவிலியம் கூறுகிறது. வீட்டில் இதை நினைவு கூறவே குடிசை அமைத்து மரியாள் சூசை, குழந்தை ஏசு, ஆடு மேய்ப்பர், ஆடு, மாடு, கழுதை போன்ற பொம்மைகளை அதனுள் வைத்து கிறிஸ்துமஸ் தினத்தைக் கொண்டாடுகின்றனர். ஏசு, மக்களுக்கு அமைதி, மகிழ்ச்சி எண்ணற்ற நன்மைகளைக் கொண்டு வந்தார் என்றும், ''இறைவனின் கருணை உன்னதமானது. கருணை கொண்டவர் இறைவனுக்குச் சமமாவர்'' என்றும் தேவதூதர் பாடியதாக வரலாறு கூறுகிறது.

இந்த மகிழ்ச்சியை மனதில் கொண்டே 18-ம் நூற்றாண்டில் ஜெர்மனியில் கிறிஸ்துமஸ் மரம் நட்டு, அதில் பரிசுப் பொருட்களைத் தொங்க விட்டு கிறிஸ்து மஸ் பண்டிகையைக் கொண்டாடத் தொடங்கினார்கள். அங்கு

தொடங்கிய இந்தப் பழக்கம் இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளது.

கிறிஸ்துமஸ் மரத்திற்கு ஒரு பின்னணியும் உண்டு. உலகின் முதல் மனிதன் ஆதாம் இறைவனின் எச்சரிக்கையைப் புறக்கணித்து மரத்தின் பழுத்த பழத்தைத் தின்று மனித குலத்திற்கு இழுக்கைத் தேடித் தந்தானாம். அந்த மரத்தின் மூலமாகவே தேவமைந்தன் சிலுவை மரத்தில் அரையுண்டு, மக்களுக்கு விடிவு தேடித் தந்தார். எந்த மரத்தின் வாயிலாக பாவமானது மனித குலத்தில் நுழைந்ததோ அதே மரத்தின் மூலமாகவே பாவத்தை அழித்து இரட்சண்யத்தைத் தேடித் தந்தார் ஏசுபிரான்.

கிறிஸ்துமஸ் இரவில் எட்டு மான்கள் பூட்டப்பட்டு ''ஸ்லெட்ஜ்'' வண்டியில் கிறிஸ்துமஸ் தாத்தா வந்து நல்ல குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்குவார் என்பதைக் குழந்தைகள் நம்புகின்றனர்.

குழந்தைகள் தூங்கும் போது கிறிஸ்துமஸ் தாத்தா வந்து அவர்களுடைய காலுறைகளில் பரிசுப் பொருட்களை நிரப்பி வைப்பார் என்பதற்காக குழந்தைகள் தூங்கப் போவதற்கு முன் தங்கள் வீட்டின் கதவில் காலுறைகளைத் தொங்க விடுவார்கள். பெற்றோர்களும்



அந்தக் காலுறைகளில் பரிசுப் பொருட்களை வைத்து, கிறிஸ்துமஸ் தாத்தா வந்து அதைக் கொடுத்ததாகக் குழந்தைகளுக்குக் கூறுவது இன்று உலகம் முழுவதும் வழக்கமாக இருக்கிறது.

கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை அனுப்பும் மரபு 1843-ம் ஆண்டில் ''பிராட்லி'' என்ற மதகுருவால் இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து உலக நாடுகள் முழுவதம் அந்தப் பழக்கம் பரவியது.

மொத்தத்தில் கிறிஸ்துமஸ் விழா. எல்லோரது விழாவாக இருந்தாலும் குறிப்பாக அதைச் சிறுவர் விழா என்றே சொல்லலாம்.

- தக்கோலம் அ. முஸ்தபா



# உங்கள் நூலகம்

**டாம் சாயரின் சாகசங்கள். மார்க் ட்வைன், மொழி பெயர்ப்பு பி.எஸ். சுப்ரமணியன், பக். 224 ரூ. 30/- அலைகள் வெளியீட்டகம், 36, தெற்குச் சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024.**

ஆங்கில சிறுவர் இலக்கியத்தில் தனி முத்திரை பதித்தவர் மார்க் ட்வைன் என்ற புனை பெயர் கொண்ட சாமுவேல் லாங்ஹோர்ன் கிளெமென்ஸ். பெரிய புத்தகமாகவும், சுருக்க நூலாகவும், திரைப்படமாகவும், சித்திரக் கதையாகவும் வெளியாகித் தன்னைப் படைத்த ஆசிரியருக்குப் பெரும் புகழை ஈட்டித்தந்த படைப்பு இது. மொழி பெயர்ப்பாகத் தோன்றாத வண்ணம் எழுதியிருப்பதை எத்தனை முறை வேண்டுமானாலும் பாராட்டலாம்.

**அதிசயப் பேனா. சாந்தா மூர்த்தி, பக். 104, ரூ. 25/- வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, சென்னை – 17.**

மாலதிக்கு ஓர் அழகான தங்கப் பேனா பரிசாகக் கிடைக்கிறது. அது வந்து சேர்ந்த வேளை, அவளை அது எத்தனை பாடுபடுத்துகிறது என்பதை நாவல் சுவையாக விளக்குகிறது. விறுவிறுப்புக்குக் குறைவில்லை. நல்ல பழகு நடை. முடிக்காமல் கீழே வைக்க முடியாது.

**அதிசய உலகில் ஆலிஸ் : லூயி கரல், மொழி பெயர்ப்பு : பி.எஸ். சுப்ரமணியன், பக். 144, ரூ. 22/- பல்கலைப் பதிப்பகம், 36 தெற்குச் சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், சென்னை – 24.**

லூயிகரல் ஆங்கில சிறுவர் இலக்கிய உலகில் அசைக்க முடியாத இடத்தைப் பெற்றவர். இவரது படைப்பான 'ஆலிஸ் இன் வொண்டர்லாண்ட்' வெளிவராத உலக மொழிகளே இல்லை! தமிழில் இதைச் சிறுவர் இலக்கிய முன்னோடியான தி.ஜ.ர. தனது பாப்பா பத்திரிகையில் 'அலமுவின் அதிசய உலகம்' என்று தொடர்ந்து வெளியிட்டார். இதே நாவலை பண்பட்ட எழுத்தாளரான பி.எஸ். சுப்ரமணியன் இப்பொழுது இனிய கதையாகப் படைத்துள்ளார். கதையை வெறும் மொழி பெயர்ப்பாகச் செய்யாது, மூல நூலையே படிப்பது போல் தந்திருப்பது ஆசிரியரின் ஈடுபாட்டையும், உழைப்பையும் காட்டுகிறது. தரமான படைப்பு.

**சிறுவர் உலகக் கதைகள், அகிலா, பக். 120, ரூ. 15/- பல்கலைப் பதிப்பகம், 36, தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், சென்னை – 24.**

நவரத்தினங்களை வைத்து ஒரு மாலை செய்தால் எத்தனை அழகாக இருக்கும்? அதே போன்ற ஒரு பிரமிப்பை இந்தப் புத்தகம் தருகிறது. இந்தோனேஷியா, இங்கிலாந்து, பாரசீகம், அயர்லாந்து, சீனா, நார்வே, ஸ்வீடன், இலங்கை, இத்தாலி போன்ற பல நாடுகளில் இருந்து ஆய்ந்து எடுக்கப்பட்ட 11 அழகான சிறு கதைகளை இந்த ஆசிரியர் தந்திருக்கிறார். ஒவ்வொன்றும் ஒரு வகையில் சிறப்பாக இருக்கிறது. அருமையான படைப்பு.


**கானகத்திலுள்ளே யானைகள். வாண்டு மாமா, பக். 94, ரூ. 25/- கங்கை புத்தக நிலையம், தீனதயாளன் தெரு, தி.நகர், சென்னை – 17.**

எவரையுமே பிரமிக்கத்தக்க விதத்தில் எழுதவும் புத்தகமாக வெளியிடவும் செய்யக் கூடிய இருவர் சேர்ந்தால் விளைவு எப்படி இருக்கும் என்பதை இந்தப் புத்தகம் காட்டுகிறது. யானையைப் பற்றிய பரம்பரை, புராண, இதிகாச, வரலாற்று குறிப்புகள், கதைகள், எல்லாம் தக்க படங்களுடன் மிக அழகாகத் தரப்பட்டுள்ளன. அயல்நாட்டுப் புத்தகத்தைப் பார்ப்பது போன்ற ஒரு நிறைவு! பரிசளிக்கப் பொருத்தமான நூல்.

**சான்றோர் சிந்தனைகள், வானதி திருநாவுக்கரசு, பக். 126, ரூ. 20/- வானதி பதிப்பகம், தீனதயாளன் தெரு, சென்னை – 17.**


எழுத்தாளராகவும் சிறந்த குழந்தைப் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்த திருநாவுக்கரசு, வானதி பதிப்பகத்தைத் தொடங்கி பிரபலமான எழுத்தாளர்களின் படைப்புகளைப் புத்தகமாக்கி வெளியிடுவதிலேயே முழுமூச்சுடன் ஈடுபட்டவர். வானதி - வெள்ளி விழாவின் போது தொடக்க காலத்தில் தான் படைத்த சில சிறுவர் கதைகளைப் புத்தகமாக வெளியிட்டதுடன் சரி. இப்பொழுதுதான் மீண்டும் தனது படைப்புகளை வெளியிட முயற்சி எடுத்திருக்கிறார். இது நல்ல தொடக்கம். இப்பொழுது அவர் வெளியிட்டிருப்பது ஓர் அருமையான தொகுப்பு நூல். எமர்சன், கதே, கன்ஃபூசியஸ், சாக்ரடீஸ், டால்ஸ்டாய், நெப்போலியன் போன்றவர்களின் பொன்மொழிகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார். பேச்சாளர்களுக்கும், கட்டுரையாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் பெரிதும் பயன்படும் தொகுப்பு.

**உங்கள் நூலகம் பகுதிக்கு பொது நூல்களும், அறிவியல் நூல்களும், சிறுவர்களுக்கான நூல்களும் மட்டுமே ஏற்கப்படும். நூல்களின் இரு பிரதிகளை ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 97, என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.**



எலிக்குஞ்சு பிறந்து 8 அல்லது 10 நாட்களுக்குள் பற்கள் முளைக்கத் தொடங்கிவிடுகின்றன. ஒரு மாதத்திற்கு 3 செ.மீ. வீதத்தில் வளர்கின்றன. எலி எதையும் கொறிக்காமல், பற்களுக்கு வேலை தராமல் இருந்தால், ஒவ்வொரு பல்லும் நாளடைவில் 70 செ.மீ. முதல் 100 செ.மீ. நீளம் கூட வளர்ந்துவிடும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.


யானைக்கு அதன் ஆயுட்காலத்தில், குறைந்தது 4 தடவைகளாவது பற்கள் விழுந்து முளைக்கின்றன!



தாவரங்களை மட்டுமே உண்டு வாழும், ஆடு, மாடு, மான் போன்ற விலங்குகளுக்குப் பற்கள் சொத்தை ஆவதில்லை! காரணம், தாவரங்களில் உள்ள குளோரோபில் என்னும் பச்சையம், பற்களுக்கு உறுதியளிக்கிறது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.



முயலுக்கு, நீண்ட, கூர்மையான வெட்டுப் பற்கள், மேல்தாடையில் இரண்டும், கீழ்த்தாடையில் இரண்டும் இருக்கின்றன. தாடைகளில் ஆழமாக வேரூன்றியவை. முயலின் இந்த வெட்டுப் பற்கள், தேயத் தேய வளர்ந்து கொண்டே இருக்கும்!




காட்டுவிலங்குகளை வேட்டையாடும் புலி, தன் கோரைப்பல் ஒன்றை இழந்தால்கூட, தன் உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளும். அந்தப் புலி, காட்டுவிலங்குகளை விட்டுவிட்டு, மனிதனையும் வீட்டுப் பிராணிகளையும் தாக்கத் தொடங்கிவிடும்.




பீவர் என்னும் பிராணியின் பற்கள் உளி போன்று உறுதியானவை. அது அந்தப் பற்களைப் பயன்படுத்தி ஏராளமான மரங்களைத் துண்டு போட்டுவிடும். அந்த மரங்களைக் கொண்டு நீர் நிலைகளில் அணை போட்டு அதில் தன் இருப்பிடத்தை அமைத்துக் கொள்ளும்.







உலகிலேயே மிகப் பெரிய பாலூட்டி நீலத் திமிங்கிலம். எடை சுமார் 150 டன். ஆனால், அதற்குப் பற்களே கிடையாது! ஆனால், அது தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போது பற்கள் உண்டு. குட்டியாக வெளியே வந்ததும் பற்கள் மறைந்து விடுகின்றன!



முதலைக்குச் சுமார் 68 பற்கள் உள்ளன. ஆனால் அந்தப் பற்கள் உணவை அரைக்கப் பயன் படுவதில்லை. இரையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளவே பயன்படுகின்றன. விழுங்கப்பட்ட இரை, அதன் வயிற்றுக்குள் தான் அரைக்கப் படுகிறது!





கடல் ஆமைகளுக்குப் பற்கள் வாயில் இல்லை; உணவுக் குழலில் அமைந்துள்ளன. பற்கள், கூர்மையாக உள் நோக்கி வளைந்து இருப்பதால், உயிருடன் ஆமையின் வாய்க்குள் சென்ற இரை, திரும்பி வெளியே வர முடியாது.




பாம்பின் விஷப் பல்லின் நடுவில் துவாரம் இருக்கிறது. பாம்பு கொத்தும்போது, விஷப் பற்களின் அடியில் உள்ள விஷப் பையிலிருந்து, விஷம் பற்களின் துவாரத்தின் வழியே செலுத்தப் படுகிறது.

தவளைக்கு மேல் தாடையில் மட்டுமே பற்கள் உள்ளன. கீழ்த்தாடையில் பற்கள் இல்லை!







சுறா மீனுக்கு, ஒரு பல் விழுந்தால், விழுந்த இடத்தில் வேறொரு பல் முளைத்து விடும்! இப்படி அதன் ஆயுள் முழுவதும் ஏராளமான பற்கள் முளைத்துக் கொண்டே யிருக்கும்! இதனால் சுறாவின் முதுமையான காலத்திலும் எதிரிகளை எதிர்த்துப் போராட முடியும்!



மிகவும் பயங்கரமான பல் அமைப்பு கொண்டது, தென் அமெரிக்காவில் உள்ள 'பிரான்ஹா' என்னும் மீன். அதன் பற்கள் கூர்மையாகவும், உறுதியாகவும், ரம்பம் போன்றும் உள்ளன. செவ்விந்தியர்கள், பற்களுடன் கூடிய அதன் தாடையைக் கத்தி போல் பயன் படுத்துகின்றனர்!




கார்ப் என்னும் கெண்டை மீனுக்கு, வாயில் பற்கள் கிடையாது. அதன் தொண்டையில் தான் பற்கள் இருக்கின்றன. தொண்டையில் தான் அதன் இரை அரைத்துப் பக்குவப் படுத்தப் படுகிறது.



ஆஸ்திரேலியாவில் உள்ள கிளி மீனின் வாயில் இரண்டு செட் பல்வரிசை உண்டு. ஒரு வரிசை வாயிலும், மற்றொரு வரிசை தொண்டையிலும் இருக்கின்றன.



பாலைவனத்தில் உள்ள 'டிராஞ்சலா' சிலந்தியின் வாயில், நல்லபாம்புக்கு இருப்பது போல் இரண்டு விஷப்பற்கள் இருக்கின்றன. அந்தப் பற்களின் அடியில் விஷப்பை உள்ளது. அந்தப் பற்களின் வழியே விஷத்தைச் செலுத்தி, இரையைச் செயல் இழக்கச் செய்கிறது.



பறவைகளுக்குப் பற்கள் இருப்பதில்லை. ஆனால், 15 கோடி ஆண்டுகளுக்கு முன் உலகில் தோன்றிய முதல் பறவையான 'ஆர்க்கியாப் டெரிக்ஸ்'க்குப் பற்கள் இருந்தன என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

# தாய்க்கா தெரியாது?

கண்ணன் வீட்டுக் கோழிக் குஞ்சுகளில் ஒன்றைக் காணவில்லை.

கண்ணனின் அம்மா, தன் வீட்டு கறுப்புப் பெட்டையை அடைகாக்க வைத்த போது அது போட்டிருந்த முட்டைகளுடன் அடுத்த ஊரில் உள்ள கோழிப் பண்ணையிலிருந்து இரண்டு வெள்ளைக் கோழி முட்டைகளை வாங்கி வந்து வைத்தாள். குஞ்சுகள் வெளிவந்த போது, அந்த இரண்டு முட்டைகளில் ஒன்றுதான் பொரிந்து இருந்தது.

அழகான வெள்ளைக் குஞ்சு. மற்ற ஆறும் கறுப்பு. அம்மாவுக்கு அந்த வெள்ளை மீது கொள்ளை ஆசை.

அன்று மதியம் - இரை போடுவதற்காகக் கோழியைக் கூப்பிட்ட போது, ஆறு குஞ்சுகள்தான் இருந்தன. அந்த வெள்ளையைக் காணவில்லை. ஒரு மாதக் குஞ்சு. மற்றவைகளைக் காட்டிலும் வெள்ளை சற்றுப் பெரிதாகவே இருந்தது. பருந்து தூக்கியதாகவும் தெரியவில்லை.

சுற்றிலும் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை.

மறுநாள் மாலை -

கண்ணனின் வகுப்புத் தோழன் பாலு வந்தான். அவனிடம் தன் வீட்டு கோழிக் குஞ்சு காணாமற் போனது பற்றிக் கண்ணன் கூறினான்.

''எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் நாகம்மா வீட்டில் ஒரு வெள்ளைக் குஞ்சு கூடையால் மூடி இருக்கிறது. இரை போடும் போது பார்த்தேன்'' என்றான் பாலு.

கண்ணனின் அம்மா, அந்தக் குஞ்சைப் பார்த்து வருவதற்காக அப்போதே புறப்பட்டு விட்டாள்.

அந்த வீட்டை அடைந்த கண்ணனின் அம்மா, ''நாகம்மா! என் வீட்டு வெள்ளைக் கோழிக் குஞ்சு காணாமற் போய் விட்டது. அது இந்தப் பக்கம் வந்ததா?'' என்று கேட்டாள்.

''இல்லையே'' என்றாள் நாகம்மா.

அந்த வீட்டுத் திண்ணையில் ஒரு கூடை கவிழ்த்து இருந்தது.

''கூடைக்குள் என்ன?'' என்று கேட்டாள் கண்ணனின் அம்மா.

''என் வீட்டுக் கோழி, ஒன்பது குஞ்சுகள் பொரித்தது. அத்தனையும் வெள்ளைக் குஞ்சுகள். நேற்று ஒரு குஞ்சு மயங்கி மயங்கி நின்று கொண்டிருந்தது. அதைத்தான் மூடி வைத்திருக்கிறேன்'' என்ற நாகம்மாள், ''ம்பா... ம்பா...'' என்று கூப்பிட்டாள்.

வீட்டின் பின்கட்டிலிருந்து அந்த வீட்டுக் கோழி, எட்டுக் குஞ்சுகளுடன் ஓடி வந்தது. அத்தனையும் வெள்ளைக் குஞ்சுகள்.

''என் வீட்டுக் குஞ்சு என்றால் எனக்கு அடையாளம் தெரியும். பார்த்து விட்டுப் போகிறேன்'' என்ற கண்ணனின் அம்மா, நாகம்மாவின் பதிலுக்குக் காத்திராமல் அந்தக் கூடையைத் திறந்தாள்.

குஞ்சு வெளியே வந்தது.

''ஆ! கிளி மூக்கு. இது என் குஞ்சுதான்!'' என்றாள் கண்ணனின் அம்மா.

''அடியே...! என் வீடு தேடி வந்து என்னையே திருடி என்கிறாயா?'' என்று கூச்சலிட்டாள் நாகம்மாள்.

இருவருக்கும் வாய்ச் சண்டை மூண்டு விட்டது.

கூச்சலைக் கேட்ட தெருக்காரர்கள் கூடி விட்டார்கள்.

எஸ். புலேந்திரன்



ஒரு பெரியவர் முன்னால் வந்து, ''சண்டையை நிறுத்துங்கள். இரவு பஞ்சாயத்துக் கூட்டத்தில் விசாரித்து, அந்தக் குஞ்சு பற்றி தீர்ப்பு அளிக்கிறோம்'' என்றார்.

அங்கே வந்த கண்ணன், ''தாத்தா! இந்த வழக்கை இரவில் விசாரித்தால் சரியான தீர்ப்பு அளிக்க முடியாது. பகலில் தான் விசாரிக்க வேண்டும்'' என்றான்.

''சரி. கூட்டத்தை நாளை காலையில் வைத்துக் கொண்டால் போச்சு'' என்றார் பெரியவர்.

அடுத்த நாள் காலை -

பஞ்சாயத்துக் கூட்டம் கூடியது.

''நாகம்மாள் கூடையால் மூடி வைத்திருப்பது என் கோழிக் குஞ்சுதான்'' என்றாள் கண்ணனின் அம்மா.

''இல்லவே இல்லை. அவள் என் மீது வீண் பழி சுமத்துறொள். அவள் கோழிக் குஞ்சுகள் கறுப்பு. என் கோழிக் குஞ்சுகள் வெள்ளை. கூப்பிட்டுப் பாருங்கள்'' என்றாள் நாகம்மாள்.

பஞ்சாயத்தார் இரண்டு கோழிகளையும், குஞ்சுகளையும் பார்த்தார்கள்.

நாகம்மாள் சொல்லியது சரிதான்.

ஆனால் கண்ணனின் அம்மா, ''வெள் மூக்கு அடையாளம். அது என் குஞ்சுதான்'' என்றாள்.



பஞ்சாயத்தார், எவர் பக்கம் தீர்ப்புச் சொல்வது, எப்படிச் சொல்வது என்று புரியாமல் குழம்பினார்கள்.

அப்போது அந்தப் பெரியவர், ''இந்த வழக்கை பகலில் விசாரிக்க வேண்டாம் என்று சொல்லியது கண்ணன்தான். அவன் கூர்மையான அறிவுடையவன். ஆகையால், இந்த வழக்கில் அவனையே தீர்ப்பு அளிக்கச் சொல்லலாம்'' என்றார்.



பெரியவரின் கருத்தைக் கூடியிருந்தோர் ஏற்றுக் கொண்டனர். கண்ணன், கூட்டத்தின் நடுவில் அழைக்கப்பட்டான். நாகம்மாவைப் பார்த்து, ''பெரியம்மா! கூடைக்குள் இருக்கும் அந்தக் குஞ்சைக் கொண்டு வாருங்கள்'' என்றான்.

குஞ்சு கொண்டு வரப்பட்டது. அதை நாகம்மாள் வீட்டுக் கோழியின் அருகில் விட்டான். அந்தக் கோழியை அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது குஞ்சு. அந்தக் கோழியோ, தன் அருகில் நிற்கும் வெள்ளைக் குஞ்சுகளைப் பார்த்தது. கொண்டு வந்து விடப்பட்ட வெள்ளைக் குஞ்சையும் பார்த்தது. திடீரென்று ஓடி அந்தக் குஞ்சைக் கொத்தியது. அந்தக் கோழி தன்னுடன் அந்தக் குஞ்சை சேர்த்துக் கொள்ளவில்லை!

பக்கத்தில் நின்றவர் அந்தக் குஞ்சைப் பிடித்துக் கொண்டார்.

அடுத்து அந்தக் குஞ்சை தன் வீட்டுக் கோழியிடம் விடச் சொன்னான், கண்ணன்.

நாகம்மாள் வீட்டுக் கோழியைப் போலவே கண்ணன் வீட்டுக் கோழியும் தன் குஞ்சுகளைப் பார்த்தது. கொண்டு வந்து விடப்பட்ட வெள்ளைக் குஞ்சையும் பார்த்தது. சட்டென்று ஓடி அந்தக் குஞ்சை அணைத்துக் கொண்டு, ''கொக்.. கொக்...'' என்றது.

கறுப்பாக இருந்தாலும், வெள்ளையாக இருந்தாலும் அது பொரித்த குஞ்சை அதற்கு அடையாளம் தெரிந்து விட்டது!

கூட்டத்தில் இருந்த ஒருவர், அந்தக் குஞ்சைப் பிடிக்கப் போனார். அதைப் பார்த்த கோழி, அவர் மீது பறந்து விழுந்து கொத்தியது. பிறகு, தன் குஞ்சுகளை அழைத்துக் கொண்டு ''கொக்.. கொக்...'' என்று இரை தேடி புறப்பட்டது. அந்த வெள்ளைக் குஞ்சு, தாயின் அரவணைப்பில் மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருந்தது.



கூட்டத்தினர் வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.

''என்னை மன்னித்து விடுங்கள். அந்தக் கோழிக்



# யார் கட்டினார்கள்?

## - போட்டி முடிவு

இந்தப் போட்டியில் எதிர் பார்த்த அளவுக்கு வாசகர்கள் ஆர்வம் காட்டவில்லை. இவ்வளவிற்கும் இந்த போட்டி மிக எளிதாகவே அமைக்கப்பட்டிருந்தது. கலந்து கொண்டவர்களில் கூட மூன்று பேர் மட்டுமே சரியான விடையை எழுதியனுப்பியிருந்தார்கள்.

**சரியான விடை:**

1. அமிர்தசரஸ் பொற்கோயில்
- குரு ராமதாஸ்.
2. தாஜ்மஹால்
- முகலாய மன்னர் ஷாஜஹான்.
3. ஜந்திர் மந்திர்
- ஜெய்பூர் மன்னர் ஜெய்சிங்
4. தஞ்சைப் பெரிய கோயில்
- சோழ மன்னன் இராஜராஜ சோழன்
5. திருமலை நாயக்கர் மஹால்
- மதுரை மன்னன் திருமலை நாயக்கர்
6. சாஞ்சி ஸ்தூபி
- மன்னர் அசோகர்
7. மைசூர் பிருந்தாவனம்
- சர். விஸ்வேஸ்வரையா.

முதல் பரிசாக ரூ. முப்பது பரிசு பெறுவோர்:

1. அ. விஜயபாஸ்கர், கடலூர்.
2. ஜி. புவனேஸ்வரி, அரக்கோணம்.
3. வி.ஆர். ஹரிணி, சென்னை - 63.

பரிசு பெற்ற மூவருக்கும் பல்லாயிரக் கணக்கான கோகுலம் வாசகர்கள் சார்பில் பாராட்டுகள்.

குஞ்சு பார்க்க மிகவும் அழகாக இருந்தது. அது தன் தாயோடும் மற்ற குஞ்சுகளோடும் எங்கள் வீட்டுப் பக்கம் அடிக்கடி வந்து மேயும். அதை பார்க்கும் போதெல்லாம் அந்தக் குஞ்சை நாம் ஏன் எடுத்துக் கொண்டு விடக் கூடாது என்ற ஆசை தோன்றும். அதற்கு ஏற்றாற்போல் அக்கம் பக்கத்திலும் அன்றைக்கு யாருமே இல்லை. இது தான் நம்முடைய ஆசையைத் தீர்த்துக் கொள்ள நல்ல சமயம் என்று முடிவு செய்தேன். அதோடு கூட எங்கள் வீட்டுக் கோழிக் குஞ்சுகளும் வெள்ளையாக இருந்ததால் அவ்வளவு சீக்கிரத்தில் என்னுடைய திருட்டை யாராலும் கண்டு பிடித்துவிட முடியாது என்று நான் உறுதியாக நம்பிக் கொண்டு அந்தக் கோழிக் குஞ்சைத் திருடிக் கொண்டேன். ஆனால் என் வீட்டுக் கோழி இந்த புதிய கோழிக் குஞ்சை தன் குஞ்சுகளோடு சேர்த்துக் கொள்ள மறுத்து புதிய பிரச்னையை உண்டாக்கியது. புதிய குஞ்சை கொத்திக் கொத்தி விரட்டியது. அந்த புதிய குஞ்சும் என் வீட்டுக் கோழியோடு ஒட்டிக் கொள்ள மறுத்தது. இதை என் வீட்டுக் கோழியிடமிருந்து காப்பாற்றுவதே எனக்குப் பெரிய வேலையாக இருந்தது. ஏன் டாப்பா இந்தக் காரியத்தைச் செய்தோம் என்று வருந்தினேன். ஒருவருக்கும் தெரியாமல் இந்த கோழிக் குஞ்சை மறுபடியும் கண்ணனின் வீட்டிலேயே கொண்டு போய் விட்டுவிடுவது என்று நான் முடிவு செய்திருந்தேன். அதற்குள் கண்ணனின் அம்மாவே தேடிக் கொண்டு வந்து விட்டாள். அப்பொழுதுதாவது நான் கௌரவமாக ஒப்புக் கொண்டு கொடுத்திருக்கலாம். தன்மானம் தடுத்து விட்டது. கடைசியில் கோழியின் தாய்ப்பாசமே என்னுடைய திருட்டை அம்பலபடுத்த காரணமாக இருந்து விட்டது. கோழி அறியாத குஞ்சா என்று பெரியோர்கள் கூறுவது எவ்வளவு உண்மை! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று தன் குற்றத்தை ஒப்புக் கொண்டாள் நாகம்மாள்.

கூடியிருந்தவர்கள் கண்ணனின் அறிவைப் பாராட்டிப் புகழ்ந்தனர்.



விட்டுக் கொடுக்காமல்
ஒட்டிக் கொள்ளும்
அற்புதமான பசை வெமிக்கால்
பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பொம்மை வீடு கட்டிடுவீர்.
ஃபர்னிச்சர்கள் போட்டிடுவீர். கைக்கடக்கமாய் மெத்தெனப்
பஞ்சடைத்த மிருக பொம்மைகள், பயமுறுத்தும் முகமூடிகள்,
மரப் பாச்சிகள்... மரம், காகிதம், கார்ட்போர்டு, துணிகள்
இவற்றின் துணையுடனே...
உங்கள் கற்பனையே வேடிக்கைக்கு எல்லை! உங்கள் ஓய்வு
வேளையை உல்லாசமாய்க் கழித்திடச் சிறந்த வழி.
VAMICOL
ஆர்ட் அண்டு கிராஃப்ட் அட்ஹெஸிவ்
VAMICOL
ART AND CRAFT ADHESI
VAMICOL
வேம் ஆர்கானிக்
கெமிக்கல்ஸ் லிமிடெட்
மைகிலன் ஹௌஸ், 85, நேரு பிளேஸ், புது டில்லி-110 019.
React/198/92 Tam.



# பிருந்தாவனக் கதையரங்கம்

## கடை மடையர்!

சிவபதி என்ற ஊரில் சைவ மடம் ஒன்று இருந்தது. அம்மடத்திற்கு. சிலேடை சிங்கார வேலர் என்ற பெரியவர் ஒருவர் தலைவராக இருந்தார். அவர் நல்ல ஒழுக்கமும் சீலமும் உடையவராகவும் தமிழில் தேர்ந்த புலமை உடையவராகவும் அடுத்தவர் மனது புண்படாத வகையில் சிலேடையாகப் பேசும் திறமை கொண்டவராகவும் இருந்தார். அதனால், சிலேடை சிங்கார வேலர் என்று அவரை மக்களும் மற்றவர்களும் புகழ்ந்தனர். அவர் தன்னை நாடி வரும் அறிஞர்களையும், கலைஞர்களையும் புலவர் பெருமக்களையும் வரவேற்று நன்கு உபசரித்து அவர்களுடைய திறமையைக் கண்டு மகிழ்ந்து பரிசுகள் கொடுத்து மகிழ்வார்.



ஒரு சமயம் அவரைப் புலவர் ஒருவர் காண வந்தார். அரண்மனைக் காவலரிடம் புலவர் தாம் 'கடைமடை' என்ற ஊரிலிருந்து வருவதாகவும், தலைவர் அவர்களைக் காண விரும்புவதாகவும், அதற்கான அனுமதியைப் பெற்றுத் தருமாறும் கேட்டுக் கொண்டார். காவலரும் உள்ளே சென்று, தலைவரிடம் புலவர் கூறிய விவரங்களைக் கூறி, அனுமதியும் பெற்று, புலவரை உள்ளே அனுப்பி வைத்தார்.

புலவர் அவைக்குள் பிரவேசித்தவுடன் தலைவர் தமது இருக்கையை விட்டெழுந்து இன் முகத்தோடு 'கடைமடையர்' அவர்களே! வருக! வருக! தங்கள் வரவு நல்வரவாகுக'' எனக் கூறி வரவேற்றார்.

புலவரும் திறமையில் குறைந்தவர் அல்லவே? அதனால் அவரும் கைகூப்பி வணங்கி '''மடத்தலைவர்' அவர்களே! வணக்கம், வணக்கம். நீவீர் பல்லாண்டு வாழ்க. உமது புகழ் என்றென்றும் வாழ்க! வாழ்க!'' எனக் கூறியவுடன் தலைவரும் அவையில் உள்ள எல்லாப்

பெரியவர்களும் மகிழ்ச்சியால் கரஒலி எழுப்பி இன்புற்றனர்.

- கே.வி. மணி, குத்தாலம்.

## முட்டாள் ராஜா

**த**ன் ஆட்சியின் கீழ் இருக்கும் மக்களை நேரில் சந்திக்க விரும்பினார் முட்டாள் ராஜா ஒருவர். மாறுவேடத்தில் சென்று மக்கள் தன்னைப் பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிய எண்ணித் தெரு வழியாக நடந்து வந்தார். ஒரு வீட்டின் வழியாக வரும் போது, அந்த வீட்டின் நாய் ராஜாவைக் கடித்து விட்டது. எல்லோரும் ஓடி வந்து



பார்த்தனர். ராஜா என்பது தெரிந்து விட்டது. ராஜா அரண்மனைக்குச் சென்று வைத்தியம் செய்து கொண்டார், சிறிது நாட்கள் கழித்து ராஜா அதே தெருவின் வழியே வந்தார். அந்த வீட்டின் எதிரே வந்ததும், வீட்டில் உள்ளவரை அழைத்து ''அந்த நாய் எங்கே?'' என்று ராஜா கேட்டார்.

'தங்களைக் கடித்த நாயை உயிரோடு விடுவேனா? அதை அன்றே கொன்று விட்டேன்'' என்று பணிவோடு கூறினார் வீட்டுக்காரர்.

ராஜா அரண்மனைக்குத் திரும்பி இரண்டு காவலர்களை அழைத்தார். ''அந்த நாய்க்கு உரிமையாளன், நாயை எந்த விதத்தில் கொன்றானோ, அதே போல் அவனை விசாரித்துக் கொன்று விடுங்கள்'' என்று உத்தரவிட்டு அனுப்பினார்.

காவலர்கள் சென்று நாய்க்கு உரிமையாளரிடம் நடந்ததைக் கூறினார். ராஜாவின் முட்டாள் தனத்தை உணர்ந்த வீட்டுக்காரன், ''ராஜாவைக் கடித்த என்னுடைய நாயை, நான் வாலைப் பிடித்து ஓங்கி அடித்துக் கொன்றேன்'' என்று புத்திசாலித்தனமாகக் கூறினான். ராஜா அந்த புத்திசாலியை ஒன்றும் செய்ய முடியாது திகைத்தார்.

- எஸ். நாகராஜன், மேலப்பாதி.

## தவறுக்கு மருந்து

**ம**ணியன் பேருந்துக்காக் காத்திருந்தான். வழக்கம் போலவே இன்றும் கண்டக்டருக்கு டிமிக்கி கொடுத்துவிட்லாம் என்பது அவனுடைய திட்டம். பேருந்து வந்ததும் ஏறினான். சீட் கிடைத்தது. உட்கார்ந்து பாடப்புத்தகத்தை விரித்து வைத்து, படிப்பவனைப் போன்று பாவ்லா காட்டினான். பிறகு கண்டக்டரைப் பார்த்தபோது அவன் முகம் கோணலாகியது. இவர் புதிய



கண்டக்டர். பழைய கண்டக்டர் 'சீசன்' என்று சொன்னால் போதும். கண்டு கொள்ளவே மாட்டார். போய் விடுவார்.

''ஆனால் இன்று புதிய கண்டக்டர் வந்துள்ளாரே!'' என்ற யோசனையில் பாக்கெட்டைத் தொட்டான் ராஜா. பத்து பைசா கூட அவனிடம் இல்லை. கண்டக்டர் அவனை நெருங்கி, ''டிக்கெட்ஸ்'' என்றார். ''சீசன் உள்ளது!'' என்ற ஒரே பதிலைக் கூறினான் மணியன். அடுத்த பயணியிடமிருந்து பணம் வசூலிப்பதில் கவனம் செலுத்தி நகர்ந்தார் கண்டக்டர். மணியன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

அனைவருக்கும் டிக்கெட் கொடுத்த பின், மணியனை நெருங்கி வந்த கண்டக்டர் ''சீசனை எடுத்துக் காட்டுப்பா!'' என்றார். மணியனுக்கு ஒன்றும் புரியவில்லை! கை கால் ஓடவில்லை. அவனிடம் பணமும் இல்லை. ''உன்னைத்தான் தம்பி. சீசனை எடுன்னு சொன்னேன்?'' என்று ஒரு அதட்டு அதட்டினார் கண்டக்டர். அவ்வளவுதான் மணியன் மிரண்டு போய்விட்டான். 'பொல பொல' வெனக் கண்ணீர் சிந்தினான்.

''இந்தச் சின்ன வயசுல இப்படி ஏமாத்தறியே?'' - கை ஓங்கினார் கண்டக்டர்.

''இனிமேல இப்படி நடக்க மாட்டேன், என்னை மன்னிச்சிடுங்க சார்!'' என்றான் மணியன் பரிதாபமாக.

''அவனை ஒன்னும் செய்யாதீங்க. விட்டுடுங்க?'' என்ற குரல் பேருந்தின் பின்னாலிருந்து கேட்கவே, பயணிகள் அனைவரும் மணியன் உட்பட திரும்பிப் பார்த்தனர். பேருந்தின் பின் சீட்டிலிருந்து மணியனை நோக்கி நடந்து வந்தார் அவனுடைய தமிழாசிரியர்.

''என்ன மணியன், ஒரு பள்ளி மாணவன் இந்த மாதிரி இழிவான செயலைச் செய்யலாமா? இது மாணவர் சமுதாயத்துக்கே இழுக்கு ஆயிற்றே?'' என்றார் தமிழாசிரியர்.

''இனி இந்த மாதிரி செயலைச் செய்ய மாட்டேன் சார். இது உறுதி சார்!'' என்று விக்கி விக்கி அழுதான் மணி.

''பள்ளி வகுப்பிலே நீ செய்யும் குறும்புகள், தவறுகள், எல்லாம் எனக்குத் தெரியும். டிக்கெட் எடுக்காம பேருந்தில் பயணம் செய்யறதை எத்தனை பெருமையா நண்பர்களிடம் கூறிக்கிட்டே? இது எத்தனை கேவலம்? எத்தனை பெரிய குற்றம்? பேருந்தில் நீ டிக்கெட் வாங்க மாட்டேன்னு நல்லாத் தெரியும். அதனாலதான் உனக்கும் சேர்த்து நானே வாங்கிட்டேன்'' என்று பேருந்து பயணச் சீட்டை அவனிடம் கொடுத்தார்! ஆசிரியர்.

மணியன் அழுதே விட்டான்.

''நீ செய்யற தவறுக்கு தகுந்த மருந்து கொடுக்கலாம்னு காத்திருந்தேன். இப்போ சமயம் வந்தது. உன் கிட்ட சீசனைக் கேட்கச் சொல்லி கண்டக்டருக்கு, நான்தான் சொல்லி அனுப்பினேன்.''

மறுநாள் பயணச்சீட்டுக்கான காசைத் தமிழாசிரியரிடம் ஒப்படைத்து விட்டு அவரை வணங்கினான் மனம் திருந்திய மணியன்.

- பெரியகல்லப்பாடி பிரபா.

## ஓநாயின் விரதம்

கங்கை நதிக்கரையிலிருந்த ஒரு குன்றின் மேல் ஓர் ஓநாய் வசித்து



வந்தது. மழைக் காலத்தில் கங்கையின் வெள்ளப் பெருக்கு அக்குன்றைச் சூழ்ந்து கொண்டது. குன்றின் மேலிருந்த ஓநாய்க்கு இரை ஏதும் கிடைக்கவில்லை தண்ணீர் அலை அலையாக மேலே ஏறிக் கொண்டே இருந்தது. ஓநாய் சிந்தனை செய்தது.

இங்கு உணவும் இல்லை. அதைப் பெறுவதற்கான வழியும் புலப்படவில்லை. நீருக்கு நடுவில் இருக்கும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே, நான் சும்மா பட்டினி கிடப்பதைவிட, இதையே விரதமாக இருந்தால் புண்ணிமாவது கிடைக்கும்' என்று முடிவு செய்தது.

விரதம் இருக்கத் தீர்மானம் செய்த ஓநாய் தனியே அமர்ந்து ஜெபம் செய்யத் தொடங்கியது. ஓநாய் விரதம் இருப்பது தேவராஜனுக்குத் தெரிந்தது.

'இந்த ஓநாய் தானாக விரும்பி விரதம் இருக்கவில்லை. இரை கிடைக்காததால் பட்டினி கிடப்பதை விரதமாக இருந்து விடவே எண்ணியிருக்கிறது. இதன் மன உறுதியைச் சோதித்துப் பார்க்கலாம்' என்று நினைத்து ஒரு ஆட்டுக் குட்டியாக வடிவெடுத்து ஓநாய் தன்னைப் பார்க்கும்படி அதன் முன் சென்று நின்றார் தேவராஜன்.

ஆட்டுக்குட்டி கத்தியது. ஓநாயின் ஜெபம் கலைந்தது.

தனக்கு முன்பாக ஆட்டைப் பார்த்த ஓநாய், ''நான் இப்பொழுது ஆட்டுக் குட்டியை இரையாக்கிக் கொள்கிறேன். இன்னொரு நாள் விரதமிருந்து கொள்கிறேன்'' என்று முடிவு செய்து ஆட்டின் மீது பாய்ந்தது. ஆனால், ஆடு குதித்தோடிப் போய்த் தப்பி விட்டது. ஏமாற்றத்துடன் நின்று விட்டுத் திரும்பிய ஓநாய், ''நல்லவேளை. என்னுடைய விரதத்திற்குப் பங்கம் ஏற்படவில்லை நல்லதாகப் போயிற்று'' என்று எண்ணியவாறு மீண்டும் தனது இடத்தில் சென்றமர்ந்து ஜெபத்தைத் தொடர்ந்தது.

தேவராஜன் சிரித்துக் கொண்டே தேவலோகம் கிளம்பினார்.

– ஆ. முருகன், சங்கராபுரம்.


# LEARN ART BY POST

## தபால் மூலம் ஓவியப்பயிற்சி


மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு
ஒரு வருட பாடங்கள், பொழுது போனதே தெரியவில்லை. பயனுள்ள பயிற்சி, எவ்வளவு விஷயங்கள், ஆனால் பயிற்சி முடிந்துவிட்டதே என வருத்தம், செமபோர் சார், இதற்கு மேல் பயிற்சி பெற ஏதாவது பாடங்கள் உண்டா, உடனே தெரியப்படுத்துங்கள்.

by Ex-Student
**V. Suryanarayana Bhat**
Hithlumane Near DP Temple
Uppunda, Karnataka


ஆசிரியருக்கு
ஓவியக்கலையை மிக அற்புதமான, எளிமையான முறையில் பயிற்றுவிக்கும் கலைக்கூடம். "A.J. Art Course" என்பதை என் சொந்த அனுபவத்தில் நான் அறிந்தேன். ஆசிரியரின் அணுகுமுறை என்னை ஆச்சரியப்படவைத்தது.


By Ex-Student
**V. Ramasubramanian**
Assistant Manager,
Indian Overseas Bank,
Vellore - 6.

விபரங்களுக்கு
ரூ 2/- தபால் தலை அனுப்பவும்



A.J. ART COURSE
No.1, 6th Main Road, Dhandeeswaram,
Velachery, Madras 600 042.


கருத்து
ஆர்.சி.மதிராஜ்



''இவைகளின் உடலில் உள்ள கோடுகள், கறுப்புக் கோடுகளா, வெள்ளைக் கோடுகளா?''
''முடிவுகாண இயலாது விஞ்ஞானி களெல்லாம் திணறிக் கொண்டிருக்கும் ஒரு கருத்தை நீங்கள் எத்தனை எளிதாகக் கேட்கிறீர்கள் கிரிஸ்தாபர்!''

# வரிக்குதிரை கறுப்புக் கோடா, வெள்ளைக் கோடா?

ஜீப் நின்றது.

''இறங்குங்கள் இதுதான் எங்கள் ஜீப்ரா பண்ணை தொடங்குமிடம்,'' என்றார் கேப்ரியல். பின்பக்கத்தில் இருந்த பாப்லாவும் கிரிஸ்தாபரும் பைனாகுலருடன் கீழே இறங்கினர்.

ஜீப் வந்து நின்ற சத்தத்தைக் கேட்டதும் கட்டடத்திற்குள் இருந்து ஓடி வந்த காக்கிச் சட்டைப் பணியாள் ஒருவன், கேப்ரியலை வணங்கினான்.

பதில் வணக்கம் கூறிய கேப்ரியல், ''இவர்தான் இந்த ஜீப்ரா பண்ணையின் காப்பாளர் தங்காஸ்,'' என்று கூறியவர், ''இவர்கள் இருவரும் இந்தியாவில் சர்க்கஸ் கம்பெனி வைத்து நடத்தும் பாப்லாவும், கிரிஸ்தாபரும். வரிக் குதிரையை வைத்து ஏதாவது புதுமையான நிகழ்ச்சிகளைக் காட்ட முடியுமா என்பதை அறிந்து, அவைகளை விலைக்கு வாங்கிப் போக வந்திருக்கிறார்கள்'' என்றார்.

''மிக்க மகிழ்ச்சி, வாருங்கள். தேனீர் சாப்பிட்டு விட்டு பண்ணையைச்சுற்றிப் பார்க்கலாம்'' என்று அன்புடன் அழைத்தார் தங்காஸ். தேனீரையும் பிஸ்கட்டையும் ஒரு கை பார்த்து விட்டு நால்வரும் கிளம்பினர். பண்ணையின் நடுவே சவுக்குக் கட்டைகளால் கட்டப்பட்டிருந்த உயரமான பரணில் ஏறி வசதியாக அமர்ந்து கொண்டனர். ஆப்பிரிக்காவின் செழுமையையும், இயற்கையின் அழகையும் அங்கே காண முடிந்தது. எங்கும் பசுமை பசுமை! பசுமையைத் தவிர வேறு எதுவும் இல்லை!

பைனாகுலரில் நோட்டம் விட்ட தேங்காஸ், ''பாப்லா, கிரிஸ்தாபர், தெற்குக் கோடியில் கவனித்துப் பாருங்கள். பச்சைப் புல்வெளிகளுக்கு அப்பால் வரிக் குதிரைகள் எல்லாம் எப்படி வரிசையாக நிற்கின்றன! இந்தப் பண்ணையில் உள்ள எல்லா வரிக் குதிரைகளுமே அங்கு இருக்கின்றன என்று நினைக்கிறேன்,'' என்றார் மகிழ்ச்சியுடன்.


பாப்லாவும், கிரிஸ்தாபரும் பைனாகுலரில் பார்த்தனர். தங்காஸ் கூறியது உண்மைதான். ஏதோ இராணுவத்தினர் மரியாதை அணிவகுப்பு நடத்துவது போல், வரிசையாக வரிக் குதிரைகள் பொம்மைகளை நிறுத்தியது போல் நின்றன!

''என்ன தேங்காஸ் இது! நாங்கள் வரிக் குதிரைகளை வாங்க வரப் போகிறோம் என்பது உங்களுக்கு முன்பே தெரியுமா? இப்படி ஒரு அணிவகுப்பு மரியாதை தர எப்படி ஏற்பாடு செய்தீர்கள்?'' என்று வியப்புடன் கேட்டார் பாப்லா.

தேங்காஸ் பெரிதாகச் சிரித்தார்.

''நல்ல ஜோக் போங்கள். இவைகளெல்லாம் இப்படி ஒன்று திரண்டு வரிசைகலையாமல் நிற்பது உங்களுக்கு வரவேற்புத் தருவதற்காக

ரேவதி



அல்ல. தங்கள் உடம்பை தூசு தும்பு இல்லாது பளபளப்பாக வைத்துக் கொள்ள. இவை என்ன செய்யப் போகின்றன என்பதைப் பாருங்கள். புரியும்.''

வரிசை கலையாது நின்ற வரிக் குதிரைகள் தலையைத் திருப்பி பக்கத்தில் இருந்த தங்கள் நண்பனின் கழுத்தை நக்கிக் கொடுத்தன. பற்களால் இழுத்துத் தேய்த்துக் கொடுத்தன. ஒருமுறை இப்படி வலது பக்கம் செய்து முடித்ததும், இடதுபக்கம் செய்தன!

''இந்த ஏற்பாடு, கழுத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள இயற்கை ஏற்படுத்தித் தந்திருக்கும் பழக்கம். இதற்குப் பெயர் குரூமிங் (GROOMING) இந்தக் காட்சியைக் காண வேண்டும் என்று விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் நாட்கணக்கில் இங்கே வந்து காத்திருப்பார்கள். சிலருக்கு இது கிடைக்கும். பலருக்குக் கிடைக்காது. அப்படிப்பட்ட அதிசயமான காட்சி இப்பொழுது வந்தவுடன் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. நீங்கள் கொடுத்து வைத்தவர்கள்'' என்றார் தேங்காஸ்.

மகிழ்ச்சியுடன் சிரித்த கிரிஸ்தாபர், ''வரிக் குதிரையைப் பற்றி விவரமாகக் கூறுங்கள் தேங்காஸ்'' என்று கேட்டுக் கொண்டார்.

''இவை கழுதையின் குடும்பத்தைச் சேர்ந்தவை. முழுக்க முழுக்க சைவம். ஒரு நாளுக்கு சுமார் ஒன்பது கிலோ தாவர உணவுப் பொருள் இவைகளுக்குத் தேவை. இங்கே பெரும்பாலும் புல், செடி, கொடிதான். அரைக்க ஏற்றபடி பற்கள் இருக்கும். இவற்றின் பற்கள், தேய்ந்து கொண்டே இருப்பதால், இவை ஆயுள் முழுவதும் வளர்ந்தபடி இருக்கும். இது இயற்கையின் கொடை.

இந்த வசதி இல்லையென்றால் இவை வெகு விரைவில் இறந்து விடும்.''

''இவைகளின் உடலில் உள்ள கோடுகள், கறுப்புக் கோடுகளா, வெள்ளைக் கோடுகளா?''

''முடிவுகாண இயலாது விஞ்ஞானிகளெல்லாம் திணறிக் கொண்டிருக்கும் ஒரு கருத்தை நீங்கள் எத்தனை எளிதாகக் கேட்கிறீர்கள் கிரிஸ்தாபர்!'' என்று சிரித்தார் தேங்காஸ்.

''ஆமாம், வெள்ளை உடலில் கறுப்புக் கோடுகளா, இல்லை கறுப்பு உடலில் வெள்ளைக் கோடுகளா என்பதை விலங்கியல் ஆராய்ச்சியாளர்களால் உறுதியாகக் கூற முடியவில்லை. இரண்டு கருத்துகளுக்கும் ஆதாரங்கள் இருக்கின்றன. இது இன்னமும் முடிவாகவில்லை'' என்றார் கேப்ரியல்.

''ஆமாம், ஒருநாளைக்கு சராசரி ஒன்பது கிலோ தாவர உணவு என்கிறீர்கள். செழிப்பான இடங்களில் இவை கிடைக்கும். வறண்ட பகுதிகளில் என்ன செய்யும்?''

''ஒட்டகம் எப்படித் தன் திமிலில் கொழுப்பைச் சேர்த்து வைத்துக் கொள்கிறதோ அப்படித்தான் இவையும் தங்கள் தோலில் சேர்த்து வைத்துக் கொள்கின்றன. தாவர உணவுக்குப் பற்றாக்குறை ஏற்படும் போது இதுதான் இவைகளைக் காக்கும்.''

''இராணுவ வீரர்கள் நடைபயிலும் போது லெப்ட் ரைட் போடுவார்களே... அது இந்த வரிக் குதிரைகள் நடக்கும் முறையில் இருந்து தோன்றியதுதான். இவை தங்கள் கால்களில் உள்ள மூன்றாவது குளம்பினாலேயே நடக்கின்றன. ஓடுகின்றன,'' என்றார் கேப்ரியல்.

''நாம் வரும் போது ஜீப்ரா உணவு வகை கிடைக்கும் என்று சில இடங்களில் அறிவிப்பைப் பார்த்தோமே... இவைகளின் இறைச்சி அத்தனை சுவையானதா?''

''இங்கே தூங்கும் நோய் என்று ஒரு கொடிய நோய் ஆப்பிரிக்காவில் உண்டு. இது ஒருவகை ஈக்களால் பரவும். இந்த நோய்க்கு இரையாகாது தப்பிக்கும் ஒரே உயிரினம் இந்த வரிக் குதிரைகள்தான். அதனால், இவற்றின் இறைச்சியைச் சாப்பிட்டால், இந்த நோய் தாக்காது என்று இங்கு மக்கள் நம்புகிறார்கள். இதன் இறைச்சி சுவையானது என்று யாருமே கூறி நான் இதுவரை கேட்டது இல்லை'' என்றார் தேங்காஸ்.

''ஆனால் இவைகளின் இறைச்சி என்றால், சிங்கங்களுக்கு மிகவும் விருப்பம். இந்த இனம் அழிந்து கொண்டு வருவதற்கு முக்கிய காரணம் சிங்கங்கள். புல்வெளிகளின் அழிவு. அதோடு இவைகளின் அழகான தோல். இவற்றின் தோலில் இருந்து பலவிதமான அலங்காரப் பொருள்களைத் தயாரிக்கிறார்கள்.''

''சிங்கம் இவைகளை விரும்பி வேட்டையாடும் என்றாலும், இவைகளின் பின்பக்கக் கால்களுக்கு அருகே வந்தால் சிங்கத்தின் முடிவு நிச்சயம். ஒரே உதையில் சிங்கத்தின் பற்களை இவை விழ வைத்து விடும். அத்தனை வலுவான உதை!''

''இந்த வரிக் கோடுகளால் இவைகளுக்கு ஏதாவது பயன் உண்டா?'' என்று கேட்டார் கிரிஸ்தாபர்.

''நீங்கள் அந்தக் கோடுகளையே

''எல்லோரும்
பயப்படற
பூ எது?''
'' 'குண்டு' - மல்லி!''



- கே. சோமசேகர்

## அறிவியல் உண்மைகள் :

★ வரிக் குதிரைகள் EQUIDAE குடும்பத்தைச் சேர்ந்தவை. குதிரையும் காட்டுக் கழுதையும் இதன் உறவினங்கள். இவைகளுக்கும் கூட தொடக்கக் காலத்தில் வரிகள் இருந்தன.

★ இவை சுத்த சைவம். தாவர உண்பிகள். பரந்த வெளியில் வாழ்பவை.

★ இதன் கோடுகள் கறுப்பா, வெளுப்பா என்பது இன்னமும் முடிவாகவில்லை. இவை பகைவர்களைக் குழப்பி விட உதவுகின்றன.

★ பிறந்த உடனேயே இவை ஓடத் தொடங்கி விடும்.

★ இவை ஆப்பிரிக்காவில் மட்டுமே வாழ்கின்றன.

★ தூங்கும் நோயைப் பரப்பும் ஈக்களின் சக்தி இதனிடம் பலிப்பதில்லை. இதனால், இவற்றின் இறைச்சியை உண்பது நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும் என்கிறார்கள். அறிவியல் அடிப்படையில் இது ஏற்கக்கூடியது அல்ல.

★ இதன் பற்கள் ஆயுள் முழுதும் வளர்ந்து கொண்டே இருக்கும். இப்படி ஒரு வசதி இல்லையேல் இவை புல்லை அரைத்துத் தின்ன முடியாது இந்த இனமே இறந்து மறைந்திருக்கும்.

★ ஆயுள் காலம் சராசரி 30 ஆண்டுகள். தாயின் வயிற்றில் 370 நாட்கள் கர்ப்ப காலம்.

★ அதிகக் கொழுப்பு, தோலுக் கடியில் சேமித்து வைக்கப்படுகிறது.

★ சிங்கத்திற்கு மிகவும் பிடித்தமான உணவு இது.


★ போக்குவரத்து குறியீடுகளுக்கு ஜீப்ரா அடையாளங்கள் பெரிதும் உதவுகின்றன.


பார்த்துக் கொண்டிருங்கள். தலை சுற்றும். இப்படிப்பட்ட ஒரு குழப்ப உணர்வை, வரிக் குதிரைகள் தங்களைத் தாக்கும் பகைவர்களின் மனத்தில் ஏற்படுத்தி, திகைக்க வைத்துத் தப்பி விடுகின்றன. இது போதாதா?''

''சரி, எங்கள் பிரச்னைக்கு வாருங்கள். வரிக் குதிரைகளை வாங்கிக் கொண்டு போனால் எங்கள் சர்க்கஸில் பழக்கி, ஏதாவது புதுமையான விளையாட்டுகளைக் காட்ட முடியுமா?''

''மன்னிக்க வேண்டும் நண்பரே. உங்களை ஏமாற்றி இரண்டொரு வரிக் குதிரைகளை நல்ல விலைக்கு உங்கள் தலையில் கட்டி விட நான் விரும்பவில்லை. குதிரைகளைப் போல் இவைகளைப் பழக்கவோ, வேடிக்கை காட்டவோ முடியாது. இவை முரட்டுக் குணம் மிக்கவை. கடிக்கும். முட்டித் தள்ளி வதைக்கும். இவைகளை எந்த வேலைக்கும் பயன்படுத்தவும் முடியாது'' என்றார் தேங்காஸ்.

நன்றி கூறிவிட்டுக் கிளம்பினர் பாப்லாவும், கிரிஸ்தாபரும்.






"மகா பண்டிதர் வரப் போகிறார்! மகா பண்டிதர் வரப் போகிறார்!" என்று ஊரார் பேசிக் கொண்டார்கள். இது சிறுவன் சேதாபதியின் காதிலும் விழுந்தது. அவன் ஓடிப் போய்த் தன் தந்தையைக் கேட்டான்.

"அப்பா, மகா பண்டிதர் வரப் போகிறாரா?"

"ஆமாம்!" என்றார் தந்தை.

"மகா பண்டிதர் என்றால் யார் அவர்?"

"டில்லியில் இருந்து வருகிறாராம்! டில்லி சக்கரவர்த்தியின் அவையில் உள்ள பெரும் புலவர்" என்று விளக்கினார் தந்தை.

"நம் அரசருக்குத் தெரியுமா அப்பா?"

"நம் அரசர் சிற்றரசர். டில்லியில் இருப்பவர் பேரரசர். பேரரசரின் அவையில் இருப்பவர் பெரியவர். பெரியவரின் வருகை நம் அரசருக்குத் தெரிந்தே இருக்கும்!"

"அது எப்படி அப்பா அவர் பெரியவராக இருக்க முடியும்? உங்களைப் போலப் பல கலைகள் கற்றவரா?"

"ஆம் மகனே!"

"எனக்கு என்னவோ அவர் மீது சந்தேகமாக இருக்கிறது."

"உனக்கு எல்லோர் மீதும் சந்தேகம் தான்" என்று சொல்லிச் சிரித்தார் தந்தை.

"அப்பா! அப்பா! மகா பண்டிதர் அரசவைக்கு வரும் போது நானும் வரட்டுமா?"

"பெரியவர்கள் உள்ள இடம். நம் அரசர் அங்கே வீற்றிருப்பார்."

"அரசர் இருந்தால் என்ன?"

"நீ சிறுவன். அங்கே நீ எதற்கு?"

"மகா பண்டிதரைப் பார்க்க வேண்டும். அவர் பேசுவதைக் கேட்க வேண்டும்!" என்று ஆர்வத்தோடு கேட்டான் சேதாபதி.

"ஆகட்டும் பார்க்கலாம்!" என்று சொல்லி விட்டுத் தந்தை வெளியே சென்றார்.

மருதநாடு டில்லிக்கு அடங்கிய நாடு. மருதநாட்டை அரசர் மதிவாணன் சிற்றரசராக ஆண்டு வந்தார்.

மன்னர் மதிவாணன் கல்வியில் வல்லவர். கலைகளில் ஆர்வம் நிரம்பியவர். கற்றவர்களை ஆதரிப்பவர். மகா பண்டிதரை வரவேற்பதில் ஆர்வமாக விளங்கினார்.

மருதநாட்டு அரசவைப் புலவரின் தலைவராக விளங்கியவர் மருக்கொழுந்து. மருக்கொழுந்துவின் மகன் தான் சிறுவன் சேதாபதி. மிகவும் அறிவுள்ளவன். எதையும் நுட்பமாக ஆராய்ந்து பார்ப்பான்.

அன்று மகா பண்டிதர் வந்தார். அரசவையில் அவருக்குச் சிறப்பான வரவேற்புக் கொடுக்க மன்னர் நல்ல ஏற்பாடுகளைச் செய்து இருந்தார். தலைமைப் புலவர் மருக்கொழுந்துக்குக் கடந்த இரண்டு நாளாகக் காய்ச்சல்.

ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

காய்ச்சல் கடுமையாக இருந்தது. அவரால் எழுந்து நடக்கவே முடிய வில்லை. படுத்த படுக்கையாக இருந் தார். இருந்தாலும் அரசர் தரும் வரவேற் பில் அவைப் புலவரான தான் கலந்து கொள்வது அவசியம் என்று கருதியதால் எப்படியும் போகத்தான் வேண்டும் என்று மெல்ல எழுந்தார். தம் மகனை யும் உடன் அழைத்துக் கொண்டு புறப் பட்டார்.

அரசவையில் மகா பண்டிதர் கம்பீர மாக வீற்றிருந்தார். அவருக்கு மன்னர் பெரிய வரவேற்பை அளித்திருந்தார். புலவர் மருக்கொழுந்து காய்ச்சலுடன் வாடிய முகத்தோடு இருந்தார்.

மன்னர், மகா பண்டிதருக்குப் புலவர் மருக்கொழுந்தை அறிமுகம் செய்து வைத்தார். மருக்கொழுந்தின் வாடிய முகத்தைப் பார்த்தார் மகாபண் டிதர்.

''சிங்கத்தின் முகத் தைப் பார்த்தே சிறு விலங்குகள் வாடிப் போகின்றன!'' என்று சொல்லிச் சிரித்தார். அவர் பேச்சில் இருந்த ஆணவம் மற்றவர் களுக்குப் புரிந்தது. புலவர் மருக் கொழுந்து பதில் ஏதும் கூறாது புன்முறுவ லோடு வீற்றிருந்தார்.

அவர் ஏதாவது பதில் சொல்வார் என்று மன்னர் எதிர் பார்த்தார். ஆனால் மருக்கொழுந்து அமை தியாக இருந்தார். மற்ற புலவர்களும் அமைதி யாக இருந்தனர். இதைப் பார்த்ததும் மகா பண்டிதர் மேலும் உற்சாகம் அடைந்தார்.


''நான் எங்கே போனாலும் இதே அமைதியைத் தான் காணுகிறேன். அமைதியாக இருந்து விடுவதும் ஒரு வகையில் புத்திசாலித்தனம்தான்'' என்று சொல்லிச் சிரித்தார்.

''மலர்களிலே ரோஜா மலர் எப் போதும் ராஜா மலர்! நான் ரோஜாவைப் போன்றவன்'' என்று பேசி விட்டு அவையில் உள்ள அனைவரையும் பார்த் தார் மகா பண்டிதர்.

''எனக்கு ரோஜா மலர் பிடிக்காது!'' என்று எழுந்து சொன்னான் சிறுவன் சீதா பதி. எல்லோரும் அவனையே வியப் புடன் பார்த்தனர். மன்னரும் பார்த்தார்.

''இந்தப் பொடியன் யார்?'' என்று கேட்டார் மகா பண்டிதர். ''அடி யேன் தொண்டருக்கெல்லாம் அடிப் பொடி'' என்றான் சீதாபதி.

''எந்தத் தொண்டருக்கு நீ அடிப் பொடி?'' என்று கேட்டார் பண்டிதர்.



''மகா பண்டிதரின் தொண்டர்களுக்கு எல்லாம் நான் அடிப் பொடி!''

இதைக் கேட்டதும் மகா பண்டிதர் மகிழ்ச்சி அடைந்து விட்டார்.

''வாழ்க! வாழ்க! பெரியவர்கள் அவைக்கு நீ வந்த காரணம் என்ன?'' என்று கேட்டார்.

''தங்களிடம் நல்லாசி பெறவே வந்தேன்'' என்றான் சிறுவன்.

''மகிழ்ச்சி! மகிழ்ச்சி! உனக்குத் தெரியாதது ஏதாவது இருந்தால் என்னிடம் கேள்! நன்றாக உனக்கு விளக்குவேன். என்னைப் போல் உனக்குச் சொல்லுகிறவர்கள் இந்த உலகத்தில் யாரும் இல்லை'' என்றார் மகா பண்டிதர்.

சிறுவன் கேட்டான், ''உங்களுக்குத் தெரிந்தது எது? தெரியாதது எது?'' இதைக் கேட்டதும் மகா பண்டிதர் சிரித்தார்.

''எனக்குத் தெரியாதது என்பது கூட உண்டா? எது எனக்குத் தெரியாது? எல்லாமே தெரியும்!'' என்று தலைநிமிர்ந்து சொன்னார்.

உடனே சீதாபதி கேட்டான். ''உங்கள் முதுகு உங்களுக்குத் தெரியுமா?''

இதைக் கேட்டதும் எல்லோரும் சிரித்தனர். மன்னரும் சிரித்தார். மகாராணியாரும் சிரித்தார். அரசவையில் இருந்த அத்தனை பேரும் சிரித்தனர். மகா பண்டிதரின் முகம் சுருங்கியது.



''என்னை இந்தச் சிறுவன் அவமானப் படுத்தி விட்டான். நான் இங்கிருந்து இப்போதே புறப்படுகிறேன்'' என்று கோபத்தால் குதித்தார் மகா பண்டிதர்.

''ஐயா, என்னை மன்னிக்க வேண்டும். நான் என் சந்தேகத்தைத்தான் கேட்டேன்'' என்றான் சீதாபதி.

''முதுகு யாருக்குத் தான் தெரியும்? என் ஆணவத்தைச் சரியாக அடக்கி விட்டாய். உன் துணிச்சலைப் பாராட்டுகிறேன்'' என்று கூறிச் சிறுவனுக்குத் தம் கழுத்தில் இருந்த முத்து மாலையைப் பரிசளித்தார் மகா பண்டிதர்.

அரசரும் பிறரும் சிறுவனைப் பாராட்டினர்.

ராம்குமார் அன்று அட்டகாசமாக விலை உயர்ந்த உடை அணிந்து வெளியில் சுற்றி வந்தான்.

மாதா கோயிலுக்கு அருகே அவனைப் பார்த்த ரோசி கேட்டாள், ''உனக்கு இன்னிக்குப் பிறந்தநாளா?''

''இல்லையே? ஏன் கேட்கிறாய்?'' தோளைக் குலுக்கினான் ராம்குமார்.

''புது டிரெஸ் போட்டிருக்கியே!''

''பிறந்த நாளுக்கு மட்டுந்தான் புது டிரெஸ் போடணுமா?'' - எதிர்க் கேள்வி கேட்டான் ராம்குமார்.

''அப்படி இல்லே. நான் என்னோட பிறந்த நாளுக்கோ இல்லே கிறிஸ்து மஸுக்கோதான் புது டிரெஸ் போடுவேன். அதனால கேட்டேன்.''

''விதவிதமா டிரெஸ் பண்றது ஒரு சிறந்த நாகரிகம்! உனக்கெங்கே இதெல்லாம் தெரியப் போகுது?'' - துடுக்காகப் பேசினான் ராம்குமார்.

பாவம்! பதில் சொல்லத் தெரியாத ரோசி பேசாமல் சென்று விட்டாள்.

கொஞ்ச தூரம் சென்றான் ராம்குமார். அவன் நண்பர்கள் அரவிந்தன், சார்லஸ், பாபு மூவரும் எதிரே வந்தனர்.



# நான் கேட்டேனா?

''டேய், ராம்குமார், புது டிரெஸ் போட்டு இருக்கியே! எங்களுக்கு ஐஸ்கிரீம் வாங்கித் தா!'' என்றான் பாபு.

''இல்லைன்னா விட மாட்டோம்'' - இது சார்லஸ் .



''இன்னிக்கு வகையா மாட்டிக்கிட்டே! ரூபா வெச்சிருப்பியே! எடு எடு'' - என்றான் அரவிந்தன்.

''பறக்காதீங்கடா. கண்டிப்பா வாங்கித் தரேன்! வாங்க!'' என்று சொல்லி அவர்களை ஐஸ்கிரீம் பார்லருக்கு அழைத்துச் சென்றான் ராம்குமார்.

எல்லோரும் கோன் ஐஸ்கிரீம் வாங்கி ரசித்துச் சாப்பிட்டனர். விரல்களில் வழிந்த ஐஸ்கிரீமை நக்கினான் பாபு.

இதைப் பார்த்த ராம்குமார், ''டேய் பாபு, மற்றவர்கள் முன்னால் உனக்கு நாகரிகமாகச் சாப்பிடக் கூடத் தெரியவில்லையே!'' என்றான் கிண்டலாக.

''சாப்பிடுவதே ஒரு கலை. பாயசத்தை நக்கிக் குடித்தால்தான் சுவை அதிகம். ஐஸ்கிரீமையும் நக்கிச் சாப்பிட்டால்தான் ருசி. நாகரிகம் என்ற பெயரில் அதை நான் இழக்கத் தயாராக இல்லை'' என்றான் பாபு.

வேணு சீனுவாசன்

தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று பெருமைப்பட்ட ராம்குமாரை பாபுவின் பதில் உசுப்பி விட்டது.

''ஸ்பூனால் சாப்பிடுவது மேல்நாட்டு நாகரிகம். கையால் சாப்பிடுவது நமது நாகரிகம். அவர்களைப் பார்த்துக் காப்பியடித்து இட்லி மிளகாய்ப் பொடியை ஸ்பூனால் சாப்பிட்டால் ருசிக்குமா?'' என்று தன் பங்குக்கு மேலும் உசுப்பி விட்டான் சார்லஸ்.

ராம்குமாரின் ஆத்திரம் அதிக மானது. அவன் ஏதோ சொல்ல வாயைத் திறந்தான். அதற்குள் அவர்கள் தோட் டத்தைக் கவனிக்கும் முருகன் அங்கே வந்தான். அவன் ராம்குமாரிடம், ''தம்பி, உங்களைத் தேடிக்கிட்டுத்தான் வந்தேன்'' என்றான்.

''எதுக்காக?'' - அலட்சியமாகக் கேட்டான் ராம்குமார்.

''எம் பேத்திக்கு இன்னிக்குப் பிறந்த நாள். வீட்டுல அதிரசம் செய்தோம். உங்களுக்குத்தான் இனிப்புப் பிடிக்கு மேன்னு நாலு கொண்டு வந்தேன்!'' என்று சொல்லிப் பாத்திரத்தை நீட்டி னான் முருகன்.

ஒரு தோட்டக்காரனிடம் இருந்து இனிப்பை வாங்கிக் கொள்வது மதிப் புக் குறைவான செயல் என்று நினைத் தான் ராம்குமார். வெறுப்பு முகத்தில் படர, ''இதெல்லாம் யாருக்கு வேண் டும்? எடுத்துக்கிட்டுப் போ! உங்கிட்டே நான் அதிரசம் கேட்டேனா? எனக்குப் பிடிக்காது!'' என்று முகத்தில் அறைவது போலச் சொன்னான்.

முருகனின் முகம் உடனே வாடியது. மௌனமாக நின்றான்.

''நாகரிகத்தைப் பற்றி வாய் கிழியப் பேசினாயே? எது நாகரிகம் என்று உனக்குத் தெரியலையே! இப்படி நீ முகத்திலடித்தது போல் பேசுவது தவறு ராம்குமார்'' என்றான் பாபு.


''வேண்டியவர்கள், அன்போடு விஷத்தைக் கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிடுவதுதான் நாகரிகம் என்கிறார் திருவள்ளுவர். இதை மறந்து விட் டாயே!'' என்றான் சார்லஸ்.

''புதிய உடைகளை அணிவதும், ஐஸ்கிரீம் சாப்பிடுவதும் மட்டுமே நாக ரிகமல்ல. மற்றவர் மனம் புண்படாமல் பேசுவதே உயர்ந்த நாகரிகம்'' என்றான் அரவிந்தன்.


''தன்னை சிலுவையில் அறைந்தவர் களைக்கூட மன்னித்து விடும்படி வேண் டினார் ஏசுபிரான். இதனால்தான் உல கமே அவரைக் கடவுளாக வணங்கு கிறது'' என்றாள் அங்கே வந்த ரோசி.

''என்னை மன்னிச்சிடு முருகா! தெரியாம பேசிட்டேன்'' என்று சொல் லிக் கொண்டே அதிரசங்களை வாங்கி எல்லோருக்கும் கொடுத்தான் ராம் குமார்.

''பரவாயில்லை தம்பி. தப்புன்னு தெரிஞ்சதும், பிடிவாதம் பிடிக்காம உடனே உன்னை மாத்திக்கிட்டியே, அதுவே போதும். நல்ல நண்பர்கள் இருந்தால் கெட்ட வழியில் போக மாட் டோம். இவங்கதான் உனக்கு பலம். இவங்களை விட்டு எப்போதும் பிரி யாதே'' என்றான் முருகன்.




தாத்தா நீ இறந்துட்டதாக டீச்சரிடம் சொல்லி இன்னிக்கு லீவ் போட்டுட்டேன்
அடப்பாவி... என்னோட பேரன் இறந்துட்டான்னு சொல்லி இன்னிக்கு நான் முதியோர் கல்விக்குப் போகாமல் லீவ் போட்டுட்டேனே!
ஏ.கே. ஆனந்தப்ரியா
நல்ல பாம்புகள் எல்லாம் ஏன் உண்ணாவிரதம் இருக்குது?
அதுங்க எடுக்கிற படங்களை யூ.டியூப்ல காண்பிக்க...
வலங்கைமான் நூர்தீன்
சிரிப்...
புதுசா ஒரு 'பஜ்ஜி' வியாபாரம் ஆரம்பிக்கலாமினு இருக்கேன்!
வியாபாரம் 'சூடு பிடிக்க' வாழ்த்துக்கள்!!
ஜோலார்புரம் வீரா
தம்பி, இந்த நோட்ஸ் வாங்கினா பாதி வேலையை செய்திடும்
அப்படின்னா இரண்டு குடுங்க
ஜூம்பு
ஏய் கங்கா உனக்கு பிடித்த விலங்கு எது?
'கங்காரு' தான்!
ஏ.கே. ஆனந்தப்ரியா



# சகோதரன்

ஒரு கோழி தினமும் ஆற்றங்கரைக்குச் சென்று தண்ணீர் குடிக்கும். கோழி தினம் வருவதையும் தண்ணீர் குடிப்பதையும் ஆற்றுக்குள்ளிருந்த முதலை கவனித்துக் கொண்டே இருந்தது. என்றைக்காவது ஒருநாள் இந்தக் கோழியைப் பிடித்துத் தின்று விட வேண்டும் என்று எண்ணியது முதலை.

ஒருநாள் வழக்கம் போல் தண்ணீர் குடிக்க வந்த கோழியை முதலை நெருங்கி வந்து பிடிக்க முயன்றது. அதைக் கவனித்து விட்ட கோழி, ''எனது அருமைச் சகோதரனே! என்னைத் தின்னாதே'' என்று கத்தத் தொடங்கியது!

உடனே முதலை அங்கிருந்து போய் விட்டது. ஆனாலும் கோழியைப் பிடித்துத் தின்ன வேண்டும் என்ற ஆசை மட்டும் முதலைக்கு நீங்கவில்லை. எனவே, மறுபடியும் ஒருநாள் பிடிக்க முயன்றது. அப்போதும் கோழி, ''சகோதரனே, என்னைக் கொல்லாதே!'' என்று முறையிட்டது.

விலகிச் சென்ற முதலை யோசித்தது. இரண்டு முறையும் கோழியைப் பிடிக்கச் சென்ற போது, ''சகோதரனே என்னைக் கொல்லாதே'' என்றதே இந்தப் பொல்லாத கோழி! நான் எப்படி இந்தக் கோழிக்குச் சகோதரன் ஆவேன்? நான் தண்ணீருக்குள் வசிக்கிறேன். கோழியோ நிலத்தில் வசிக்கிறது. நான் எப்படி அதற்குச் சகோதரன் ஆக முடியும் என்று யோசித்தது.


தனது சந்தேகத்தை முதலை ஆமையிடம் சொன்னது. அதைக் கேட்ட ஆமை, ''இது கூட உனக்குத் தெரியலையே! நீயும் முட்டையிட்டுத்தான் குஞ்சு பொரிக்கிறாய். அந்தக் கோழியும் முட்டையிட்டுத்தான் குஞ்சு பொரிக்கிறது. அதனால் நீ கோழியின் சகோதரன் தானே? கோழி சொன்னதிலும் உண்மை இருக்கிறது! புத்திசாலிக் கோழி'' என்று புகழ்ந்தது ஆமை.

ஆமையின் விளக்கத்தைக் கேட்ட முதலை, ''புரிகிறது. புரிகிறது. நான் கோழியோட சகோதரன்தான்'' என்று ஒப்புக் கொண்டது.

அன்று முதல் கோழியை முதலை சகோதரனாக எண்ணி அதைத் தின்னும் ஆசையை மறந்து விட்டது!

– த.அ.மு.

# சொல்லாதேடா...



வருகைப் பதிவேட்டை ஆசிரியர் படித்தார்.

ரவி, 'உள்ளேன் ஐயா' என்றான்.

ரவியை உற்றுப் பார்த்தார் ஆசிரியர். அவன் தலை குனிந்தான்.

''நேற்று ஏன் பள்ளிக்கு வரலே?''

''மாமா ஊருக்குப் போனேன் சார்... அவருக்கு உடம்பு குணமில்லைன்னு கடிதம் வந்தது.''

''நேற்று எழுதிப் போட்ட பாடத்தின் கேள்வி பதில்களை எழுதி விட்டாயா?'' - விசாரித்தார் ஆசிரியர்.

''இல்லை,'' என்று தலையாட்டினான் ரவி.

நெடுமாறனின் நோட்டை ஆசிரியர் வாங்கி ரவியிடம் தந்தார். ''பத்திரமாக ஒழுங்காகத் திருப்பிக் கொடுத்து விடு'' என்றும் சொன்னார்.

ரவி தலையாட்டினான்.

'கோயில் மாடு மாதிரி தலையாட்டினால் மட்டும் போதாது. நெடுமாறன் நோட்டை எப்படி வைச்சிருக்கான் பார்த்தியா? கொத்தமல்லிக் கட்டு மாதிரி செஞ்சு திருப்பிக் கொடுக்காதே. நோட்டு கவனம்' என்று மறுபடி கூறி விட்டுப் பாடத்தை நடத்தத் தொடங்கினார் ஆசிரியர்.


அடுத்த நாள் காலை. ரவி பள்ளிக்கு வந்து கொண்டிருந்தான். அவன் கையில் நெடுமாறனின் நோட்டு இருந்தது. திடீரென்று பின்னால் வந்த சைக்கிள்காரன் ஒருவன் ரவியின் மீது மோதித் தள்ளினான். ரவி ஒரு பக்கம் விழ, அவன் கையிலிருந்த நோட்டு நகரசபைக் குழாயடியில் குட்டையாகத் தேங்கியிருந்த நீரில் விழுந்தது! பதறிப் போய் உடனே எடுத்தான் ரவி. அதற்குள் நோட்டு நீரைக் குடித்து ஊறிப் போய் விட்டது! புரட்டினான் ரவி. வாய் திறந்த நோட்டிலிருந்து நீர் நீல நிறத்தில் சொட்டியது! எழுத்துக்கள் அழிந்து போயிருந்தன. ரவிக்குக் கண்கலங்கி விட்டது.

அதைக் கொண்டு போய் நெடுமாறனிடம் கொடுத்தால் என்ன சொல்வான்? அவன் நோட்டைக் கொடுத்து உதவியதே பெரிய காரியம். அதை ஒழுங்காகத் திருப்பிக் கொடுக்காவிட்டால் என்னவாகும்? ஆசிரியரிடம் சொல்லி நன்றாக அடி வாங்கிக் கொடுப்பான்.

ஆசிரியரை நினைத்து ஒருமுறை உள்ளம் நடுங்கினான் ரவி. வாங்கிக் கொடுக்கும்போதே எத்தனை முறை அவர் எச்சரித்தார்!

அவனும் வேண்டுமென்றே நோட்டைக் கெடுக்கவில்லை. ஆனால் நெடுமாறன் இதை நம்ப வேண்டுமே? நெடுமாறனின் குணம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. எதற்கெடுத்தாலும் ஆசிரியரிடம் புகார் சொல்பவன்! நடுங்கிக் கொண்டே பள்ளி சென்றான் ரவி.

சுகுமாரன்



அவன் நினைத்தபடிதான் நடந்தது. நோட்டை வேண்டுமென்றே கெடுத்து விட்டதாக நெடுமாறன் குதிகுதி யென்று குதித்தான். அழுது கொண்டே ஆசிரியரிடம் ஓடினான். 'உனக்குப் புது நோட்டு வாங்கி எல்லாத்தையும் முத்து முத்தா எழுதித் தாரேன்... அழாதேடா... சார்கிட்ட சொல்லாதேடா...'' என்று கெஞ்சியவாறு நெடுமாறனின் பின்னால் ஓடினான் ரவி. எதுவும் பயனில்லை.

நெடுமாறனின் கண்ணீரும் நோட்டின் கதியும் ஆசிரியருக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. ரவிக்கு நாலு அடி அழுத்தமாக விழுந்தது. அவன் துடித்துப் போய் விட்டான். இருந்தாலும் பல்லைக் கடித்துக் கொண்டு தாங்கிக் கொண்டான். கவனக் குறைவுக்கு ஏற்ற தண்டனை என்று ஏற்றான்.

'புது நோட்டு வாங்கி நெடுமாறனுக்கு எல்லாப் பாடங்களையும் எழுதிக்கொடு' என்று உத்திரவும் போட்டார் ஆசிரியர்.


ஆசிரியரின் உத்திரவை நிறைவேற்றினான் ரவி.

ஒரு வாரம் சென்றது. மதிய உணவு வேளை. பெஞ்சில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர் ரவியும் மோகனும். நெடுமாறன் அங்கே வந்தான். மோகனிடம் பேசுவதற்காக 'தொப்'பென்று பெஞ்சில் அமர்ந்தான். அவன் உட்கார்ந்த இடத்தில், ரவியின் கண்ணாடி இருந்தது. அது உடைந்து சுக்குநூறானது.

உடைந்த கண்ணாடியை ரவி பரிதாபமாகக் கையிலெடுத்தான்.

''ரவி... வேண்டுமென்றே நான் உடைக்கலே. உன் கண்ணாடி இங்கே இருப்பதை நான் பார்க்கவே இல்லை. என்னை மன்னித்து விடு'' என்று நெடுமாறன் பயந்தவாறு கூறினான்.

ரவி மறுமொழி ஒன்றும் கூறவில்லை. நெடுமாறன் வேண்டுமென்றே அதைச் செய்யவில்லை என்பது அவனுக்கும் தெரிந்ததுதான்.



மதிய வகுப்பு துவங்க மணியடித்தது. மாணவர்கள் அவரவர் இருக்கையில் அமர்ந்தனர்.

ஆசிரியர் வந்து விட்டார். ஒரு கூட்டல் கணக்கைக் கரும்பலகையில் எழுதினார். ரவியை அழைத்து கூட்டச் சொன்னார். அவன் கண்ணாடி இல்லாமல் தடுமாறினான். கூட்டல் தொகையை இடம் மாற்றி எழுதினான்.

ஆசிரியர் கவனித்து விட்டார்.

''ஏண்டா, கண்ணாடி இல்லாம தடுமாறுறே? கண்ணாடியைப் போட்டுக் கொண்டு போக நினைவுபடுத்த ஒரு ஆள் வேணுமா?'' என்று கடிந்து ஒரு குட்டுக் குட்டினார். ''போய் இடத்தில் உட்கார். நெடுமாறா வா'' என்று அழைத்தார்.

நெடுமாறன் எழுந்து வந்தான். ரவியை நன்றியுடன் பார்த்தான். ஆசிரியர் கண்ணாடியைப் பற்றிக் கேட்டும், தலையில் குட்டியும் கூட அது உடைந்தது பற்றியோ, உடைத்த தன்னைப் பற்றியோ அவன் வாய் திறக்கவில்லையே! இப்படிப்பட்ட அருமை நண்பனுக்கு போன வாரம் அடி வாங்கி வைத்தோமே! எத்தனை கெஞ்சினான்? நாம் கேட்கவில்லையே! அவன் மனம் வைத்திருந்தால் இப்போ நம்மைக் காட்டிக் கொடுத்திருக்கலாம்; வஞ்சம் தீர்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால், எத்தனை பெருந்தன்மையோடு அவன் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறான்?

அன்று மாலை பள்ளி விட்டதும் நெடுமாறன் ரவியைத் தன் அப்பாவிடம் அழைத்துச் சென்றான். நடந்ததைச் சொன்னான். நெடுமாறனிடம் அப்பா ரவிக்கு புதிய கண்ணாடி வாங்கித் தருவதாகக் கூறினார். நெடுமாறனின் உள்ளம் மகிழ்ந்தது.



# பாவம் அப்பா!

**"பா**னு, குடை, குடைன்னு நச்சரிச்சியே இந்தா..."

"அப்பா கொடுத்த குடையை அம்மாவிடம் காட்டினாள் பானு." குடை அழகாக இருந்தது.

"என்னங்க விலை அதிகம் இருக்கும் போல் தெரியுதே?" என்றாள் அம்மா.

பானுவின் அப்பா வேலாயுதத்திற்குப் பள்ளிக்கூடம் ஒன்றில் பியூன் வேலை. வரும் சம்பளமே அறுநூறுதான் அதில் நூறு ரூபாய்க்கு மேல் கொடுத்து குடை வாங்கியிருக்கிறது என்றால் இந்த மாத குடும்பச் செலவுகளை எப்படிச் சரிக்கட்ட போகிறோம் என்ற கவலை வந்தது அம்மாவுக்கு.

"விலையைப் பத்தி என்ன? இனிமே குடைக்காக என்னைத் தொந்தரவு பண்ண மாட்டேல்ல..." சிரித்தார் அப்பா.

"ஹை, குடை! எப்போப்பா வாங்கினே!" ஆறாம் வகுப்பு படிக்கிற பானுவின் தங்கை சாந்தி சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தாள்.

"அப்பா எனக்குத்தான் குடை வாங்கிருக்கார்!"

விளையாடி விட்டு வந்த அண்ணன் குமார், தங்கையின் கையிலிருந்த குடையைப் பறித்தான். குடையை விரித்துச் சுழற்றியபடி அதன் அழகைப் பார்த்தான்.

"அட, இது என்ன இனிஷியல் போட்டிருக்கு!"

குடையின் ஒரு மூலையில் 'எஸ். பி. என்' என்று வண்ண நூலால் பின்னப்பட்டிருந்த ஆங்கில எழுத்துக்களைக் குமார் சுட்டிக் காட்டினான்.

வேலாயுதமும் அப்போதுதான் அந்த எழுத்துக்களைக் கவனித்தார்.

"அப்பா, இது எங்க பக்கத்து க்ளாஸ் நளினியோட குடையாச்சே! இது உங்களுக்கு எப்படிக் கிடைச்சது?" மகளின் கேள்விக்கு என்ன பதில்



சொல்வது என்று தெரியாது தேள் கொட்டிய திருடனைப் போல் விழித்தார் வேலாயுதம்.

''நா... நான் இந்தக் குடையை வாங்கலை குமார். ஸ்கூல் விட்டதும் ஒவ்வொரு கிளாஸ் ரூமா பூட்டுவேன் இல்லையா... எட்டாம் கிளாஸ் அறையில் ஒரு பெஞ்ச் கைப்பிடியில் இந்தக் குடை மாட்டி இருந்தது. யாரோ மறந்து விட்டிருக்காங்க. நம்ம வீட்லதான் குடை இல்லையே, எடுத்துப் போயி ரலாம்னு தோணிச்சு'' என்று தயங்கித் தயங்கி உண்மையைச் சொன்னார் வேலாயுதம்.

''அப்பா, என்ன காரியம் செய்தீங்க! அந்தப் பெண் நளினியை எனக்கும் தெரியும். ஒரு சமையல்காரர் பெண். அவங்கப்பா எத்தனை சிரமப்பட்டு குடையை வாங்கியிருப்பார். குடையைத் தொலைச்சதுக்காக நளினியை அவங்க வீட்ல திட்டுவாங்க, அடிப்பாங்க. அடுத்தவங்க பொருளை நீங்க கலபமா எடுத்திட்டு வந்திட்டீங்க. பொருளை இழந்த வங்க மனசு என்ன பாடு படும்னு நினைக்கப் பார்த்தீங்களா?'' என்று கேட்ட பானுவை நினைக்கையில் பெருமையாகவும், தன்னுடைய செயலை எண்ணிப் பார்க்கையில் வெட்கமாகவும் இருந்தது வேலாயுதத்திற்கு. குமாரும் அம்மாவும் கூட பானுவுடன் சேர்ந்து கொண்டார்கள்.


''இப்போ என்ன செய்யலாம்?'' தன் குழந்தைகளிடமே பரிதாபமாக யோசனை கேட்டார் வேலாயுதம்.

''அப்பா, இதில் யோசிக்க என்ன இருக்கு? நேரா பிள்ளையார் கோயில் தெருவுக்குப் போங்க. பதினேழாம் நெம்பர்தான் நளினியின் வீடு. 'குடையை மறந்து போய் கிளாஸ்ல வச்சிட்டியே, நான் விசாரிச்சதில் உன்னோடதுன்னு தெரிஞ்சது, இந்தா'ன்னு நளினியிடம் குடையைக் கொடுத்திட்டு வாங்க'' என்றான் குமார்.

''ஆமாம்பா. எனக்குக் குடை இல்லைன்னா மழையில நனைஞ்சா பரவாயில்லை. பிறர் பொருள் நமக்கு வேண்டாம்'' என்றாள் பானு.

''இவர்களல்லவோ என் மக்கள்!'' என்று பெருமிதத்துடன் எழுந்தார் வேலாயுதம்.


- தேவராஜன்.



# 477 வயதான மாதா கோவில்!

சென்னை மாநகரில், ''லஸ்'' என்று கேட்டால் எல்லோருக்கும் தெரியும். நகரின், அவ்வளவு முக்கியமான பகுதி அது. இங்கேதான் பிரபலமான மருத்துவமனைகள், கல்லூரிகள், பள்ளிகள், திரைப்பட அரங்குகள், ஓட்டல்கள், விழா நடக்கும் மண்டபங்கள், பூங்கா, மார்க்கெட்டுகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. இந்தப் பகுதிக்கு 'லஸ்' என்று ஏன் பெயர் வந்தது என்ற கேள்வியைப் போட்டால், பெரும்பாலானவர்களுக்கு பதில் கூறத் தெரியாது.

நாகேஸ்வரராவ் பூங்காவுக்கும், விவேகானந்தா கல்லூரிக்கும் இடையே உள்ள குறுகலான தெரு ஒன்றில் அமைந்துள்ள ஒரு சிறு மாதா கோவில்தான் இந்தப் பகுதிக்கு 'லஸ்' என்ற பெயர் வரக் காரணம்! இது அமைந்துள்ள சிறு தெரு குறுகலாக இருப்பதோடு, இந்த ஆலயமும் உள்ளடங்கி இருப்பதால் இப்படி ஓர் மாதா கோவில் இருப்பது பலருக்குத் தெரியாது.



குறுகலான தெருவில் உள்ளடங்கி இருந்தாலும் இந்த மாதா கோவில் இயற்கைச் சூழல்களுக்கு இடையே, கண்ணுக்குக் குளுமையாக, நெருக்கடி, சந்தடிகளில் இருந்து விலகி மனதிற்கு அமைதியளிக்கும் வகையில் அமைந்திருப்பது வியப்பாக இருக்கிறது. இந்த அழகான மாதா கோவிலின் வயது என்ன தெரியுமா? 477! ஆமாம், தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட முதல் மாதா கோவில் என்ற பெருமை இதற்கே உண்டு!

இந்த மாதா கோவில் இங்கே ஏன் கட்டப்பட்டது? இதை யார் கட்டினார்கள்?

1493-ஆம் ஆண்டு வாஸ்கோடகாமா போர்த்துக்கல்லில் இருந்து இந்தியாவுக்குப் புதிய கடல் வழி ஒன்றைக் கண்டுபிடித்தார். இந்தக் கடல் வழியாக லிஸ்பனில் இருந்து வந்த புனித குருமார்கள் குழு ஒன்று 1500 ஆம் ஆண்டு மேற்குக் கரையில் இருந்த கொச்சித் துறைமுகத்திற்கு வந்தது.



அங்கிருந்து மதப் பணியாற்றிய பிறகு இவர்கள் கிழக்குக் கரைக்குக் கிளம்பினர். கடலில் திசை அறியாது தத்தளித்த இவர்களுக்கு முன்னால் ஒரு பேரொளி தோன்றி வழிகாட்ட இவர்கள் பத்திரமாகக் கரையேறினர். கரையேறிய இடம் (சென்னை, மயிலாப்பூர்) சேன்தோம் கடற்கரை.


இன்று ஆலயம் அமைந்துள்ள இடமும் சரி, அன்றைய சேன்தோம் பகுதியும் சரி, காடுகள் நிறைந்து காணப்பட்டது. தங்களுக்கு வழிகாட்டிய பேரொளி மறைந்த இடம் புனிதமானது என்று குருமார்கள் எண்ணினர். தாங்கள் போற்றி வணங்கும் தேவ மாதாவே பேரொளியாகித் தங்களை வழிகாட்டிக் காப்பாற்றியதாக அவர்கள் மகிழ்ந்தனர். தங்கள் நன்றிக் காணிக்கையாக மாதா கோவில் ஒன்றை அமைத்தனர். இதன் பெயர் "NOSSA SENHORA DE LUZ" (பிரகாச மாதா) இதுவே ''லஸ்'' என்று நாளடைவில் குறுகி புகழ்பெற்றது. காட்டின் நடுவே அமைக்கப்பட்டதால், காட்டுக் கோயில் என்ற பெயரும் இதற்கு உண்டு.

477 வயதான இந்த வரலாற்றுப் புகழ்மிக்க மாதா கோவில் இந்திய போர்த்துக்கீசிய கட்டடக் கலைக்கு உதாரணமாக விளங்குகிறது. குழந்தை ஏசுவைத் தாங்கிய மாதாவின் திருக்கோலமும், சுற்றி அழகு செய்யும் வேலைப்பாடுமிக்க செடி கொடிகளும் மேல் விதானத்தில் உள்ள அற்புத ஓவியங்களும் நேரில் கண்டு திகைக்க வேண்டியவை. கிறிஸ்துவர்கள் மட்டுமின்றி, எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களும் வணங்கி, காணிக்கை செலுத்தும் அற்புதத்தை இங்கு காணலாம். பலரும் போற்றி வணங்கத்தக்க இந்தப் பழம்பெருமை மிக்க ஆலயத்தில் கிறிஸ்துமஸ் விழா மிகச் சிறப்பான ஒன்று. ஆண்டுதோறும் இதைத் தனிப் பெரும் விழாவாக கொண்டாட ஏற்பாடு செய்து வருபவர் மறைத்திரு அருட்தந்தை பி.டி. அருளப்பா அவர்கள்.

குழந்தை ஏசு பெத்லெகத்தில் பிறந்த அழகான காட்சியை இவ்விழாவில் அலங்கரித்து வைக்கிறார்கள். பழம் பெருமைமிக்க ஆலயத்தில் அமைந்துள்ள கிறிஸ்துமஸ் மரம் அலங்கரிக்கப்பட்டு ''ஏசு பிறந்த காட்சி'' மனம் கவரும் வகையில் வைக்கப்படுகிறது. குழந்தைகளின் மனம் கவர வேறென்ன வேண்டும்? மாதா கோவிலின் தோற்றத்தையும், அருள் பெருக்கும் அன்னையின் தோற்றத்தையும் இங்கே பார்க்கிறீர்கள்.

அட்டையில் : சிறுமி பெட்சி

வண்ணப்படம் - உட்பக்க படங்கள்: கோபிநாத்



# கேட்கட்டுமா

✱ விவேக் குமார், நஞ்சுண்டாபுரம்.

? மனித இதயம் ஒருவருக்கு வலது மார்பில் அமைந்திருக்குமாமே, உண்மையா? இது ஒரு வியாதியா? அப்படி இருந்தால் என்ன பாதுகாப்பு நடவடிக்கைள் எடுக்க வேண்டும், டாக்டர்?

! உண்மைதான், விவேக் குமார்! மிகவும் அபூர்வமாக ஆயிரத்தில் ஒருவருக்கு இதயம் வலது மார்பில் அமைந்திருக்கும். இந்த நிலையை 'டெக்ஸ்ட்ரோ கார்டியா' (Dextro Cardia) என்கிறார்கள் மருத்துவர்கள். இது ஒரு வியாதியல்ல; தாயின் கருப்பையில் குழந்தை வளரும் போது ஏற்படும் சில மாறுதல்கள் காரணமாக இதயம் இருக்க வேண்டிய பக்கம் மாறி விடுகிறது. இதனால் இதயத்தின் செயல்பாட்டில் எவ்விதப் பிரச்னையும் ஏற்படாது. எனவே, பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியமில்லை.

✱ வி. சத்யா, முடிகொண்டான்.

? டாக்டர், பெண்கள் ரத்ததானம் செய்யலாமா? எந்த வயதிற்கு மேல் ரத்ததானம் செய்வது நல்லது?


! 18 வயதிற்கு மேல் பெண்களும் ரத்ததானம் செய்யலாம். இரண்டு விதிவிலக்குகள். பெண்கள் கர்ப்பமாக இருக்கும் போதும், குழந்தைப் பேறு பெற்ற காலங்களிலும் ரத்ததானம் செய்யக் கூடாது.

✱ ச. மகேஸ், கஸ்பா

? நாய் கடித்தால் ஊசியை கையில் போடாமல் தொப்புளைச் சுற்றிப் போடுகிறார்களே, இது ஏன்?

! நாய்க்கடிக்கு போடக் கூடிய 'செம்பிள் தடுப்பூசி'யை தோலுக்கும் தசைக்கும் இடைப்பட்ட பகுதியில் (Subcutaneous) செலுத்தினால்தான் அது ரத்தத்தில் கலந்து தடுப்புப் பணியைச் செய்யும். மேலும் அந்தத் தடுப்பு ஊசியை தினமும் ஒன்று வீதம் 7 லிருந்து 14 நாட்கள் வரை தொடர்ச்சியாகப் போட வேண்டும். இதற்குக் கைகள் லாயக்கில்லை; பரந்த இடமான வயிறுதான் வசதி. எனவேதான் அந்தத் தடுப்பூசியை மட்டும் தொப்புளைச் சுற்றிப் போடுகிறார்கள். இந்தத் தடுப்பூசியின் மவுசு சமீபகாலமாகக் குறைந்து வருகிறது. இப்போது புதிதாக Human Diploid Cell Vaccine மற்றும் Purified Chick Embryo Cell Vaccine என்ற இரு தடுப்பூசிகள் முறையே பிரான்ஸ், ஜெர்மனி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த ஊசிகளைக் கைகளில் போட்டுக் கொள்ளலாம். நாய் கடித்த உடனே ஒரு ஊசி; பிறகு 3, 7, 14, 30, 90 வது நாட்களில் ஒவ்வொரு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இவற்றின் விலை அதிகம். வலி குறைவு.

# டாக்டர்?




* பி.அ. முஸ்தபாகமால், தக்கோலம்.

? நாம் சுவாசிக்கும் போது உள்ளிழுக்கும் காற்று அதிகமா? வெளிவிடும் காற்று அதிகமா?

! நாம் சாதாரணமாக சுவாசிக்கும் போது உள்ளிழுக்கும் காற்றும், வெளிவிடும் காற்றும் ஒரே அளவுதான். 500 க.செ.மீ.! ஆழ்ந்த உள் மூச்சின் போது சுமார் 2500 க.செ.மீ. வரை காற்று உள்ளே நுழையும். ஆனால் வேகமான வெளி மூச்சின் போது 1500 க.செ.மீ. காற்றுதான் வெளி வருகிறது.

* சு. சுரேஷ், கொண்டயம்பள்ளி.

? என் வயது 15. உயரம் 138 செ.மீ. இதற்கு மேல் நான் உயரம் வளரவே இல்லை. வளர்வதற்கான வழிகள் என்ன, டாக்டர்?

கே. பிரபாகரன், ஆர்.எஸ். புரம்.

அ. சண்முகசுந்தரம், பட்டி மணியகாரன்பாளையம்.

? சிலர் குள்ளமாகவும், சிலர் உயரமாகவும் இருக்கக் காரணம் என்ன, டாக்டர்?

(இன்னும் முப்பதுக்கும் மேற்பட்ட தம்பி தங்கைகள் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.)


! குழந்தைகளின் உயரம் அவர்களுடைய பெற்றோர்களின் உயரத்தையும், பரம்பரை அம்சத்தையும் பொருத்தே அமைகிறது. பெற்றோர்கள் உயரமாக இல்லாவிட்டால் குழந்தைகளும் உயரமாக வளர முடியாது. இருந்தாலும் சிலருக்கு விதி விலக்குகள் உண்டு. நல்ல ஊட்டச் சத்துள்ள உணவையும், கால்சியம் மற்றும் வைட்டமின் மாத்திரைகளையும் உட்கொண்டால் ஓரளவிற்கு உயரமாக வளரலாம்! சிறுவயதிலிருந்தே Pull Ups உடற்பயிற்சியைத் தொடர்ந்து செய்து வந்தால் ஓரிரு அங்குலங்கள் அதிகம் வளர வாய்ப்பிருக்கிறது. வளர்ச்சி ஹார்மோன் (Growth Hormone) குறைவினால் சிலர் குட்டையாக இருப்பார்கள். இதைக் குணப்படுத்த வளர்ச்சி ஹார்மோன் ஊசியை வெளிநாடுகளில் பயன்படுத்துகிறார்கள். ஆனால், அந்த ஊசியால் வேண்டாத விளைவுகள் உடம்பில் உருவாவதால் எச்சரிக்கை அவசியமாகிறது.

* ஐ.எஸ்.வாசு, மாடம்பிள்ளைதர்மம்.

? ரத்த அழுத்தம் உள்ளவர்கள் 'உப்பு' சேர்க்கக் கூடாது என்கிறார்களே, ஏன்?

! ரத்த அழுத்தம் உள்ளவர்களின் ரத்தத்தில் 'சோடியம்' என்கிற உப்பின் அளவு அதிகமாக இருக்கும். அதோடு சமையல் உப்பை (Sodium chloride) யும் உணவில் சேர்த்துக் கொண்டால், ரத்தத்தில் உப்பின் அளவு மேலும் அதிகரிக்கும். இதனால் சிறுநீரகங்கள் பாதிக்கப் படும். இதனைத் தவிர்க்கவே, ரத்த அழுத்தம் உள்ளவர்கள் 'உப்பு' சேர்க்கக் கூடாது என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.


கருடனை வென்ற கருணை வள்ளல்
கதை: ஆனந்தி
படம்: கோபலி
இமயமலைச் சாரலில் வித்யாதரர்கள் ஆடியும் பாடியும் சிவபெருமானைத் தொழுது வந்தனர்...
அவர்கள் அரசன் ஜீமுதகேது.
ரூபவணிகா! இந்தக் கற்பக மரம் நான் செய்த தவத்தால் கிடைத்தது. உனக்கு வேண்டுவன கேள்!
அரசி ரூபவணிகா அடக்கத்துடன்...
பொன்னும் மணியும் பட்டாடையும் வேண்டாம்! அறிவிலும் தியாக உள்ளத்திலும் சிறந்த மகனைக் கோருகிறேன்!
அவ்வாறே ஆகட்டும்!
ரூபவணிகா! நீ ஆடம்பரத்துக்கு ஆசைப்படவில்லை! உன்னைப் பார்த்துப் பெருமைப்படுகிறேன்.


உரிய நேரத்தில்...
என்ன பெயர் வைப்பது?
உங்கள் பெயரையும் இணைத்து ஜீமூத வாகனன் என்று அழைப்போம்!
நாளடைவில்...
எப்படி படிக்கிறான் பார்!
கற்பகத் தருவின் அருளால் கிடைத்த செல்வனாச்சே!
ஜீமூதவாகனனுக்குப் பதினாறு வயதான போது...
அப்பா! வறுமையால் வருந்துவோருக்குப் பொருள் வழங்க அனுமதி கொடுங்கள்!
உன் இஷ்டம்!
இதோ இந்தக் கற்பக மரமும் இனி உன்னுடையதுதான்!



ஜீமூதவாகனன் தானம் செய்தான்...
இந்தா அரிசி மூட்டை!
தூக்க முடியாதே!
வண்டியில் ஏத்தி வீட்டுக்கு அனுப்புகிறேன்!
குழந்தைகளே! உங்களுக்குப் பந்து, நடைவண்டி, மரப் பொம்மைகள்...
நீ யாரம்மா! என்ன வேணும்?
இந்தப் பிள்ளைக்கும் பொன் அரைஞாண் பண்ணிப் போட்டாத்தான் என் மாமியார் என்னை சேர்த்துப்பாங்க!
... என் அம்மாவாலே செய்ய முடியலே!
சே! இப்படியும் ஒரு கொடுமையா? உன் புருஷனை அழைத்து வா! அரைஞாண் தரேன்!
ஏனப்பா! உன் மருமகளுடைய புன்னகையை விடப் பொன் நகை பெரிதா? இனி உன் மனைவியை இப்படி இழிவு செய்யாதே, இந்தா!


பிராக்ஜ்யோதிஷபுரத்தின் மன்னன் யமஜீவிதன்...
அரசே! வித்யாதர மன்னன் 'ஜீமூத வாகனன்' புகழ் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது!...
ஒற்றர் கூற, யமஜீவிதன் பொறாமை அடைந்தான்...
நம் தேச மக்களும் அவனிடம் போய் யாசிக்கிறார்கள்.
ஆ! அவனை ஒழிக்க வேண்டும்!
மன்னரின் நண்பன் தருமன்...
அரசே! ஜீமூதனைப் போரில் நாம் வெல்ல முடியாது...
அப்படியென்றால்?
சூழ்ச்சி பண்ணணு...
தருமனும் யமஜீவிதனும் வேஷமணிந்து...
இந்த சந்நியாசி கோலத்தில் ஜீமூதனிடம் போய்...
வாருங்கள் துறவிகளே! ஆசி கூறுங்கள்!
நீ பெரிய தியாகியாமே!
வள்ளலாம்!




உங்களைப் போன்ற மகான்கள் என்னைத் தேடி வந்ததே எனக்குப் பெருமை என்ன வேண்டும்?
உன்னுடைய ராஜ்யத்தையே எனக்குக் கொடுத்துவிட்டால் உன் கீர்த்தி இன்னும் பல மடங்கு பெருகும்!
தருமன் இடைபுகுந்து...
என்னப்பா யோசிக்கிறாய்? உன் கொடையுள்ளம் இவ்வளவுதானா?
ராஜ்யம் என்னுடையதல்ல; என் தந்தையிடம் கேட்டுவிட்டுத் தருகிறேன்!
ஜீமூதவாகனன் தந்தையை அணுகி...
அப்பா! ஒரு பொருளைத் தானம் செய்ய உங்கள் அனுமதி வேண்டும்!
தாராளமாய்க் கொடு! கற்பக மரம் இருக்கும் வரை என்ன கவலை?
நான் தானம் செய்ய விரும்புவது நம் ராஜ்யத்தை!


ஜீமூதகேது திருத்திட்டு...
மகனே! இது எதோ சூழ்ச்சி. யம ஜீவிதனுக்கு இந்த ராஜ்யத்தின் மீது ஆசை! உன்னை யுத்தத்தில் வெல்ல முடியாது என்பதால் தானம் கேட்கிறான்!
நாம் காட்டுக்குப் போய் தவம் செய்வோம். ராஜ்யம் எதற்கு?
உனக்கே வேண்டாம் என்றால் எனக்கு — எதற்கு?
ஜீமூதவாகனன் தன் நாட்டையே தானம் செய்துவிட்டு...
அப்பா! அம்மா! நாட்டை விடக் காடு அழகாய்த்தான் இருக்கிறது!
தாய் ருபவனிகா...
உன் கொடையுள்ளம் எனக்குப் பெருமையாகத்தான் இருக்கிறது. ஆனால் உனக்குக் கல்யாணம் செய்து வைத்து, குட்டி இளவரசர்களைப் பார்க்க முடியாத குறைதான்...
அம்மா! இயற்கை சாம்ராஜ்யத்தை நாம் ஆண்டு வருகிறோம்! எத்தனை ஜீவராசிகள் நமக்குப் பிரஜைகளாக உள்ளன பார்!


ஒரு நாள் ஜீமூதவாகனன் பசியாறப் பழங்கள் பறித்து வரப் போனான்...
அட! இனிய இசை கேட்கிறதே! எங்கிருந்து வருகிறது?
இசை வந்த திக்கில் செல்ல..
யார் இவர்கள்? வன தேவதைகள் போல...
அவர்களை நெருங்கவும்...
நான் சித்த சாரணர்களின் இளவரசி மலையவதி... நீங்கள்...
ஜீமூத வாகனன் என்பது என் பெயர்.
ஓ! ராஜ்யத்தை தானம் செய்துவிட்டுக் காட்டில் திரிபவர் நீர்தானா! உங்கள் புகழ் இங்கும் எட்டியிருக்கிறது...
இந்த மலைய மலைக்கு அதிபரான மித்ரவசுவின் தங்கை நான்... எங்கள் மன்னரைச் சந்திக்கலாம் வாருங்கள்...




மித்ராவசு அன்புடன் வரவேற்க...
தங்கள் நட்பு கிடைத்ததற்கு நான் மிகவும் பெருமைப் படுகிறேன்.
மலையவதி, ஜீமூதவாகனனின் ஆசிரமத்துக்கு அடிக்கடி வந்து போனாள்...
பாட்டுக் கேட்டு எத்தனை நாட்கள் ஆகிவிட்டன... எங்கே ஒரு பாட்டுப் பாடு, பார்ப்போம்!
ஜீமூத கேதுவும் ரூபணிகாவும் மலையவதியின் ஆடல் பாடல்களில் மகிழ்ந்தனர்...
ஆகா!
அற்புதம்!
ஒரு நாள் மித்ராவசுவும் வர...
உங்கள் மலைய மலை எங்களுக்குப் புகலிடம் அளித்திருக்கிறது. நன்றி!
என் தங்கை மலையவதியைத் தாங்கள் மருமகளாக ஏற்க வேண்டும்!
என்ன! நாங்கள் நாடிழந்தவர்கள் உங்கள் தங்கையோ இளவரசி!



என் தங்கை தங்கள் மகனைத்தான் மணப்பேன் என்று உறுதியாக இருக்கிறாள்...
கானகத்தின் இனிய சூழலில் விவாகம் நடந்தது...
மரங்கள் கூட பூச்சொரிந்து ஆசீர்வதிக்கின்றன!
நாட்கள் செல்ல...
இந்த மானுக்கு என்ன?
பாவம், காலில் அடிபட்டிருக்கிறது. நாம் உதவுவோம் என்று நம்பி வந்திருக்கிறது...
இந்தக் காட்டில் அத்தனை பிராணி, பறவைகளுக்கும் நீங்கள்தான் தலைவர்!
தங்களை நேசிப்பவரிடம் அன்பு செலுத்துகின்றன.
ஒரு நாள்...
இரவு நேரங்களில் யாரோ அழுவது போல் எனக்கு ஒரு பிரமை...
பிரமையில்லை.. எனக்கும் கேட்பது. இன்றிரவு தேடுகிறேன்...




அன்றிரவு...
எவ்வளவு தேடியும் இன்னும் அழுபவரைக் கண்டு பிடிக்க முடியவில்லையே!
விடியும் தருணம்...
அதோ, அந்தப் புற்றுக்குப் பின்னாலிருந்துதான் அழுகுரல்!
அங்கே...
ஐயோ! இதென்ன பயங்கரம்! தாயே, உங்களுக்கு என்ன துயர்?
நாக இளைஞன்...
என் பெயர் சாங்க சுதா. இது என் தாய்!
வெகு காலம் முன் கருடனின் தாய்க்கு ஒரு அநீதி நேர்ந்தது. அதனால் நாகர்கள் மீது கோபம் கொண்ட கருடன், மகா விஷ்ணுவிடம் வரம் பெற்று எங்கள் குலத்தை அழித்து வருகிறான். நீ பார்த்த பாம்பு எலும்புகள் என் சகோதரர்களே!


என்னுடைய நாலு பிள்ளைகள் மடிந்தார்கள். இவன் ஒருவனே மிச்சம்.
இன்று நானும் கருடனுக்கு இரையாகி விடுவேன்!
அம்மா! கவலைப்படாதீர்கள்! உங்கள் மகனுடன் மறைந்து இருங்கள். இன்று கருடனுக்கு நான் இரையாகிறேன்!
சங்க சூடாவும் அவன் தாயும் ஒரு கோயிலில் அடைக்கலம் புக...
வரட்டும், கருடன்...
புயல் போல் காற்று வீசுகிறது! வருவது கருடன்தான்! தியானத்தில் ஆழ்வேன்...
ஓம்! சிவாய நம:
இதென்ன, பாம்பு ஒன்றையும் காணோம்! தினம் ஒரு பாம்பு எனக்கு இரையாக வேண்டும் என்று ஒப்பந்தமாயிற்றே!


கருடன், ஜீமூதவாகனனைக் கொத்தி...
ஏய்! நாகர்களின் அரசன் வாசுகி வாக்களித்தபடி தினம் ஒரு பாம்பு எனக்கு உணவாக வேண்டுமே! எங்கே?
ஜீமூதவாகனனைக் கருடன் கொத்தக் கண்ட சங்கசுதா..
ஐயோ! அவரைக் கொல்லாதீர்கள்! இன்று நான்தான் உங்கள் உணவாக வேண்டும்!
எனக்குப் பதில் இவர் தம் உயிரைத் தியாகம் செய்ய முன் வந்தார். எனக்கு மனசு கேட்கவில்லை...
அடடா! என்ன பாவம் செய்துவிட்டேன்! உங்கள் உடலைக் காயப்படுத்தி விட்டேனே!
தினம் ஒரு கொலை செய்கிறாயே! அது பாபமில்லையா?
என்னைக் கொத்தினால் பாவம், சங்கசுதனைக் கொன்று தின்றால் புண்ணியமா? என்றோ நடந்த அநீதிக்கு, இன்னும் எத்தனை காலம் பழி வாங்கப் போகிறாய்?


கருடன் மனம் திருந்தி...
நீங்கள் என்னை நல்வழிப்படுத்திய மகான்...
தாயே! உங்கள் பிள்ளைகள் அனைவரும் உயிர் பெற்று எழுவார்கள்! போய் வருகிறேன்.
கருடன் பறந்து செல்ல...
உங்களுக்கு எப்படி நன்றி சொல்வேன்?
அம்மா! பிறர் துன்பத்தைப் போக்க முன் வருவதுதான் வாழ்க்கையின் பயன்.
உயிர்பெற்ற நாகர்கள்...
எங்களுக்கு மீண்டும் வாழ்வளித்த ஜீமூதவாகனன் வாழ்க! வாழ்க!
சிவபெருமான் தோன்றி...
மரணம் நெருங்கிய சமயத்திலும் அஞ்சாமல் நீ என்னையே தியானித்தாய்! அமர வாழ்வு பெறுவாய்!


பார்வதி தேவி...
ஜீமூதவாகனா! உன் போன்ற அரசர்களின் திறமை மக்களுக்குப் பயன் பட வேண்டும். நாட்டுக்குத் திரும்பிச் செல்!
நடந்ததையெல்லாம் அறிந்த யம ஜீவிதனும் தருமனும்-
உங்களை வஞ்சித்து நாங்கள் நாட்டை அபகரித்தது தவறு, மன்னிப்பு வேண்டுகிறோம்!
ஜீமூதவாகனனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தது...
அன்று மாலை...
கற்பக மரமே! நீ என்னிடம் வந்ததால் தான் பிறர் பொறாமைப் பட்டார்கள்! பல தவறுகள் நடந்தன! தேவலோகத்துக்கே திரும்பி விடு!
மலையவதி! நாட்டு மக்களை மகிழ்விக்கக் கற்பக மரம் தேவையில்லை!
ஆமாம்! அன்பு செலுத்தி உழைப்பில் ஈடுபடுத்துவோம்! சந்தோஷம் தன்னால் வரும்!

## 6. சண்டை தொடர்ந்தது!

அன்பு இல்லக் குழந்தைகள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். அன்றாட வேலைகளைக் கவனிக்க விடியற் காலையிலே எழுந்து விடுவார்கள். அன்றும் அப்படித்தான் வழக்கப்படி எழுந்தவர்கள் ஒரு புதிய காட்சியைக் கண்டார்கள். பள்ளி வகுப்புகள் நடக்கும் அறைகள் இருந்த இடத்திற்கு அருகே வேலியோரமாக வரிசையாக சின்னதும், பெரிதுமாக எருமை மாடுகள் கட்டப்பட்டு இருந்தன. மாடுகள் வேலியை இழுப்பதும், தலையை வேலிக்கம்பத்தில் தேய்ப்பதுமாக இருந்தன. மாட்டுச் சாணத்தின் துர்நாற்றம் கிட்ட நெருங்க முடியாமல் செய்தது. அவர்கள் வயதையொத்த ஒரு சிறுமியும் சிறுவனும் மேலும் இரண்டு மாடுகளை ஓட்டி வந்து வேலியில் கட்டினார்கள்.

# அபிராமியின் அட்டிகை

இதைக் கண்ட அரவிந்தனும் விவேகானந்தனும் எதிர்ப்புக் குரல் எழுப்பினர். ''யாரது பள்ளிக்கூட வேலியிலே மாடுகளைக் கட்டறது?''

''வேற எங்கேயாவது கட்டறது தானே? நாங்க கிளாஸ் ரூம்லே எப்படிப் படிக்கிறது?''

''இப்படி அசுத்தப்படுத்தறீங்களே, இது உங்களுக்கே நல்லாயிருக்கா?'' என்று மாறி மாறி இருவரும் கேட்டனர். அவர்கள் கேட்டதை யாராவது மதித்தால்தானே?

பேச்சு சத்தத்தைக் கேட்டு, அபிராமியும் குயிலும் மற்றவர்களும் ஓடி வந்தனர்.

''என்ன அரவிந்தா? இங்கே என்ன நடக்குது? இவங்க ஏன் மாடுகளை நம்ம பள்ளி வேலியிலே கட்டி, அசுத்தப்படுத்தறாங்க?'' என்று கேட்டாள் அபிராமி.

''அதைத்தான் நாங்களும் அக்கா கேட்கிறோம். பதிலே இல்லை'' என்று விவேகானந்தன் சொன்னான்.

''அது எப்படி பதில் சொல்லாம இருப்பாங்க? இது அவங்க இடம் இல்லியே! நகருங்க. நான் கேட்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே வேலி முன்னே போய் நின்றாள் அபிராமி.

''இதோ பாருங்க. இங்கே கொண்டு வந்து மாடுகளைக் கட்டினா எப்படி? அவிழ்த்து ஓட்டிக்கிட்டுப் போங்க. உம்... உம்...'' என்றாள் அபிராமி.

வேலியில் கட்டிய மாடுகளுக்குக் கூடையில் தீனி வைத்துக் கொண்டிருந்த செண்பகம் என்ற சிறுமி, அபிராமியை ஒரு 'முறை' முறைத்து விட்டு, ''மாடுகளை அவுக்க மாட்டோம். என்ன செய்வே? தலையைச் சீவிடுவியா?'' என்று சர்வ அலட்சியமாகக் கூறிவிட்டு, ''டேய் தம்பி செந்தில், நீ போயி மாடுகளைக் கறக்க நேரம் ஆகுதுன்னு, சொக்கலிங்கத்தைக் கூட்டியா'' என்று சொன்னாள்.

அதோடு செண்பகம், மாட்டைக் கையாலே அடிச்சுத் தள்ளி, ''சனியனே தள்ளி நில்லு'' என்று வெறுப்புடன் இளக்காரமாகச் சொன்னாள்.

குயிலுக்கு வந்ததே கோபம். ''இந்தா! யாரை சனியன்கறே? ஜாக்கிரதை'' என்று கத்தினாள்.

''குயிலு, நீ பேசாம இரு. நான் பேசிக்கிறேன்'' என்ற அபிராமி, ''இதோ பாரும்மா, இங்கே மாடுகளைக் கட்டக் கூடாது. பிள்ளைங்க படிக்கிற இடம். சீக்கிரமா எல்லா மாடுகளையும் அவுருங்க'' என்றாள்.

''ஏன்! இங்கே கட்டினா என்ன? இது என்ன உங்க ஆயி, அப்பன் இடமா?

பேசாம கம்னு போவியா. வந்திட்டே காலையிலே...''

''இதோ பாரு.. யாரு காலையிலே வந்தது? நீங்கதான் மாடுகளை ஓட்டி யாந்து கட்டி, வம்பு செய்யறீங்க?''

''இதோ பாரு, என்னாங்கிறே? நானும் உங்க வேலிக்கு உள்ளே கட்டினா நீ பேசு. வேலிக்கு வெளியேதானே கட்டியிருக்கேன்?''

''எங்க வேலியிலே ஏன் கட்டணும்னுதான் கேட்கிறோம்?''

''நாங்க எங்க வேணும்னாலும் கட்டுவோம். என்னா செய்வே?''

''இந்தா வீண் பேச்சு வேண்டாம். முதல்லே மாடுகளை அவுருங்க. ஆமாம். சொல்லிட்டோம்.''

''முடியாது. என்னா பண்ணுவே? பூச்சாண்டி காட்டிறியா? டுர்ன்னாம்..'' என்றாள் செண்பகம் என்ற அந்தச் சிறுமி. இந்த 'டுர்ன்னாம்' என்கிற இளக்கார ஒலி அப்பப்போ செண்பகத்துக்கு அவளை அறியாமலேயே வந்து குதிக்கும். எல்லாம் எருமைகளோடு பழகும் காரணம் தான்! அதை அப்படியே மனிதர்களுக்கும் பயன்படுத்துவது அவள் வழக்கம்!

''இதோ பாரு டுர்ரு, புர்ரு, கிர்ருல்லாம் நம்மகிட்டே வெச்சுக்காதே. மரியாதையா சொல்லிட்டேன். இந்த வேலியைக் கட்ட நாங்க எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா?'' - குயில் உண்மையைத் தான் சொன்னாள்.

அந்த வேலியைக் கட்ட குழந்தைகள் என்ன பாடுபட்டனர் என் பது அவளுக்குத்தானே தெரியும்? ''சுத்தமாயிருக்கிற இடத்தை ஏன் இப்படி திடீர்ன்னு மாடுகளைக் கொண்டாந்து கட்டி, அசுத்தப்படுத்தறீங்க? மரியாதையா மாடுகளை அவிழ்த்துக்கிட்டுப் போங்க. இல்லைன்னா...?'' என்று இழுத்தாள் அபிராமி!

''இல்லைன்னா என்னா பண்ணுவே? டுர்ன்னாம்.. கலாட்டா பண்ணாமே கம்னு போ...''

**இ**ந்தச் சமயத்தில் மாடுகளைக் கறக்க வந்த செண்பகத்தின் தம்பி செந்திலு வந்து கொண்டே, ''யக்கா! என்னா கூட்டம்?'' என்று கேட்டான்.

''டேய் தம்பி! நாம மாடுகளை இங்கே கட்டினது தப்பாம். இந்தப் பொடிசுக எல்லாம் என்னமா ராங்கு பண்ணுதுங்க. பெரிசா சட்டம் பேசுதுங்க...!''

செண்பகம் அலட்சியமாகச் சொன்னதும், ''இது எங்க பள்ளிக்கூட வேலி. இதிலே எப்படி நீங்க மாடுகளைக் கட்டலாம்?'' என்று ஆவேசப்பட்டான் அரவிந்தன்.



''இவங்ககிட்டே என்னா பேச்சு? வாங்க போவோம்'' என்று அபிராமி எல்லோரையும் அழைத்துக் கொண்டு போனாள். ''தம்பி பார்த்தியா...! பயந்துக்கினு இவங்க போறதை! நம்மகிட்டேயா நடக்கும். டுர்ன்னான்...'' என்று வெற்றிப் பெருமிதப்பட்டாள் செண்பகம்.

ரொம்ப பேசினீங்க, வேலிக்குள்ளேயே வந்து மாடுகளைக் கட்டு

கூத்தபிரான்



வோம். நம்மளை என்னன்னு நினைச்சிங்க?'' என்று செண்பகத்தின் தம்பி செந்திலும் வீராப்பாகப் பேசிக் கொண்டு மகிழ்ந்தான்.

சிறிது நேரம் கழிந்தது. பள்ளிக் கூட விடுதிப் பக்கத்திலேந்து ஏதோ சத்தம் கேட்டது.


''டுர்ராம் டுர் சுத்தம் சோறு போடும். பொது இடங்களை அசுத்தப் படுத்தாதே...!'' ''சுற்றுப்புறச் சூழலைக் காப்போம்'' என்ற கோஷங்களோடு விடுதிப் பிள்ளைகள் எல்லாரும் அபிராமியின் தலைமையில் வரிசையாக அணிவகுத்து வந்து வேலிப் பக்கமாக நின்றனர்.

''மாடுகளை மரியாதையா அவிழுங்க'' என்றாள் அபிராமி.

''என்ன?... கூட்டமா வந்தா பயந்துகினு போயிடுவோம்னு நினைச்சியா? அதுதான் நம்மகிட்டே நடக்காது. டுர்ன்னான்' என்று சவால் விட்ட மாதிரி செண்பகம் தலைநிமிர்ந்து நின்றாள்.

''இப்போ உன் 'டுர்புர்' எல்லாம் என்னாவுதுன்னு பாரு'' என்று சொன்ன அபிராமி, ''மாடுகளை எல்லாம் அவிழ்த்து விரட்டி விட்டுடுங்க'' என்று உத்தரவிட்டதுதான் தாமதம், வந்திருந்த விடுதிப் பிள்ளைகள் அத்தனை பேரும் சேர்ந்து ''டுர்ன்னான்'' என்று கூவிக் கொண்டே கட்டியிருந்த மாடுகளை அவிழ்த்து விட்டு, 'ஹே' 'ஹே' என்று விரட்டினர்.

சிறிது நேரம் வரை ஒரே கூச்சலும், குழப்பமுமாகயிருந்தது. மாடுகள் எப்படி மாயமாய் ஓடிப் போயின? செண்பகமும் செந்திலும் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை!



அபிராமியின் துணிச்சலையும் பொறுப்பான நடத்தையையும், சக்ரவர்த்தியும், தங்க மாமாவும் பாராட்டினார்கள்.

''நான் பிரமாதமா எதுவும் செய்திடல்லியே. 'பாதகம் செய்வோரைக் கண்டால், மோதி மிதித்து விடு பாப்பா' என்று பாரதி சொன்ன சொல்லுக்கு எத்தனை உயிர்த் துடிப்பு இருக்குன்னு நண்பர்களின் உதவியோடு காட்டினேன். அவ்வளவுதான்'' என்றாள் அபி ராமி.

அடுத்த நாள் வகுப்புகள் துவங்கும் நேரம் - பிரார்த்தனைக் கூடத்திலிருந்து பிள்ளைகள் வரிசை வரிசையாக வகுப்புகளுக்குச் சென்று கொண்டிருந்த சமயம், குயில் பரபரப்புடன் ஓடி வந்து, ''அபிராமி! அபிராமி! அவங்க... அதான்... மாடுகளை நம்ம பள்ளி வேலியிலே கட்டி சண்டைக்கு வந்தவங்க. இப்போ இன்னும் நான்கு பேரோட வந்து... பள்ளிக்கூட விடுதி, சமையற்கூட ஜன் னல் சுவத்திலே எல்லாம் சாணியைத் தட்டித் தட்டி வைக்கிறாங்க'' என்றாள்.

''அப்படியா! வேணும்னே வம்புக்கும், வலுச்சண்டைக்கும் நிக்கிறாங்கன்னு தோணுது. வாங்க எல்லாரும் என்னான்னு போயி கேட்கலாம்'' என்று கிளம்பினாள் அபிராமி. மற்றவர்களும் கூடவே புறப்பட்டனர்.

''ஏய்! என்னயிது அக்கிரமம்? அன்னிக்கும் மாடுகளைக் கட்டி அசுத்தப்படுத்த வந்தீங்க. இன்னிக்கு சாணியை பள்ளிச் சுவத்திலே தட்டறீங்களே? இது உங்களுக்கே நல்லாயிருக்கா? என்ன வந்தது உங்களுக்கு? ஏன் இப்படி வம்புக்கு நிக்கிறீங்க?'' என்று கேட்டாள் அபிராமி.

''கேட்கிறமில்லே. பதில் சொல்லுங்க!''

''வாயிலே என்ன கொழுக்கட்டையா?''

''இல்லை. சாணி உருண்டையா?'' - அபிராமியும், மற்ற குழந்தைகளும் மாறி மாறிக் கேட்டனர்.

சாணி தட்டிக் கொண்டிருந்தவர்கள் பதிலளிக்கவே இல்லை. தங்கள் வேலையிலேயே முனைப்பாக இருந்தனர்!

''சரின்னு ஒரு வார்த்தை சொல்லு அபிராமி, இந்தச் சாணி தட்டிக் கூட்டத்தை சாணி உருண்டையாலேயே அடிச்சு விரட்டிக் காட்றோம்'' என்று ஆவேசத்துடன் சொன்னான் அரவிந்தன்.

''அப்படிச் செய்தா, அவங்களுக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லாமே போயிடும். நீங்க பேசாமயிருங்க. நான் கவனிச்சுக்கிறேன்'' என்று அவங்களை அடக்கி விட்டு செண்பகத்திடம் திரும்பி, ''இதோ பாரு, ஏன் இப்படி வேணும்னு செய்யறே? எங்க விடுதி சுவத்திலே தட்டின சாணியை எல்லாம்




ஏசு பிறந்தார்; ஏசு பிறந்தார்!
இறைமகன் பிறந்தாரே! - எங்கள்
மாசில் லாத மரியாள் வயிற்றில்
மகனாய் பிறந்தாரே!

மாட்டுத் தொழுவில் மன்னவன் ஏசு
மகிழ்வுடன் பிறந்தாரே! - உலக
மீட்பர் நானென அண்டம் முழுதும்
வியக்கப் பிறந்தாரே!

விண்மீன் தோன்றி விளக்க மளித்த
விமலன் பிறந்தாரே! - இங்கே
விண்ணும் மண்ணும் வியந்து போற்ற
வித்தகன் பிறந்தாரே!

பாவிகள் தம்மை ரட்சித் தருள
பரமன் பிறந்தாரே! - தூய
ஆவி யாரின் அருளைப் பெற்ற
அற்புதன் பிறந்தாரே!

- அ. சுப்பையன், செட்டிகுறிச்சி.

மரியாதையா எடு'' என்று மிரட்டினாள் அபிராமி.

''என்ன பண்ணுவே எடுக்கலேன்னா? அடிப்பியா? உதைப்பியா? 'டுர்'ன்னா...'' என்றாள் செண்பகம்.

''உனக்குத் தெரிஞ்ச கலைகள் எல்லாம் எனக்கும் தெரிஞ்சிருக்கணும்னு அவசியமில்லை. முதல்ல சுவத்திலே தட்டியிருக்கிற சாணியை எடுக்கப் போறியா இல்லியா?''

''முடியாது. நீ என்ன செய்வியோ செய்துக்க...''

''சரி, தள்ளு. நானே சுவத்திலே தட்டியிருக்கிற சாணியை எடுத்து அப்பாலே போடறேன்.''

''தொட்டே, நான் பொல்லாதவளா மாறிடுவேன்.''

''இப்போ மட்டும் நல்லவள்னு நினைப்பா?'' என்று கேட்டு சுவற்றில் தட்டியிருந்த சாணத்தையெடுத்து சுத்தம் செய்யப் புறப்பட்டாள் அபிராமி.

''வேண்டாம்! என்னைப் பத்தி உனக்குத் தெரியாது. என் கோபம் என்ன பண்ணும் தெரியுமா?'' என்று கேட்டுக் கொண்டே அபிராமிக்கு எதிரில் வந்து சீற்றத்துடன் நின்றாள் செண்பகம்.


விடுதிக் குழந்தைகள், ''வேண்டாம் அபிராமி! வா போயி பெரியவங்களைக் கூட்டிக்கிட்டு வரலாம்'' என்று தடுத்தார்கள்.


''பேசாமயிருங்க. இந்தப் பொண்ணு என்னதான் செய்யறான்னு பார்த்திடலாம்'' என்று சொல்லிக் கொண்டே அபிராமி நகர்ந்தாள்.

''வேண்டாம்... சொல்லிட்டேன்.. மருவாதையா போயிடு! இல்லேன்னா மருவாதை கெட்டுப் போயிடும்'' என்று உறுமிக் கொண்டே கையில் சாணியைப் பெரிய உருண்டையாக எடுத்துக் கொண் டாள் செண்பகம்.

அபிராமி முன்னேறினாள். செண்பகம் சாணி உருண்டையை வீசக் கையை ஓங்கினாள்.

(தொடரும்)






## செவ்வகங்களைச் சேருங்கள் - போட்டி

இங்கே மொத்தம் 18 துண்டுகள் உள்ளன. இவை ஒரே அளவிலான மூன்று செவ்வகங்களில் இருந்து வெட்டப்பட்டவை. இவைகளைக் கத்தரித்து, செவ்வகங்களாக ஒட்டி அனுப்பி வையுங்கள். பரிசு இல்லாமலா? கூப்பனோடு அனுப்ப வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.





## செவ்வகங்களைச் சேருங்கள் - போட்டி

பெயர் : ....................................

வயது : ....................................


முகவரி : ....................................

....................................

....................................

பின்கோடு : ....................................

முடிவு தேதி 15.12.93



# MAKE MUSIC WITH GOKULAM THIS DECEMBER

* *HOW DID MUSIC BEGIN?*
* *MUSIC AND YOU!*

*+ ALL OUR REGULAR FEATURES*

**DON'T MISS THIS ISSUE!**


# GOKULAM

*The monthly magazine for children*

GOKULAM, EKKADUTHANGAL, MADRAS - 600 097

**BUY YOURSELF A COPY TODAY!**

96 PAGES FOR JUST Rs. 3/-



# திமிங்கலத்தின் திமிர்!

கடல் அரசனான திமிங்கலத்திற்கு ஓர் அழகான ஆண் திமிங்கலக் குட்டி இருந்தது. தான் இளவரசன் என்பதை எண்ணியும், தனக்கு நிகர் கடலில் யாருமே இல்லை என்பதை எண்ணியும் இளவரசனுக்கு அளவில்லாத பெருமை. கர்வம் கூட. அதனால் கடலில் வாழ்ந்த, போகின்ற வருகின்ற எல்லா உயிரினங்களையும் வம்புக்கு இழுத்து உதைத்து அனுப்பி வந்தது. எல்லா உயிரினங்களும் கடலரசனான பெரிய திமிங்கலத்திடம் முறையிட்டன.

இளவரசனை அழைத்த திமிங்கல அரசர், ''கடலில் நாம்தான் பலம் மிக்கவர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அதற்காக செருக்கடையக் கூடாது. கடலில் உள்ள உயிரினங்களைக் காப்பது அரச குடும்பத்தாராகிய நமது கடமை. நமது குடிமக்களை அன்புடன் காத்து அவர்களது அன்புக்குப் பாத்திரமாக வேண்டுமே தவிர, இப்படி நமது பலத்தைக் காட்டி பயப்படுத்துவது நல்லதல்ல. இந்த வழக்கத்தைக் கைவிடு'' என்று புத்திமதி கூறியது.

திமிங்கல இளவரசன், தந்தை கூறியதைக் கேட்கவில்லை.

''இளவரசனான நான் எதற்காக மற்றவர்களுக்குத் தலைவணங்க வேண்டும்? நான் ஒன்றும் கோழை இல்லை. என்னுடைய வலிமைக்கும் வீரத்திற்கும் மற்றவர்கள் தலைவணங்கி மதிப்புக் கொடுத்தே ஆக வேண்டும்'' என்று திமிராகப் பேசியது இளவரசன்.

''இளவரசே, இப்படிச் செருக்குடன் பேசாதீர்கள். வல்லவனுக்கு வல்லவன் உலகில் உண்டு. மனிதர்கள் மனது வைத்தால் நம்மைப் பிடித்து விடுவார்கள். அவர்களுக்கு நம்மளவுக்கு உடல் வலிமை இல்லை என்றாலும், அறிவு பலம் உண்டு என்பதை மனத்தில் வையுங்கள்'' என்றது அமைச்சர் திமிங்கலம்.


''அற்ப மனிதர்களைக் கண்டு அஞ்சும் உங்களைப் போன்றவர்கள் நம் இனத்திற்கே தலைகுனிவு ஏற்படுத்துபவர்கள். இப்பொழுதே மனிதர்களை ஒருகலக்குக்கலக்கிவிட்டு வருகிறேன்'' என்று திமிருடன் மேலே வந்தது இளவரசன்.

மீன் பிடித்துக் கொண்டிருந்த இரண்டொரு படகுகளை இளவரசன் கவிழ்த்து விட்டு செருக்குடன் அங்குமிங்கும் நீந்தி மேய்ந்தது.

அடுத்த நாள் ஒரு பெரிய கப்பலில் மனிதக் கூட்டம் வந்தது. செருக்குடன் மேலே வந்த இளவரசன் அந்தக் கப்பலைக் கவிழ்க்க முயன்றது. கப்பலில் இருந்தவர்கள் உறுதியான நைலான் வலையை வீசினர். திமிருடன் திரிந்த திமிங்கல இளவரசன் அந்த வலையில் சிக்கிக் கொண்டது. தப்பிக்க எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை.

செருக்கடையும் எல்லோருக்குமே இதுதான் முடிவு.

– S.R. பாபுராஜ்




## கம்பளி

எங்கள் அறிவியல் ஆசிரியர் ''உங்களைப் பொதுவான கேள்விகள் கேட்கப் போகிறேன்'' என்றார். நாங்கள் அனைவரும் தயாரானோம். முதலில் என்னை எழுப்பி 'புனுகு எதிலிருந்து கிடைக்கிறது?' என்று கேட்டார். ''புனுகுப் பூனையிலிருந்து கிடைக்கிறது'' என்றேன். ''சரி உட்காரு'' என்றார். பின்பு என் நண்பன் கார்த்திகேயனை எழுப்பி ''பட்டு எதிலிருந்து கிடைக்கிறது'' என்று கேட்டார். ''பட்டுப் பூச்சியில் இருந்து'' என்றான் அவன். ஒரு குறும்புக்கார மாணவனை எழுப்பி, ''கம்பளி எதிலிருந்து கிடைக்கிறது?'' என்று கேட்க, ''கம்பளிப் பூச்சியிலிருந்து'' என்று அவன் சொல்ல, எல்லோருக்கும் சிரிப்புன்னா சிரிப்பு!. இன்றும் கூட அவனை ''கம்பளி'' என்று கூப்பிட்டால் தானும் சிரிப்பான் பிறரையும் சிரிக்க வைப்பான்.

- ஆர். ஜெயகாந்தன்.




## யாரை நம்புவது?

பிச்சைக்காரன் ஒருவன் தெரு வழியாகப் பிச்சை எடுக்க நடந்து வந்து கொண்டிருந்தான். அவன் கழுத்தில் ஒரு மரப்பலகையில் ''நான் குருடன் காசு போடுங்கள்'' என்று எழுதித் தொங்க விடப்பட்டிருந்தது. அதைக் கண்டு இரக்கப்பட்ட ஒரு கனவான் ஓர் அரை ரூபாய் நாணயத்தை பிச்சைகாரன் வைத்திருந்த பாத்திரத்தில் போட்டார். காசு பாத்திரத்தின் விளிம்பில் பட்டு உருண்டு சற்றுத் தூரத்தில் விழுந்தது. உடனே பிச்சைக் காரன் ஓடிப்போய் அந்தக் காசை எடுத்தான்.

இதைப் பார்த்து கனவான் ''அடடே! உனக்குக் கண் நன்றாகத் தெரி




கிறதே! நீ குருடன் இல்லையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அவனும் ''இல்லை. நான் ஊமை என்று பலகையில் எழுதச் சொல்லி எழுதியவனிடம் பணம் கொடுத்தேன். அவன் பலகையில் குருடன் என்று எழுதி என்னை ஏமாற்றி விட்டான். உலகம் ரொம்ப மோசமாகி விட்டது. இந்தக் காலத்தில் யாரைத் தான் நம்புவதோ?'' என்றான்.

கனவானும் சலித்துக் கொண்டே ''ஆமாம் ரொம்ப சரியாகச் சொன்னாய்'' என்று ஒரு ஏளனச் சிரிப்புடன் சென்று விட்டார்.

- ர. கிருஷ்ணகுமார்.

## விட்டுப் போன ''ஈ''

**நா**னும் என் நண்பனும் காப்பி சாப்பிட ஓட்டலுக்குச் சென்றோம்.





அங்கே பெயர்ப் பலகையில் Coffe என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்த என் நண்பன் நகைச்சுவையாக என் விடம், ''டேய், இதில் விட்டுப் போன E (ஈ), நாம் குடிக்கப்போகும் காப்பியில் இருந்தாலும் இருக்கும்'' என்றான். அதைக் கேட்ட நானும் ஓட்டல் முதலாளியும் சிரித்தோம். முதலாளி போர்டைத் திருத்துவதற்கு ஏற்பாடு செய்தார்.

- பா. ஜெயக்குமார்.

## அம்மாவுக்கு புத்திமதி!

**என்** பையனுக்கு வயது ஐந்து. முதல் வகுப்பில் படிக்கிறான். இந்தியும் கற்றுத் தருகிறார்கள். எனக்கு இந்தி



சரியாகத் தெரியாது. ஒரு நாள் காலை வழக்கம் போல் பாடங்களைப் படிக்கச் சொன்னேன். அவனும் படித்தான். இந்தி பாடம் படிக்கும் போது ஏதோ சந்தேகம். சமையலறையில் இருந்த என்னிடம் நோட்டுடன் வந்து, ''இது என்ன?'' என்று கேட்டான். ''தெரியலையே!'' என்றேன். ''இத்தனை பெரிய பெண்ணா இருக்கியே! இது கூடத் தெரியலன்னா எப்படி?'' என்றான். கூடவே. ''மகள்'' என்று அவனே தன் சந்தேகத்திற்கு விடை கூறினான்.

''தெரிந்து வைத்துக் கொண்டே ஏன்டா என்னைக் கேட்டாய்?'' என்றேன். ''இதெல்லாம் பெரியவங்க தெரிஞ்சி வச்சிண்டாத்தான் என்னை மாதிரி சின்னவங்களைப் படிக்க வைக்க முடியும்!'' என்றானே பார்க்கலாம். அந்த யோசனைக்குப் பின் நானும் இந்தி கற்று வருகிறேன்.

– அ. ராபியாபிதீன்.

## பாப்கார்ன்

**நா**னும் என் தம்பியும் சினிமாவிற்குச் சென்றோம். தம்பிக்கு பாப்கார்ன் வாங்கிக் கொடுத்தேன். படம் ஆரம்பமாகிவிட்டது. அவன் படம் பார்க்காமல் பாப்கார்ன் தின்று கொண்





டிருந்தான். நான் படம் பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று அவன் என்னிடம் ''அண்ணா பக்கத்திலிருப்பவர் பாப்கார்ன் திங்கிறார்'' என்றான். நான், ''அவர் தின்றால் உனக்கென்ன?'' என்று கேட்டேன். ''அவர் தின்பது என்னுடைய பாப்கார்ன்'' என்றான் தம்பி. இதைக் கேட்டதும் அருகில் இருந்தவர்கள் சிரித்தனர்.

– த. ஜம்புலிங்கம்.

## அவியல் கணக்கு

**நா**ன் பத்தாம் வகுப்புப் படிக்கிறேன். ஒருநாள் எங்கள் கணித




ஆசிரியர் 'அளவியல் பற்றிய கணக்குகள்' என்று கணக்கு நோட்டில் பகுதி பெயரை எழுதச் சொன்னார். எனக்குப் பக்கத்திலிருந்த நண்பன் 'அளவியல்' என்று எழுதுவதற்குப் பதிலாக 'அவியல்' என்று எழுதிவிட்டான். ஆசிரியரிடம் நோட்டை அவன் எடுத்துச் செல்வதற்குள் நானே அதைக் கண்டு பிடித்துத் திருத்திவிட்டு அவனிடம் சொன்னேன். அவனும் கூடவே சிரித்து விட்டான். இப்பொழுதும் கூட நாங்கள் இருவரும் எப்போதாவது இதைச் சொல்லிச் சொல்லிச் சிரிப்போம்.

– பி. கஜய்குமார்.

## வீரத் தழும்பு


**என்** தம்பிக்கு ஏழு வயது ஆகின்றது. எப்போதும் ஏதாவது விஷமம் செய்துக் கொண்டே இருப்பான். ஒரு நாள் என்னுடைய பேனாவை எடுத்து ஒளித்து வைத்து விட்டான். இது



தெரிந்ததும் நான் அவனை அடிக்கச் சென்றேன். அவன் என்னிடமிருந்து தப்பிக் கொள்ள ஓடினான். கால் இடறி சிறிய காயம் ஏற்பட்டது. இதனால் நானும் என் தம்பியும் பேசிக் கொள்ள வில்லை. அன்று மாலை அப்பா அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு வந்த போது காயத்தைப் பார்த்து 'என்னடா இது?' என்று கேட்டார். தம்பி உடனே 'ஒன்றுமில்லை அப்பா! எனக்கும் என் சகோதரிக்கும் ஏற்பட்ட தர்ம யுத்தத்தில், எனக்குக் கிடைத்த வீரத்தழும்பு'' என்று கூறியதுதான் தாமதம் நானும் கோபத்தை மறந்து எல்லோருடனும் சேர்ந்து சிரித்து விட்டேன்.

- ஜி. கவிதா.

# திருடாதே



**வா**சம் மிகுந்த நெய்யிலே
வட்ட வட்ட வடிவிலே
நேசம் மிகுந்த அன்னையும்
நிறைய முறுக்குச் செய்தனள்!

பாசம் மிகுந்த பையனாம்
பால முருகன் கையிலே
ஆசை தீரத் தின்னவே
அள்ளி அள்ளித் தந்தனள்!

ஊசல் பலகை மீதிலே
ஒளித்து வைத்து மீதியை
வாசல் கடந்து அன்னையும்
வழியில் போகக் கண்டனன்!

தூசு பறக்க வீட்டினுள்
துள்ளிப் பாய்ந்து ஓடியே
மேசை போட்டுத் தேடியே
மேலும் திருடித் தின்றனன்!

வீசி ஆடும் பலகையின்
விழுது அறுந்து சரியவே
ஊசிக் காலும் ஒடியவே
உருண்டு ரத்தம் சிந்தினன்!

தேசம் வியக்கும் தீரனாய்த்
திகழும் விருப்பம் கொண்டவன்
மாசுத் திருட்டுக் குணத்தினால்
மரணம் வரைக்கும் நொண்டினன்!

- தளவை. இளங்குமரன்





# விண்வெளி யுகம்

இந்தக் காலத்தை விண்வெளியுகம் என்று பலர் கூறுகிறார்களே. விண்வெளியுகம் எப்பொழுது பிறந்தது? விண்வெளி என்பது எங்கே தொடங்குகிறது? அதற்கு ஏதாவது எல்லைக் கோடு உண்டா?

திருத்தமாகச் சொல்வதானால், விண்வெளியுகத்துக்கு மூன்று பிறந்தநாட்கள் அல்லது பிறப்புக் காலங்கள் உண்டு என்று சொல்வதே பொருந்தும். முதலாவதாக அது கற்பனையில் பிறந்தது! இரண்டாவதாக அறிவில் (ஆராய்ச்சியில்). மூன்றாவதாக செயலில்.

அதன் முதல் பிறந்த நாள் எப்பொழுது என்று ஆண்டு, மாதம்,



தேதிகளைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. பண்டைக்கால மனிதன் தன்னுடைய தலைக்கு உயரே பறவைகள் பறப்பதைக் கண்டான். அவற்றைப் போல் தானும் உயர உயரப் பறக்க வேண்டும் என்று ஆசை கொண்டான். ஏன் சந்திரனைப் போய் எட்டக் கூடாது என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அங்கே போனதாகக் கூடக் கற்பனை செய்தான். அதுதான் முதலாவது பிறப்பு. ஆனால், உண்மையாக விண்வெளியுகம் தொடங்கிய நாள் 1957-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 4-ஆம் தேதியாகும். அன்றுதான் ரஷ்யா விண்வெளியில் வீசிய ''ஸ்புட்னிக்'' பூமியைச் சுற்றி வரும் துணைக்கோளாக அமைந்து, அங்கிருந்தவண்ணம் கீச்சுக் கீச்சென்று ஒலிகளை அனுப்பி வந்தது. ''ஸ்புட்னிக்'' என்ற சொல்லுக்கு ''குட்டிச் சந்திரன்'' என்பது பொருள். சந்திரன் பூமியைச் சுற்றி வருவது போல், அதுவும் விண்வெளியில் பூமியைச் சுற்றி வந்ததாலும், அது சிறிதாக எடை உடையதாக இருந்ததாலும் அப்பெயர் அதற்குச் சூட்டப் பட்டது.



அந்தக் காலம் சர்வதேசிய பூ-பௌதிக ஆண்டு என்று சூட்டப்பட்ட ஆண்டின் இடைக் காலம்.

அந்த ஆராய்ச்சி சம்பந்தமாகவே ஸ்புட்னிக் விண்வெளியில் வீசப்பட்டது. அதை அடுத்து விரைவில் அமெரிக்காவும் விண்வெளியில் ஒரு துணைக்கோளை வீசியது. அவ்விரண்டுமாகத் தொடங்கிய யுகம்தான் விண்வெளி யுகம்.

நமது பூமியைச் சுற்றி வாயு மண்டலம் ஒன்று, மெல்லிய போர்வையைப் போல் அதைப் போர்த்தி இருக்கிறது. அது பூமியின் ஈர்ப்புச் சக்தியால் இழுத்துப் பிடிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தி குறைந்து போனால், வாயு மண்டலம் இருக்காது. அதில் உள்ள வாயுக்கள் விண்வெளியில் ஓடி விடும். சந்திரனில் இருந்த வாயுக்கள் இப்படித்தான் ஓடி விட்டன.

பூமியின் அருகே வாயு மண்டலத்தில் அழுத்தம் அதிகம். அங்கேதான் வாயுக்களின் செறிவும் அதிகம். பூமியிலிருந்து மேலே செல்லச் செல்ல, வாயு மண்டலத்தின் செறிவும், பளுவும் குறைகின்றன. நெடுந் தொலைவுக்கு அப்பால் இவை இல்லாத நிலை ஏற்பட்டு விடுகிறது. இதுதான் காண முடியாத, ஊகிக்க இயலாத எல்லைப் பகுதி.

தற்போது செய்யப்படும் ஆராய்ச்சிகளெல்லாமே இரண்டாவது, மூன்றாவது பிறப்பு காலங்கள் தொடர்பானவையே. இவற்றில், இங்கு நாம் உண்மையென்று எண்ணிக் கொண்டிருக்கும் பல நம்பிக்கைகள் தகர்க்கப்படுகின்றன. அதுவும் முழுமையான அறிவியல் ஆதாரங்களுடன்! இவைகளை மேலும் மேலும் விளக்கி ஆராய்ச்சி செய்ய முட்டுக்கட்டையாக இருப்பது வேகம்தான். இந்த வேகத்தை இன்னும் விரைவுபடுத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதை வெற்றி கொண்டால் மனிதனால் அறியப்படாத இன்னும் பல புதிய செய்திகள் வருங்காலத்தில் வெளிப்படும் என்பது உறுதி.

- தக்கோலன்

# கேளுங்கள் சொல்லப்படும்!

சேரநம்பி

★ எச்.எம்.வி. சின்னத்தில் இடம்பெற்றுள்ள நாயின் பெயர் என்ன? - கு. செல்வ ரமணன், செஞ்சி.

எச்.எம்.வி. சின்னத்தில் வந்து உலகப் புகழ்பெற்று விட்ட நாயின் பெயர் நிப்பர் (NIPPER). இது நன்றிக்கு நிரந்தரமான எடுத்துக்காட்டு!

★ கோகுலத்தைத் தவிர, வேறு எந்தச் சிறுவர் பத்திரிகையாவது பெண்களை ஆசிரியராகக் கொண்டு தமிழில் வெளி வந்திருக்கிறதா? - நா. கலைச் செல்வி, புதுக்கோட்டை.

கோகுலத்தைக் கூட நீங்கள் இதில் சேர்க்க முடியாது. பெண் ஆசிரியரைக் கொண்டு தமிழில் வெளி வந்த ஒரே சிறுவர் பத்திரிகை 'ரவி' என்பது மட்டுமே. இது ஓர் மாதப் பத்திரிகை.. 1950களில் இது வெளிவந்து நின்று போனது. இதன் ஆசிரியை அமரர் எஸ். சாந்தலக்ஷ்மி அவர்கள்.

★ மரம் நடுவிழா என்று ஆண்டுதோறும் கொண்டாடுகிறார்களே... இது யாரால் தொடங்கப் பட்டது? - வ. முத்து லட்சுமி, கோட்டையூர்.

இதை 'வன மகோத்சவம்' என்று குறிப்பிடுவார்கள். இதன் தமிழாக்கமே மரம் நடுவிழா. புகழ்பெற்ற பா ர தீ ய வித்யா பவனின் அமைப்பாளரான கே. எம். முன்ஷி அவர்கள்தான் மத்திய அமைச்சராக இருந்த போது இதை 1950 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார். அழிந்து வரும் மர வளத்தை ஈடுசெய்ய வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்துடன் இது ஆரம்பிக்கப்பட்டது. உலகக் காட்டுவளம் காக்கும் நாள் (வேர்ல்டு ஃபாரெஸ்டரி டே) என்று இது ஆண்டுதோறும் மார்ச் 21-ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

★ கடையேழு வள்ளல்கள் என்று ஏழு பேர்களைக் குறிப்பிடுகிறார்களே, அப்படியானால் முதலேழு, இடையேழு வள்ளல்கள் இருந்திருக்கிறார்களா? - வெ. மாணிக்கம், து. சுப்புராஜ், திருக்கடையூர்.

இருந்திருக்கிறார்கள். குமணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி ஆகியோர் முதலேழு வள்ளல்கள். அக்ரூரன், அந்திமான், அரிச்சந்திரன், கர்ணன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன் ஆகியவர்கள் இடையேழு வள்ளல்கள். இதில் கவனிக்க வேண்டியது, முதலேழு இடையேழு வள்ளல்களில் பெரும்பாலோர் புராண, இதிகாச நாயகர்கள்.

★ பின்கோட் என்பதன் முழு விரிவாக்கம் என்ன? - வெ. சிவசாமி, புவனகிரி.

Postal Index Number Code என்பதே இதன் விரிவாக்கம். இதன்படி முதல் எண் Region பிராந்தியம், 2-வது எண் மாநிலம் (அ) தபால் வட்டத் தையும், 3-வது எண் மாவட்டத்தையும், 4-வது எண் தபால் வட்டத்தையும் கடைசி இரு எண்கள் அஞ்சலகத்தையும் குறிக்கும்.

★ தபால்தலைகளை நாக்கில் தடவி ஒட்டுவது கெடுதல்தானே? - கு. ரங்கமணி, ஹோசூர்.

மிகவும் கெடுதல். கோந்துகளில், அவை கெட்டுப் போகாமல் இருக்க (பிரிசர்வேடிவ்) ஓர் இரசாயனப் பொருளைக் கலக்கி வைக்கிறார்கள். இது உடலுக்குக் கெடுதல். அதுமட்டுமல்ல, தபால் தலைகளை நாக்கில் தடவி ஒட்டு

வது என்பது எத்தனை அநாகரீகமான செயல்? என்ன சொல்லி என்ன பயன்? அமெரிக்காவில் ஜான் கென்மையர் என்பவர் நான்கு நிமிடங்களில் 393 தபால் தலைகளை நாக்கில் தடவி ஒட்டி உலக சாதனை நிகழ்த்தி கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெற்று விட்டார். இதை முறியடிக்கும் ஆசை இந்தியர்களுக்கு வராமல் இருந்தால் சரி!

★ வால்மீகி முனிவரின் இயற்பெயர் என்ன? - வள்ளி. மங்கை, கடையூர்.
இரத்னாகர் என்பதுதான் இவரது இயற்பெயர். இவர் வழிப்பறிக் கொள்ளைக்காரராக இருந்து முனிவரான பிறகு வால்மீகியானார்.

★ ஐ.க்யூ. (I.Q.) என்கிறார்களே, இதன் பொருள் என்ன? - பூ. இரத்தினசபாபதி, புதுக்கோட்டை.
இது ஒரு புத்தகமே எழுத வேண்டிய கேள்வி! Intelligence Quotient என்பது இதன் விரிவாக்கம். அறிவு செயலாற்றும் திறமையின் அளவு என்று இதைத் தமிழில் கூறலாம். உடல் வளர்ச்சிக்கு ஏற்ற அறிவு வளர்ச்சியோ வயதுக்கு ஏற்ற அறிவு வளர்ச்சியோ சிலருக்கு இருக்காது. வயதுக்குரு ஏற்ற அறிவுத் திறன், எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு அளவு வைத்திருக்கிறார்கள். இதையை ஐ.க்யூ. என்கிறார்கள்.

வயதுக்கு ஏற்ற உடல் வளர்ச்சி, உடல் வளர்ச்சிக்கு ஏற்ற உடல் எடை என்று ஒரு கணக்கு (அளவு) வைத்திருக்கிறார்களே, அதேபோல்தான் இது.

★ பல் சக்கர ரயில் பாதையை யார் கண்டுபிடித்தார்கள்? - மு. சேதுபதி, மேட்டுப்பாளையம்.
உங்கள் ஊரில் அமைந்துள்ள பல் சக்கர ரயில் பாதையைக் கண்டுபிடித்தவர் BLENKNGSOP என்ற இத்தாலியர். கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு 1812. ஆனால் இது மலைப் பகுதிகளில் 1869-ஆம் ஆண்டில்தான் அமைக்கப்பட்டது. BLENKNGSOP அப்பொழுது உயிருடன் இல்லை.



## முடியுமா?

எத்தனை பேர் உலகத்திலே
பிறக்கிறார்? - நாளும்
எத்தனை பேர் உலகத்திலே
இறக்கிறார்?
எத்தனை பேர் இறந்த பின்னும்
நிலைக்கிறார்?
எண்ணிப் பார்த்துக் கணக்குச் சொல்ல
முடியுமா?

செயற்கரிய செய்தவர்கள்
மட்டுமே - உடல்
செத்த பின்னும் புகழ் வடிவில்
நிலைக்கிறார்
செயற்குரிய கூடச் செய்ய
மறப்பவர் - உயிர்
சுமந்து கொண்டே
நடைப்பிணமாய்
அலைகிறார்!

- ரா. பொன்ராசன்

# மகிழ்ச்சியின் விலை!



கிரேகுவார் ஓர் ஏழை செருப்புத் தொழிலாளி. காலை முதல் மாலை வரை மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டே வேலை செய்வான். அவனைப் பார்க்கவும், அவன் பாட்டைக் கேட்கவும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். அவனைப் போன்று மிக்க மகிழ்ச்சி யுடையவர் வேறு யாருமே இல்லை எனலாம்.

கிரேகுவரின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் ஒரு பெரிய செல்வந்தன் இருந்தான். அவன் ஏராளமான பொன்னைச் சேர்த்து வைத்திருந்தான். அவனும் சிறிது நேரம் பாடுவான். அதைவிடக் குறைவாகத் தூங்குவான். இரவெல்லாம் கண் விழித்திருப்பான். காலையில் தூங்கத் தொடங்கும் போது செருப்புத் தொழிலாளியின் பாட்டு அவனை எழுப்பி விடும்! தூக்கத்தில் எழுப்பி விட்டானே என்று அவன் மிகவும் வருந்துவான். உணவு, உடை வகைகள் போலத் தூக்கம் கடையில் கிடைப்பதில்லை அல்லவா?

செல்வந்தன் ஒருநாள் கிரேகுவாரை அழைத்து வரச்சொன்னான். அவன் வந்தவுடன், ''கிரேகுவார்! ஓர் ஆண்டில் நீ எவ்வளவு சம்பதிப்பாய்'' என்று கேட்டான் செல்வந்தன்.

''ஆண்டுக்கா....! அப்படிக் கணக்கிட எனக்குத் தெரியாது. இது உண்மை! சேர்த்து வைக்கும் பழக்கம் எனக்கில்லை. காலத்தை ஓட்டி ஓர் ஆண்டை முடித்தாலே போதாதா? அன்றாடத் தேவைக்குச் சம்பாதிக்கிறேன்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் கிரேகுவார்.

அதற்குச் செல்வந்தன், ''சரி, சுமாராகவாவது ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பாதிக்கிறாய்? சொல்லேன்?'' என்று மீண்டும் கேட் டான்.

''சில நாட்களில் அதிகம் வரும். சில நாட்களில் குறை வாக வரும். எனக்குப் பற்றாக்குறை எப்போதும் இருக்கும். ஆண்டில் பல நாட்களுக்கு வருமானமின்றி இருப்பேன். விழாக்கள், பண்டிகைகள் வேறு தொல்லை கொடுக்கும்,'' என்றான் கிரேகுவார்.

கிரேகுவாரின் கபடமில்லாத பேச்சைக் கேட்ட செல்வந்தன் நகைத்தான்.



"உன்னை நான் இன்று அரியணையில் அமர வைக்கப் போகிறேன். இந்தா - இந்த நூறு பொற்காசுகளை வாங்கிக் கொள். இவற்றைப் பத்திரமாக வைத்துக் கொண்டு தேவைக்குப் பயன்படுத்து" என்று சொன்னான் செல்வந்தன். அதைப் பெற்ற கிரேகுவாருக்கு 'தான்' உலகத்திலுள்ள எல்லாப் பணத்தையுமே வைத்திருப்பதாகத் தோன்றியது. மக்கள் நூறாண்டு காலத்துக்குச் செலவு செய்யத் தேவையான பணம் அது என்று எண்ணினான்.

வீடு திரும்பிய கிரேகுவார் அந்தப் பணத்தை நிலவறையில் வைத்துப் பூட்டினான். பணத்தை மட்டுமா வைத்துப் பூட்டினான்? தன் மகிழ்ச்சியையும் தான்! பாட வேண்டும் என்ற ஆசையே அவனுக்கு எழவில்லை! அவன் தன் குரல் வளத்தை இழந்தான்;

தூக்கம் அவனை விட்டு விலகிப் போனது; கவலைகள், சந்தேகங்கள், பயனற்ற அச்சங்கள் ஆகியவை விருந்தினர்களாக அவனிடம் வந்து ஒட்டிக் கொண்டன!

தினமும் அந்தப் பொற்காசுகளை எண்ணிப் பார்த்தான். இரவில் பூனை கத்தும் சத்தத்தைக் கேட்டாலும் உடனே அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிடும். அது திருடனாக மாறி பணத்தை எடுத்துக் கொண்டு விடுமோ என்று அர்த்தமில்லாமல் நினைப்பான். மனத்தில் நிம்மதியேயில்லாமல் நாட்கள் ஓடின.


திடீரென்று ஒருநாள் கிரேகுவார் பொற்காசுகளை எடுத்துக் கொண்டு செல்வந்தனிடம் சென்றான். கொடுத்தான்.

"நீங்கள் கொடுத்த பொற்காசுகள், இதோ! இதை நீங்களே திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள். என் மகிழ்ச்சியையும் என் தூக்கத்தையும் நான் திரும்பக் கொண்டு போக அனுமதியுங்கள்" என்று திரும்பினான்!

வீட்டுக்குத் திரும்பியதும் அளவிலான மகிழ்ச்சியும், நிம்மதியும் ஏற்பட்டது. பாட வேண்டும் என்ற ஆசை தோன்றியது! கிரேகுவார் மறுபடி பாடத் தொடங்கினான்.

- புத்தனாம்பட்டி சி. மணி.

# நான் மாட்டேன்



கண்ணன் குறும்புக்காரச் சிறுவன். உயிரினங்களுக்கு ஏதேனும் தீங்கு விளைவித்துக் கொண்டேயிருப்பான். அவை கஷ்டப்படுவதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பான்.

பறக்கும் வண்டுகளைப் பிடித்து முட்டை ஓட்டுக்குள் விடுவான். அவை முட்டை ஓட்டைத் தூக்கிக் கொண்டு பறக்கக் கஷ்டப்படும். தும்பியைப் பிடித்து இறக்கைகளைப் பிய்த்து நூலில் கட்டிப் பறக்க விட்டு வேடிக்கை பார்ப்பான். தெருவில் நாயோ, பன்றியோ போனால் போதும், கல்லை எடுத்து அவற்றின் முதுகைப் பதம்பார்த்து விடுவான். அவை வலியால் கத்திக் கொண்டே ஓடும்.

அம்மா அவனைப் பலமுறை கண்டித்து விட்டாள். ஆனால், அவனோ அவளது அறிவுரைக்குச் செவிசாய்ப்பதேயில்லை. உயிர்களுக்குத் தீங்கு விளைவிப்பது பாவம் என்பதை அவன் மனம் ஏற்கவே இல்லை.

திடீரென்று ஒரு நாள் கண்ணன் ஒரு கிளியைக் கொண்டு வந்து கூண்டில் போட்டு, 'நான் கிளி வளர்க்கப் போகிறேன்' என்றான். அதுவோ, 'கீக்கீ' என்று பரிதாபமாகக் கத்திக் கொண்டிருந்தது. பார்க்கவே பாவமாய் இருந்தது.

''டேய் பாவம்டா! அந்தக் கிளியை விட்டுடா'' என்று கெஞ்சிப் பார்த்தாள் அம்மா. கண்ணன் கேட்கவில்லை. 'நான் மாட்டேன்' என்று ஓடி விட்டான்.

ஒருநாள் காலை அம்மா கடைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். கடைவீதி தொலைவில் இருந்தது. அங்கு சென்று சாமான்கள் வாங்கி வர நேரமாகும். கண்ணனோ நன்கு தூங்கிக் கொண்டிருந்தான். அவன் தூங்கட்டும்.

எழுவதற்குள் சீக்கிரம் வந்து விடலாம் என்று எண்ணி வீட்டைப் பூட்டிக் கொண்டு போய் விட்டாள் அம்மா.

சிறிது நேரம் கழித்து கண்ணன் எழுந்து பார்த்தான். அம்மாவைக் காணோம். வீடு வேறு பூட்டப்பட்டிருந்தது. அம்மா வந்து விடுவாள் என்று நினைத்து உட்கார்ந்திருந்தான். அவன் அம்மாவோ வருவதாய்த் தெரியவில்லை.

நேரம் ஆக ஆக கண்ணனுக்கு எரிச்சலாக இருந்தது. தெருவினில் அவன் நண்பர்கள் விளையாடும் சப்தம் கேட்டது. கண்ணனுக்கு ஏக்கமாக இருந்தது. அவனுக்கு அழுகையே வந்து விடும் போல இருந்தது.

திடீரென்று மழை பிடித்துக் கொண்டு பெரிய இடி இடித்தது. கண்ணன் பயந்து போனான். அம்மா இப்படித் தன்னைத் தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டாளே என்று கலங்கி அழுதான். அப்போது கூண்டிலிருந்த கிளி ''கீ!கீ!'' என்று சப்தம் போட்டது.

கிளியையே உற்று நோக்கினான் கண்ணன். அதுவும் அவனையே பார்த்தது. ''உங்கம்மாவை விட்டு விட்டுச் சிறிது நேரம் கூட உன்னால் பிரிந்திருக்க முடியவில்லையே! என்னை எத்தனை நாட்களாகக் குடும்பத்தாரிடமிருந்து பிரித்து வைத்திருக்கிறாய்? இது நியாயமா?'' என்று அது அவனைக் கேட்பது போல் இருந்தது. மெல்ல எழுந்து கூண்டைத் திறந்து கிளியை எடுத்து சன்னல் வழியாக வெளியே பறக்க விட்டான். அது மகிழ்ச்சியோடு சிறகடித்துப் பறந்தது.

அம்மா சிறிது நேரம் கழித்து வந்தாள். ''ஏதோ ஊர்வலமாம். சாலையைக் கடக்க முடியலே. சுத்து வழியில் வந்தேன். அப்படியும் மழையில் சிக்கிக் கொண்டேன். எழுந்து ரொம்ப நேரமாச்சா? அம்மாவைக் காணமேன்னு தேடினியா?'' என்று பரிவோடு கேட்டு அணைத்துக் கொண்டாள். கண்ணனுக்கு இதமாக இருந்தது. 'கிளியின் சத்தத்தைக் காணோமே?' என்று கிளிக் கூண்டைப் பார்த்தாள் அம்மா. கூண்டு திறந்து கிடந்தது. ''கண்ணா, கிளி எங்கே?'' என்று கேட்டாள்.

'நீ என்னைக் கொஞ்சின மாதிரி அது தன்னோட குஞ்சுகளைக் கொஞ்சிக்கிட்டிருக்கும். நான்தாம்மா கூண்டைத் திறந்து அதற்கு விடுதலை தந்தேன். எல்லாம் நீ கதவைப் பூட்டிக் கொண்டு சென்றதால் வந்தது'' என்று கண்கலங்கக் கூறினான் கண்ணன்.



– பாளை. பசும்பொன்



# மீன் மழை- ரத்த மழை- தவளை மழை பெய்யுமா?

ஆலங்கட்டி மழை கேள்விப்பட்டிருப்பீர்கள்! மீன் மழை, தவளை மழை, இரத்த மழை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இப்படியெல்லாம் மழை பெய்யுமா என்று ஆச்சரியப்படாதீர்கள்! உண்மைதான். உலகின் பல பகுதிகளில் மீன்களும், தவளைகளும் மழை போல் கொட்டியதுண்டு. சிவப்பு, கறுப்பு நிறங்களில் மழையும் பெய்ததுண்டு.

1989-ல் நம் தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் இரத்த மழை பெய்ததாக பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வெளியாயின. உடனே பரபரப்பு ஏற்பட்டது. இச் செய்தியே எங்கும் ஆச்சரியமாக பேசப்பட்டது. ஆனால் உண்மையில் அது மனிதனின் இரத்தமோ அல்லது பிராணிகளின் இரத்தமோ இல்லை.

சிவப்பு நிறத்தில் உள்ள எந்தவொரு திரவத்தையும் மக்கள் உடனே இரத்தம் என்று கூறி விடுகின்றனர். காற்று மண்டலத்தில் மிதக்கும் செம்மண், சில வகைக் காளான்கள் காரணமாக பல நிறங்களில் மழை பெய்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்காவிலுள்ள சஹாரா பாலைவனத்தில் எழும் மணற்புயல் காற்று மண்டலத்தில் பல ஆயிரம் அடி உயரத்திற்குச் சென்று ஐரோப்பா வரை வருகிறது. பனியோ, மழையோ கொட்டுகையில் அதற்குச் சிவப்பு நிறம் ஏற்பட இதுவே காரணமாக அமைகிறது.

1755-ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தில் லொகார்னோ (Locarno) என்ற இடத்தில் இரத்தச் சிவப்பு நிறத்தில் 350 சதுர மைல் வட்டாரத்திற்கு மழை பெய்தது. இதற்குப் பின்னர் ஆல்ப்ஸ் மலையில் சிவப்பு நிறத்தில் பனி மூடிக் கிடந்தது. சஹாரா பாலைவனத்தில் ஏற்பட்ட தூசிப் புயலே இதற்குக் காரணம் என்று வானியல் நிபுணர்கள் கண்டறிந்தனர். சில நேரங்களில் தொழிற்சாலைகள் மற்றும் எரிமலைகள் வெளியிடும் புகையினால் கறுப்பு, பழுப்பு நிறத்தில் மழையும், பனியும் பெய்வதும் உண்டு. இனிமேல் உங்கள் ஊரில் சிவப்பு நிறத்தில் மழை பெய்தால் அது இரத்த மழை இல்லை என்று சொல்லுங்கள்!





மீன் மழை, தவளை மழை எப்படிப் பெய்கிறது? உலகின் பல்வேறு பகுதிகளில் மீன், தவளை மழை பெய்ததாக கடந்த 200 ஆண்டுகளாகப் பத்திரி



கைகளில் ஏராளமானச் செய்திகள் வந்துள்ளன. இவ்வாறு மழை பெய்வதற்குக் காரணம் என்ன? 'டொர்னெடோ' (Tornado) எனப்படும் சூறைக் காற்றுதான் இதற்குக் காரணம். படு பயங்கர வேகத்தில் சுழன்று கொண்டே வரும் இந்தக் காற்று குளம், குட்டை, ஏரி ஆகியவற்றின் நீரை அப்படியே உறிஞ்சித் தூக்கி நீங்கள் குளிர்பானத்தை ஸ்ட்ராவினால் உறிஞ்சுவது போல - வேறிடங்களுக்குக் கொண்டு சென்று விடுகிறது. எல்லா நேரங்களிலும் இப்படி நடப்பதில்லை. அபூர்வமாகத்தான் நிகழ்கிறது. இந்த சூறைக்காற்று சில குளங்களைக் கடந்து செல்கையில் குளத்து நீர் முழுவதையும், அதாவது ஒரு சொட்டுக் கூட விடாமல் உறிஞ்சிய சம்பவங்களும் நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட சூறைக் காற்று வட அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளைத்தான் அடிக்கடி தாக்குகிறது. இந்தச் சூறைக் காற்றை நேரில் பார்த்தவர்கள் இதன் 'அகரத்தனமான சாதனைகளை' அப்படியே வர்ணித்துள்ளார்கள்!

நீரை உறிஞ்சித் தூக்கும் இந்தக் காற்று, நீருடன் மீன்களையும், தவளைகளையும் கூடத் தூக்கிக் கொண்டு சென்று மழையாகப் பெய்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை, பிரிட்டனில் ஓரிடத்தில் லட்சக் கணக்கில் தவளைகள் விழுந்தனவாம்! இதிலிருந்து சூறைக் காற்றுதான் மீன் மழைக்கும், தவளை மழைக்கும் காரணமாக அமைகிறது என்பது புரிகிறது அல்லவா!



- கிருஷ்ண. முத்துராமலிங்கம்


# தெளிவு பிறந்தது

சேதுராமனை நினைக்கும்போதெல்லாம் வாசுவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இருவரும் ஒரே தெருவாசிகள். எட்டாம் வகுப்பில் படித்து வந்தனர்.

சேதுராமன் படிப்பில் கெட்டிக்காரன். வாசு விளையாட்டே கதி என்று இருந்து விட்டு, தேர்வு நெருங்கும் சமயத்தில் அவசரம் அவசரமாக சிரமப்பட்டுப் படிப்பவன்.

வாசு குறைவாக மதிப்பெண்கள் வாங்கும் போது வாசுவின் அப்பா சேதுராமனின் புத்திசாலித்தனத்தை எடுத்துக் காட்டி வாசுவைத் திட்டுவது வழக்கம். இதனாலேயே வாசுவிற்கு சேதுராமன் மீது கோபம் வந்து அவனைப் பிடிக்காமல் போனது. சேதுராமனை எப்படியும் கவிழ்க்க வேண்டும் என்று மனதுள் நினைத்து வாய்ப்புக்காகக் காத்திருந்தான் வாசு.

அந்தச் சந்தர்ப்பம் விரைவில் வந்தது. அன்று அரையாண்டுத் தேர்வுகள் ஆரம்பமாக இருந்தன. படித்த பாடங்களை மீண்டும் ஒருமுறை புரட்டிப் பார்க்கலாம் என்று சேதுராமன் வகுப்பிற்கு வழக்கத்திற்கு முன்னதாகவே வந்தான். சேதுராமன் தன்னுடைய பரீட்சை அட்டையை பேனா பெட்டியுடன் தன் மேஜையில் வைத்து விட்டுத் தண்ணீர் குடிக்க வெளியே சென்றான். இதைக் கவனித்த வாசு மின்னல் வேகத்தில் செயல்பட ஆரம்பித்தான். நல்லவேளையாக வகுப்பில் வாசுவைத் தவிர யாரும் இல்லை. சேதுராமன் முன்னதாக தேர்விற்கு புறப்பட்டுச் செல்வதைப் பார்த்த வாசு, அவனைப் பின்தொடர்ந்து பள்ளிக்கு வந்தது பகையைத் தீர்த்துக் கொள்ள வாய்ப்பாக இருந்தது.



சேதுராமனின் பேனாப் பெட்டியைத் திறந்து இங்க் பேனாவை எடுத்த வாசு, அதில் இங்க்கை மிகக் கொஞ்சமாக வைத்து விட்டு மீதியை ஜன்னல் வழியாக வெளியே கொட்டினான். மீண்டும் பேனாவை மூடி அதை சேதுராமனின் பெட்டியில் வைத்து விட்டு ஒன்றும் தெரியாதவனைப் போல வகுப்பை விட்டு வெளியே சென்றான்.

தேர்வு ஆரம்பமானதும் சேதுராமன் தன் பேனாவை எடுத்து எழுத ஆரம்பிப்பான். கொஞ்சம் எழுதி முடித்ததுமே அதிலுள்ள இங்க் தீர்ந்து போகும். அதனால் ஆசிரியரிடம் திட்டு வாங்கி தேர்வைச் சரியாக எழுதாமல் விட்டு விடுவான். இது தான் வாசுவின் திட்டம்.

தேர்வு ஆரம்பமானது. சேதுராமன் கேள்வித்தாளை வாங்கிப் படித்து விட்டு, தேர்வை எழுதத் தொடங்கினான். வாசுவும் தேர்வு எழுதத் தன் பேனாவைத் தேடினான். அதிர்ந்து போனான். காரணம் அவன் சேதுராமனைக் கவனித்துக் கொண்டு பின் தொடர்ந்து வந்த ஆர்வத்தில் தன் பேனாவை மறந்து வீட்டிலேயே வைத்து விட்டு வந்து விட்டான்! அவனிடம் தேர்வு எழுதப் பேனா இல்லை!

என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தான் வாசு. இதைக் கவனித்து விட்ட ஆசிரியர், "என்னடா! முழிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கே? படிக்கலையா?" என்றார்.


வாசு எழுந்து, 'தான் பேனாவைக் கொண்டு வரவில்லை என்று சொன்னதும், ஆசிரியர் அவன் காதைப் பிடித்துத் திருகினார். இதைப் பார்த்த சேதுராமன் எழுந்தான்.

"சார், என்கிட்டே ரெண்டு பேனா இருக்கு சார். இதை வாசுகிட்டே குடுத்து தேர்வை எழுதச் சொல்லுங்க" என்று தான் எழுதிக் கொண்டிருந்த பேனாவை ஆசிரியரிடம் நீட்டினான். ஆசிரியரும் சேதுராமனின் நல்ல குணத்தைப் பாராட்டி பேனாவை வாங்கி வாசுவிடம் கொடுத்தார்.

அந்தப் பேனாவை வாங்கிய வாசு திகைத்துப் போனான். காரணம் சற்று நேரத்திற்கு முன் சேதுராமனைப் பழிவாங்க இங்க்கை வெளியே கொட்டிய அதே பேனா தான் அது! தான் விதைத்தது தனக்கே ஆபத்தாக வந்து சேர்ந்ததை உணர்ந்தான் வாசு.

வாசுவின் மனதில் இப்போது தெளிவு பிறந்து விட்டது. இனி அடுத்தவர்களுக்குத் தீங்கு நினைப்பதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டான்.

– ஆர்.வி. பதி



## பாப்பா பாப்பா

குட்டிக் குட்டிப் பாப்பா
கொஞ்சிப் பேசும் பாப்பா.
எட்டிப் பார்க்கும் பாப்பா.
இனிக்கப் பேசும் பாப்பா.

சின்னச் சின்ன பாப்பா
சிரித்து மயக்கும் பாப்பா.
சிந்தை இனிக்க இனிக்க,
செல்லம் கொஞ்சும் பாப்பா.

சாமி என்று சொன்னால்
சிரித்து வணங்கும் பாப்பா.
மாமி என்றால் கையை
மகிழ்ந்து தூக்கும் பாப்பா!

- வே. தாமரைச் செல்வன்,
வடமாதிமங்கலம்.

## ஆந்தையார்

பேந்தப் பேந்த விழித்திடும்
பகலில் எங்கோ மறைந்திடும்
பொந்தில் வாழும் ஆந்தையார்
போல நண்பர் இல்லையே!



எலியை அழிக்கும் வேட்டையை
இரவில் இவர் ஆடுவார்.
அழிக்கும் பயிர் சேதத்தை
அதிக மாகக் குறைப்பார்.


நன்மை செய்யும் ஆந்தையை
நோக நோக நாமுமே
கெட்ட சகுனம் என்றிடல்
கேட்க மனம் வாடுதே!

- எம். சேக் உசேன், வடகரை.

## பாடுபடு


நாட்டைக் காக்கப் பாடுபடு.
நலமாய் இருக்கப் பாடுபடு
கேட்டை ஒழிக்கப் பாடுபடு
கொடுமை விலகிடப் பாடுபடு

உண்மை உயர்ந்திடப் பாடுபடு
உயர்ந்தோர் வாழ்ந்திடப் பாடுபடு
நன்மைகள் சிறந்திடப் பாடுபடு
நல்லோர் வாழ்ந்திடப் பாடுபடு



கல்வி உயர்ந்திடப் பாடுபடு
கல்லாமை அழிந்திடப் பாடுபடு
தாய்மொழி வளர்ந்திடப் பாடுபடு
தாயகம் உயர்ந்திடப் பாடுபடு!

- கே. பார்த்தசாரதி, ஆலங்குளம்.



## பெரியார்


உயர்ந்த தலைவர் வரிசையிலே,
உரிய இடத்தைப் பெற்றவராம்
வியக்கும் வண்ணம் தாழ்ந்தோரின்
வாழ்வை உயர்த்த வாழ்ந்தவராம்.

பெண்கள் கல்வி கற்றிடவும்
பழமை வாதம் அகன்றிடவும்
தொண்டு செய்த இவரேதான்
தந்தை பெரியார் அறிவீரோ?

- நீ. சிவானந்தம், வடக்குமட விளாகம்.

## கிளியக்கா


பச்சை வண்ணக் கிளியக்கா
பழங்கள் தின்னும் கிளியக்கா
கொச்சை பேசும் கிளியக்கா
கொள்ளை அழகு கிளியக்கா.



கொறிக்கும் கொட்டை கணக்கில்லை
கொத்தும் பழமும் அளவில்லை.
சரியா சிறிது சிந்திப்பாய்,
சற்றே குணத்தை மாற்றிப்பாய்!

- கே.ஜெ. காயத்ரி, சென்னை - 5.

## சின்னப்பாப்பா ஏனம்மா?




சின்னப் பாப்பா சிரிக்கும் பாப்பா
சிரிப்பது ஏனம்மா?
கன்னம் ரெண்டும் கட்டித் தங்கம்
கவிதை பாடம்மா.

உன்னைப் போல நல்ல பாப்பா
உலகில் ஏதம்மா?
சொன்ன சொல்லைத் திருப்பிச் சொல்லும்
செந்தமிழ் நீயம்மா!

- டி. பரந்தாமன்,
கிழக்கு ராஜபாளையம

## ரயில் வண்டி

போட்டு வைத்த பாதையில்
போயி வரும் ரயில் இது
பெட்டி கோர்த்த சரமிது
பாம்பு போல நெளியுது!




சிவப்புக் கொடிக்கு அஞ்சுது
சீராய் வளைந்து விரையுது
எவரும் ஏறத் தூண்டுது
எங்கள் ஊரில் நிற்குது.

பச்சைக் கொடி அசைந்திடில்
பாய்ந்து உடனே கிளம்புது
நாட்டின் போக்கு வரத்துலே
நல்ல பங்கு ஆற்றுது!

- எம். மனோகர், சின்னாளபட்டி.

## வானம்

வானம் நீல வானமாம்
வரையும் மேகக் காட்சியாம்
வானக் கலைஞன் வரைந்திடும்
வண்ணக் கலையின் நேர்த்தியாம்!





குதிரை யானை தோன்றுமாம்
கோலம் போட்டுக் காட்டுமாம்
அதிசயமாய் இருக்குமாம்
அழகு நீல வானமாம்!

வானம் அழகு வானமாம்
வெட்ட வெளி போன்றதாம்
காணும் யாவும் அழகுதான்
கவிதை யாக்கத் தோன்றுதாம்!

- ஹரிஹரன், மதுரை - 14.

## கற்றுக் கொள்ளுங்கள்

ஆடும் மயிலைப் பாருங்கள்
ஆடக் கற்றுக் கொள்ளுங்கள்.
பாடும் குயிலைக் காணுங்கள்.
பாடக் கற்றுக் கொள்ளுங்கள்.

நாயை நன்கு பாருங்கள்,
நன்றி காட்ட அறியுங்கள்.
கரையும் காகம் காணுங்கள்.
கூடி வாழ அறியுங்கள்.



காளை மாட்டைப் பாருங்கள்
கடின உழைப்பை அறியுங்கள்
உழைக்கும் கழுதை பாருங்கள்
உண்மை உழைப்பை அறியுங்கள்.

- ஆர். சுந்தரராஜன், லாலாபுரம்.

## நண்பன்

எனக்கொரு நண்பன் இருக்கின்றான்.
என்னிடம் அன்புடன் இருக்கின்றான்.
குணத்தில் சிறந்து இருக்கின்றான்.
குழந்தை போலச் சிரிக்கின்றான்.




உதவிகள் செய்து சிறக்கின்றான்
ஊரார் போற்றத் திகழ்கின்றான்.
எதிலும் பொறுமை காட்டுகின்றான்
எடுத்த செயலை முடிக்கின்றான்.

வகுப்பில் முதலில் வருகின்றான்
விளையாட்டு வீரனாய் சிறக்கின்றான்.
பகட்டை முற்றிலும் வெறுக்கின்றான்.
பாரில் இவன்போல் எவனுண்டு?

- எஸ். கணேஷ்

## தவளை

தத்தித் குதிக்கும் தவளை
தவித் தாவும் தவளை
பெய்யும் மழையைக் கண்டு
பாட்டுப் பாடத் துடிக்கும்.



பாட்டுப் பாடிப் பாடி
பாம்பை வர வழைக்கும்!
முடிவைத் தேடிக் கொள்ள
முட்டாள் தனமே செய்யும்!


- எம். வேல் முருகன்,
எலவனாசூர் கோட்டை.

## திருவிழா

மான்கள் துள்ளி ஓடவே,
குயில் இனங்கள் பாடவே,
குரங்கு தாளம் போடவே
கரடி நடனம் ஆடவே,
முயல்கள் கூட்டம் ரசிக்கவே
யானை தலையை அசைக்கவே,
மயிலும் தோகையை விரிக்கவே
எங்கும் பூக்கள் மலரவே
காட்டுக் குள்ளே நடக்குது
மகிழ்ச்சி பொங்கும் திருவிழா!

- ச. ஆனந்த், சின்னமனூர்.





# ஏங்கப்பா...

ஏது நடக்கக் கூடாது என்று ராஜா அஞ்சினானோ அதுவே இப்போது நடந்து கொண்டு இருந்தது.

அதென்ன, சொல்லி வைத்தாற் போல், மாற்றலாகி வரும் ஒவ்வொரு ஆசிரியரும் வகுப்பில் நுழைந்ததுமே ஒவ்வொரு மாணவனின் பெயர், பெற்றோர் பெயர், அவர்களது உத்தியோகம் என்று இதையே கேட்கிறார்கள். பெயர் கேட்பதாவது சரி. உத்தியோகமெல்லாம் எதற்குக் கேட்க வேண்டும்? பெற்றோர் என்ன வேலை செய்தால் இவர்களுக்கென்ன வந்தது? 'சே!' அவனுக்கு ஒரே வெறுப்பாகி விட்டது.

இதோ மளமளவென்று மாணவர்கள் சொல்லிக் கொண்டே வருகிறார்கள். அவர்களுக்கென்ன? அப்பா தாசில்தார் என்றால் அம்மா ஸ்கூல் டீச்சர். இல்லையென்றால் ஆபீஸில் டைப்பிஸ்ட் என்று கௌரவமான வேலை. சே! நமக்கும் வந்து வாய்ச்சிருக்காங்களே அம்மாவும் அப்பாவும்! வெளியே கௌரவமா சொல்லிக்க முடியாத வேலை! ஏன்தான் இவங்களுக்கு நான் மகனாய் பிறந்தேனோ? இவர்களெல்லாம் எவ்வளவு ஜம்பமாய் சொல்லிக் கொள்கிறார்கள். ஐய்யயோ! இதோ பக்கத்தில் இருக்கும் பாபு கூடச் சொல்லியாகிவிட்டதே! இப்போது நான் தானா?''

தன்னுள்ளே மூழ்கியிருந்த ராஜா, ஆசிரியரின், ''ம். அடுத்தது'', என்ற குரலில் விழிப்புற்றவனாய் சட்டென்று எழுந்து, ஒரு கணம் திணறி, ''எனக்கு, எனக்கு அப்பா இல்லே சார்!'' என்று உளரலாகக் கூறிப் பட்டென அமர்ந்து விட்டான். ஆசிரியர் திகைத்து, ''வருந்தப் படாதே ராஜா'' என்று கூற அடுத்த பையன் எழுந்தான்.

அருகே அமர்ந்திருந்த பாபு அதிர்ந்தவனாய், ''டேய்! என்னடா இது? இப்படிச் சொல்லிட்டே?'' என கிசு கிசுத்தான்.

''ப்ளீஸ்டா! என்னை ஒன்றும் கேட்காதே,'' என்று குளறினான் ராஜா. அவனுடைய உடலும் குரலும் நடுங்கின. 'குப்'பென்று உடல் முழுவதும் நெருப்பாகச் சூடேறியது. அதற்குப் பிறகு அவனால் வகுப்பில் எதையும் கவனிக்க முடியவில்லை. சாப்பாட்டு மணி அடித்தது. லீவ் லெட்டரை பாபுவிடம் கொடுத்து, ''ப்ளீஸ் பாபு! இதை ஆசிரியரிடம் கொடுத்துவிடு. எனக்கு ஒரே ஜுரமாய் இருக்கு,'' என்றவன் நடைபிணமாய் வீடு வந்து சேர்ந்தான். பக்கத்து வீட்டு ஆயாவிடம் சாவி வாங்கிக் கதவைத் திறந்தவன், தரையில் படுத்துக் கொண்டு அழுதபடியே, தூங்கிப் போனான்.

ராஜா ஒன்றும் கெட்ட பையன் இல்லை. நல்ல பையன்தான்; நல்ல மாணவன்தான். வகுப்பில் முதல் ரேங்க் அவன்தான். பெற்றோரைப் பற்றி இது நாள் வரை இப்படிப்பட்ட வேற்றுமைகள் அவன் மனத்தில் எழுந்ததே இல்லை. இப்போதுதான் கொஞ்ச நாட்களாக இப்படி ஒரு தாழ்வு மனப்

ஜி. மீனாட்சி

பான்மை. வேண்டாத எண்ணங்கள். அதன் காரணமாக இன்று துணிந்து ஒரு பொய். பொய் கூறியதைத் தாங்க மாட்டாமல் உடனடியாக ஜுரம்!

அன்றிலிருந்தே ராஜாவின் போக்கு அடியோடு மாறிவிட்டது. பெற்றோரிடம் சரியாகப் பேசுவதில்லை. சாப்பிடுவதில்லை. எதையோ பறிகொடுத்தாற்போல் வெறித்த பார்வை. கேட்டால் ஒழுங்கான பதில் இல்லை. பெற்றோர் மிகவும் கலங்கிப் போயினர். இதோ அதோ என்று ஜுரத்தோடு ஒரு வாரம் ஓடிவிட்டது. இன்றுதான் வேண்டா வெறுப்பாக மறுபடி பள்ளிக்குச் சென்றான். பாடம் எப்படி மனத்தில் பதியும்?

அன்று மாதாந்திரத் தேர்வுகளின் விடைத்தாள்களை ஆசிரியர் கொடுத்தார். ராஜா எல்லாப் பாடங்களிலும் மிகவும் பின் தங்கி இருந்தான். அவனது புதிய வகுப்பாசிரியர், ''போன மாதம் வரை முதல் மதிப்பெண் பெற்ற ராஜா இப்போது மிகவும் பின்தங்கியுள்ளது மிகவும் வருத்தமாக உள்ளது. நடத்தும் பாடங்கள் உங்களுக்குப் புரியவில்லையோ எனக் கவலையாக உள்ளது. புரியவில்லை என்றால், நீங்கள் எப்போது வேண்டுமானாலும், என்னிடம் சந்தேகம் கேட்டுத் தெளிவு பெறலாம். என் வீடு கூட அடுத்த தெருவில்தான் உள்ளது. வீட்டு எண் இருபத்து மூன்று. நீங்கள் அங்கு வந்தாலும் சொல்லித் தருவேன். யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் வரலாம். ராஜா, நீ அடுத்த முறை நல்ல மார்க்குகள் வாங்க வேண்டும். முதல் மார்க் வாங்கிய சந்தோஷுக்கு வாழ்த்துகள், பாராட்டுகள்'', எனக் கூறி அமர்ந்தார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அன்னையின் வற்புறுத்தலின் பேரில் ராஜா தந்தைக்கு மதிய உணவை எடுத்துக் கொண்டு தலை குனிந்தபடியே, தளர்ந்த நடையுடன் தந்தை இருக்குமிடம் வந்தவன், தந்தையிடம் உணவுப் பையைக் கொடுத்தான்.

யாருடனோ பேசிக் கொண்டிருந்த அவன் தந்தை, ''ஐயா! இவன்தாங்க என்னோட ஒரே பையன் ராஜா. ஏழாவது படிக்கிறான்'', எனக்கூற, நிமிர்ந்து பார்த்த ராஜா அதிர்ந்தான். அவனுடைய புதிய வகுப்பாசிரியர்தான் அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தார்! நிலம் பெயர்ந்து தன்னை அப்படியே விழுங்கி விடாதா என்று ராஜா தவித்துப் போனான்.

''அட! நம்ம ராஜா! இவனை எனக்குத் தெரியுமே. இவன் என்னோட வகுப்புத்தான்'' என்றார் அவனது புதிய வகுப்பாசிரியர்.

''எலே ராஜா! ஐயாவுக்கு வணக்கம் சொல்லுடா. என்ன அப்படியே திகைச்சுப் போயிட்டே?'', என்றார் தந்தை.

''வ. வ. வணக்கம் ஐயா'', திக்கித் திக்கி வார்த்தைகள் வெளி வந்தன.

''ராஜா உங்க சொந்தப் பிள்ளையா?''

''ஆமாங்கய்யா! என்னோட ஒரே புள்ளை.''



''ஓ அப்படியா! சரி! அப்போ நான் வரேன். இதுக்கு நான் எவ்வளவு பணம் கொடுக்கணும்?'', என்று ராஜாவின் தந்தை தைத்துக் கொடுத்த செருப்பு களை அணிந்தவாரே கேட்டார் ஆசிரியர்.

''இது பரம்பரைத் தொழில் என்றா லும், அப்பா உயிருடன் இருந்தவரை நான் பள்ளிக்குப் போகவும் இல்லை, தொழிலையும் கற்கவில்லை. அப்பா போன பிறகு ' அனாதையானேன். அப்பத்தான் உங்க அப்பா தன் நண் பனின் மகன் ஆச்சேன்னு இந்தத் தொழி லைக் கற்றுத் தந்து ஆளாக்கினார். நன்றி உணர்வு எனக்கு இருக்கு. உங்களிடம் நான் காசு வாங்கலாமா? இதுக்குக் காசு எதுவும் வேணாங்க.'' என்று அப்பா மறுத்தார். ஆசிரியர் விடவில்லை. வற் புறுத்தினார். ''ஐயா! எத்தனையோ முறை உங்க வீட்டுல நான் சாப்பிட் டிருக்கேன். காசு வாங்காம உங்கப்பா தொழில் சொல்லிக் கொடுத்திருக் காங்க.'' என மறுத்தார் அவர்.



''நல்லாயிருக்கே! அது அவருடைய கடமை. இது நீங்க எனக்கு செஞ்ச வேலைக்குக் கூலி. அதுவும் இதுவும் எப்படி ஒண்ணாகும்?'' என ஆசிரியர் வற்புறுத்த, ''ஐயா, தயவு செய்து இந்தத் தடவை வேணாமுங்க. அடுத்த தடவை பார்த்துக்கலாமுங்க. ஏதோ, இந்த ஏழை யால் ஆன நன்றிக் கடன்'' என கரம் கூப்பி மறுத்தார் ராஜாவின் அப்பா.

வேறு வழியின்றி விடை பெற்றார் ஆசிரியர்.

மறுநாள் பள்ளிக்குக் கிளம்பிய ராஜா, பள்ளிக்குச் செல்ல மனமில் லாமல், வழியிலுள்ள பூங்காவில் அமர்ந்து கண்ணீர் வடித்துக் கொண் டிருந்தான். 'இனி பள்ளியும் வேண் டாம். வீடும் வேண்டாம். இப்படியே எங்காவது போய்விடலாம்' என்று பலவும் எண்ணி அழுது கொண்டிருந்த ராஜாவின் தோளில் ஒருகை விழுந்தது.

திடுக்கிட்டு எழுந்தான் ராஜா. அவன் ஆசிரியர்தான் அது. ''ராஜா! இது நான் எதிர் பார்த்ததுதான். உனக்காக நான் ஒரு மணி நேரம் அனுமதி போட்டு வந்திருக்கேன். சொல்லு! உன் மனத்தில் என்ன கஷ்டம்? ஏன் அப்படி ஒரு பொய் சொன்னே? நான் உன்னைத் திட்டமாட் டேன்'' என்று பரிவோடு கேட்டவர் அவன் அருகில் அமர்ந்தார்.

விம்மியழுத ராஜா, ''சார் என்னை மன்னிச்சுடுங்க,'' என்று தன் மனப் போராட்டங்களை அழுகையினூடே விவரித்தான். பொறுமையோடு எல்லா வற்றையும் கேட்ட அவர், ''சரி! நான் இப்போ கேக்கற கேள்விக்கு நீ உண் மையான பதிலைச் சொல்லணும். தெரிஞ்சுதா?'' என்றார்.

''சரிங்கய்யா!''

''உங்கப்பா செருப்பு தைக்கிறவர். உங்கம்மா கூலி வேலை செய்யறவங் கன்னுதானே என்னிடம் அதைக் கூற வெட்கப்பட்டு, அப்படி ஒரு பொய் யைச் சொன்னே? அவங்க மத்தவங் களை ஏமாத்தியோ, திருடியோ, பொய் சொல்லியோ சம்பாதிக்கிறாங்களா?'' என்று கேட்டார் ஆசிரியர்.


''ஐயய்யோ! இல்லீங்கய்யா. அவங்க ரெண்டு பேரும் ரொம்ப நல்ல வங்க. நாணயமானவங்க. பிறர் காசுக்கு ஆசைப்படாதவங்க. சமயத்தில் மத்த வங்களுக்கு உதவி கூடச் செய்வாங்க.''

''நல்லா உழைச்சுத்தானே சம்பாதிக் கிறாங்க?''

''ஆமாங்க சார். நாள் முழுதும் கடினமா உழைச்சுதான் சம்பாதிக்கி றாங்க. என் மேல் உயிரையே வெச் சிருக்காங்க.''

''சரி ராஜா. நான் சொல்றதை கவனமாய்க் கேள். எங்க அப்பா கூட செருப்புத் தைப்பவர்தான். உங்க அப்பாவுக்கு அவர்தான் தொழிலைச் சொல்லிக் கொடுத்தவர். எங்கப்பா ஒரு செருப்புத்தைப்பவர் என்பதை எந்த இடத்திலும் இதுவரை நான் மறைத் ததே இல்லை. உனக்கு மட்டும் ஏன் மறைக்கத் தோன்றியது? பொய் சொல் லியோ திருடியோ ஏமாத்தியோ பிச்சையெடுத்தோ சம்பாதிக்காம, நேர் மையா செய்யற எந்தத் தொழிலும் உன்னதமான தொழில்தான். எவ்வளவு சம்பாதிக்கிறாங்க என்பதை விட எப்படி சம்பாதிக்கிறாங்க என்பது தான் முக்கியம். இதை நீ நல்லா உணரணும். இனிமேலாவது வீணான தாழ்வு மனப் பான்மையை வளர்த்துக்காம, உன் பெற்றோரை மதிக்க, நல்லாப் படிக்க முன்னேறணும். உன்னால தான் அவங்க உயர்வடையணும். தெரிஞ் சுதா?''

''ஐயா! என்னைக் காட்டிக் கொடுக் காம காப்பாத்தினதுக்கு ரொம்ப நன்றி ஐயா. என் மனசுல இருந்த வீணான; போலித்தனமான எண்ணங்கள் எல் லாம் போயி மனசு சுத்தமாயிடுச்சு. நீங்க சொல்றபடியே நடக்கறேங் கய்யா'', என்றவாறு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கம்பீரமாக எழுந்த ராஜா, ஆசிரியருடன் பள்ளிக் குக் கிளம் பினான்.



# இஷ்டம்போலத்தான் செலவழிப்பேன்!

த. ஜானகி

''கோலப்பா....! டேய்... கோலப்பா...!''

''என்னப்பா?'' - ஆங்கில வீட்டுப் பாடத்தை மூடிவைத்து விட்டுத் தந்தையின் அருகில் வந்தான் கோலப்பன்.

''நாளைக்கு சனிக்கிழமை. உனக்கு லீவுதானே?''

''ஆமா. நாளன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை.... அதனால இந்த இரண்டு நாளும் பள்ளிக் கூடம் கிடையாது.''

''ரொம்ப நல்லதாப் போச்சு. பண்ணையார் வீட்டிலே இந்த ரெண்டு நாளும் வாழைக்காய் வெட்டறாங்க. என்னோட வேலைக்கு வரேன்னு நேத்திக்கு சொன்னே இல்லே? நீயும் வரயா? உனக்கும் கூலி கிடைக்கும்?''

ஒரு வினாடி யோசித்த கோலப்பன் தந்தையைப் பார்த்து உறுதியான குரலில் சொன்னான்.

''வரேன். ஆனா இப்ப எனக்குக் கிடைக்கப் போற கூலியை நான்தான் வாங்கிப்பேன். என் இஷ்டம் போல அதைச் செலவு செய்வேன். நீங்க மறுக்கக் கூடாது.''

''உனக்கு வேணுங்கறது எல்லாம் நான்தானேடா வாங்கித் தரேன். இந்தப் பணத்திலே அப்படி உனக்கு என்ன செலவு?''

''அப்பா! உங்களுக்குத் தெரியாம நான் பைசா கூடச் செலவு செய்ய மாட்டேன். ஆனால், கூலிய வாங்கிக் கொண்டு வந்த பிறகுதான் சொல்வேன்.'' - கூறியபடி மறுபடியும் மீதி இருந்த வீட்டுப் பாடத்தை எழுதச் சென்றான் கோலப்பன்.

மறுநாள். காலை நேரம்.

மிகவும் பழசான, கலர் போன வெளிர் ஊதா நிற டிராயர், உடம்பிற்குச் சற்றே பெரிதான பழைய பனியன், தலைக்கு வைத்துக் கொள்ளும் சும்மாடு துண்டு, மூங்கில் தட்டுடன் வாழைக் கொல்லையில் வேலை செய்ய ஆரம்பித்தான் கோலப்பன். வெட்டப்பட்ட வாழைத்தாரை ஒன்றோ அல்லது இரண்டோ சுமக்க முடியும். கனத்திற்கு ஏற்ப மூங்கில் தட்டில் வைத்துக் கொண்டு, தலையில் தட்டைச் சுமந்தபடி வாழைக் கிடங்குகளை ஜாக்கிரதையாகத் தாண்டி, தார் ரோட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் லாரியில் கொண்டு வைத்தான். அவன் வயதை ஒத்த பையன், ஐந்தாம் வகுப்போடு படிப்பை முடித்துக் கொண்ட மணியும் அவனோடு வேலை செய்து கொண்டிருந்தான். மீதி உள்ள இருபது பேருமே பெரியவர்கள்தான்.

மணிக்கு வேலை செய்து பழக்கம். அதனால் கிடங்குகளை அனாயாசமாகத் தாண்டி தார்களை லாரியில் வைத்தான். ஆனால், கோலப்பனுக்கு இதுதான் முதல் அனுபவம். தலையைச் சுமை அழுத்தியது. காலை வலித்தது. கிடங்கைத் தாண்டும் போது ஒரு சமயம் கீழே விழுந்து விட்டான். காலில் சிராய்ப்பு. இருந்தாலும் தன் கஷ்டம் எதையும் பொருட்படுத்தாமல் வேலையிலேயே முழு கவனத்தையும் செலுத்தினான்.

காலை பதினோரு மணி சுமாருக்கு ஆளுக்கு ஒரு டீ வழங்கப்பட்டது. டீயைக் குடித்துக் கொண்டிருக்கும் போதுதான் அந்த இளைஞனைப் பார்த்தான் கோலப்பன்.

''டேய் மணி, சிவப்பா... கருட்டை முடியா... கட்டம் போட்ட சட்டை போட்டுக்கிட்டு லாரி கிட்டே நின்னுக் கிட்டு கணக்கு பார்த்துக்கிட்டிருக் காரே...அந்த அண்ணன் யாருடா?''

''அவரா! நம்ப பண்ணையாரோட சொந்தத் தம்பி. அமெரிக்காவிலிருந்து லீவுக்கு வந்திருக்காரு. அடுத்த வாரம் கல்யாணமாம். அவரு பேர் சக்ர வர்த்தி!''

''அப்படியா! அவர் என்னடா படிச் சிருக்காரு?''

''எனக்கென்னடா தெரியும்? நல்லா படிச்சிருக்காரு. நெறைய சம்பளம் வாங்கறார்னு மத்தவங்க சொல்றாங்க.''

கோலப்பன் மீண்டும் சக்ரவர்த்தி யைக் கூர்ந்து நோக்கினான். அவனுக்கு சக்ரவர்த்தியை மிகவும் பிடித்திருந்தது. அந்த அண்ணனைப் போல தானும் பெரிய படிப்பெல்லாம் படித்து கை நிறையச் சம்பளம் வாங்க வேண்டும். அம்மா அப்பாவை சந்தோஷமாக வைத் துக் கொள்ள வேண்டும் என்று மனத் திற்குள் தீர்மானித்துக் கொண்டான்.

இரண்டு நாட்களுக்குமாகச் சேர்த்து கூலி மொத்தம் இருபது ரூபாய் கிடைத் தது. சந்தோஷத்தோடு பெற்றுக் கொண் டான்.


மறுநாள் காலை. இரண்டாவது பீரி யட். அறிவியல் ஆசிரியர் அன்று விடுப்பு. வகுப்புத் தலைவனிடம் அனு மதி பெற்றுக் கொண்டு தலைமை ஆசி ரியர் அறையை நோக்கி விரைந்தான் கோலப்பன்.

தலைமை ஆசிரியர் அறையில் அவன் நுழைந்தபோது, அவருடன் பெரிய பண்ணையாரின் தம்பி சக்ர வர்த்தியும் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.



இரண்டு பேரும் பேசிக் கொண் டிருக்கும் போது இடையில் தான் நுழைவது மரியாதைக்குரிய செயல் அல்ல என்று வகுப்பறைக்குச் செல்லத் திரும்பினான். அதற்குள் அவனைப் பார்த்துவிட்ட தலைமை ஆசிரியரே அவ னைக் கூப்பிட்டவே கோலப்பன் தயக் கத்தோடு அவர் அருகில் சென்றான்.

''ஸார்! நம்ப பள்ளிக் கூடத்திலே ஆறாவது வகுப்பு மாணவங்க உட்கார இடம் இல்லாம மரத்தடியிலே உட்கார்ந் திருக்காங்க. காற்று அடிச்சா, மழை பெய்தா - வெயில் ஏறிக் கொண்டே வந் தால் பாடம் நடத்தக் கஷ்டமாக இருக்கு. அவர்களுக்காக் குறைந்தது ஒரு கூரைக் கொட்டகையாவது போட் டுத் தந்தால் நன்றாக இருக்கும்.



ஸ்ரீராமர் சீதையை மீட்க கடலில் அணை கட்டிய பொழுது, அணில் சிறிய சிறிய கற் களைக் கொண்டு வந்து கொடுத்தது. அணிலை வேலை செய் என்று யாரும் கட்டாயப்படுத்தவில்லை. அதே போல் நானும் உங்களைக் கட்டாயப்படுத்த வில்லை. ஆனாலும் ஆறாம் வகுப்பு மாணவர்களாகிய நீங்கள் அணில் செய் தது போல் சிறிய அளவில் என்ன பொருள் உதவி செய்தாலும் அன்போடு ஏற்றுக் கொள்கிறேன். இந்த கொட் டகை வகுப்பறை நீண்ட காலம் இருக் கும். இதுவும் ஒரு புண்ணியமான செயல் அப்படின்னு போன வாரம் நீங்க வழிபாடு வகுப்பில் சொன்னீங்க. அது என் மனதிலே ஆழமாப் பதிந்து போச்சு. நான் பணக்காரன் இல்லை. அதனால இரண்டு நாளா வேலை செய்து இந்த இருபது ரூபாயை சம்பாதித்தேன். இதை என்னோட எளிய காணிக்கையா ஏத்துக் குங்க'' என்று கூறி, பணிவோடு ரூபாயை நீட்டினான் கோலப்பன்.

தலைமை ஆசிரியர் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார். அவனை வாயாரப் புகழ்ந்தார். பிறகு வரவு - செலவு நோட்டை எடுத்து அவன் பெயரை எழுதி வரவு வைத்துக் கொண்டார்.

இதுவரை நடந்தது எல்லாவற்றை யும் கவனித்துக் கொண்டிருந்த சக்ர வர்த்தி, கோலப்பன் சென்ற திக்கையே பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந் தார்.

''என்ன சக்ரவர்த்தி? அந்தப் பையன்... அதான் கோலப்பன் போவ தையே பார்த்துக் கிட்டிருக்கிறாயே? என்ன செய்தி?''

''ஒன்றுமில்லை ஸார். இன்னிக்கு பலிச்சின்னு பள்ளிக்கூடத்துக்கு கூலி பாரத்தோட வந்திருக்கிற கோலப்ப னைப் பார்த்து மட்டும் நான் அசந்து போய்விடவில்லை. அவனோட பண் பைப் பார்த்து திகைத்துப் போகிறேன். நேற்றும் முந்தா நாளும் எங்க வீட்டு வாழைத் தோட்டத்திலேதான் வேலை செய்தான். தான் சம்பாதித்த பணத்தை அப்படியே கொடுத்துவிட்ட அவ னோட செய்கை என் கண்களைத் திறந்து விட்டது. இன்னிக்கு சாயந்திரம் எல்லா மாணவர்களையும் ப்ரேயர் நடக்கும் இடத்துக்கு வரச் சொல்லுங்க. அவர்கள் முன்னிலையில் நான் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன்'' என்றார் சக்ர வர்த்தி.

**மா**லை மணி 3.45. அந்த அரசு உயர்நிலைப் பள்ளியின் மாணவர்கள் அனைவரும் அமைதியாக அமர்ந்திருந் தனர். அவர்கள் முன்னால் சக்ரவர்த்தி பேச ஆரம்பித்தார். வழக்கமான முன்னு ரைக்குப் பின் விஷயத்திற்கு வந்தார்.

''இந்தப் பள்ளியில் படித்த பழைய மாணவர்களில் நானும் ஒருவன். தற்

"சுவைக்க முடியாத காரம் எது?"

"தெரியலையே?"


" 'கடிகாரம்'தான்!"

- லெ. ஸ்ரீதரன்



"உங்க பையன் அதிகமா டீ. வி. பார்ப்பானா? டெஸ்ட் பேப்பர்லே 'இந்தப் பக்கத்தில் உள்ள பதில்களை வழங்கியோர் கோபால், ராமு'ன்னு எழுதியிருக்கானே!"


- செஞ்சி தா. ஷேக்



"வாட்ச் ஏன் ஓட மாட்டேங்குது?"


"அதைத்தான் நான் கையில் கட்டி வைச்சிருக்கேனே!"

- செஞ்சி தா. ஷேக்



சமயம் அமெரிக்காவில் கம்ப்யூட்டர் இன்ஜினீயராகப் பணியாற்றுகிறேன். நான் இப்பள்ளியில் படித்ததால் இது எனது பள்ளி என்று பெருமையோடு கூறிக்கொள்கிறேன். பள்ளிக்கூடம் கணிதம், அறிவியல், வரலாறு, குடிமையியல், மொழி, விளையாட்டு, பண்பாடு போன்ற எத்தனையோ விஷயங்களை உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிக் கூடத்துக்கு ''நாம் என்ன செய்தோம் என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். நமக்கு இருப்பது ஒரே அரசு. ஆனால் நமது அரசுக்கோ எத்தனையோ பள்ளிகள். ஒவ்வொரு பள்ளிக்கும் எல்லா வசதிகளையும் அரசாங்கமே செய்து கொடுக்க வேண்டும் என்றால் அதற்குப் போதிய நிதி வசதி வேண்டாமா? ஒவ்வொரு செங்கல்லாகச் சேர்த்தால்தான் கட்டடம் கட்ட முடியும். அதேபோல் நீங்கள் செய்யும் சிறு உதவி கூட ஒரு செங்கல் மாதிரிதான். இப்பொழுதும் கூட, அதாவது கல்வி பயின்று கொண்டிருக்கும் இந்தச் சமயத்திலும் கூட உங்களால் ஆன பொருள் உதவிகளைச் செய்யலாம். இந்த விஷயத்தில் எனக்கு வழிகாட்டியாக இருந்தவன் இப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் கோலப்பன்தான். இரண்டு நாட்கள் கஷ்டப்பட்டு வேலை செய்து, கிடைத்த கூலியைப் பள்ளிக்காகத் தலைமை ஆசிரியரிடம் கொடுத்து விட்டான். அந்தத் தம்பிக்குத் தனிப்பட்ட முறையில் எனது அன்பும் நன்றியும் கலந்த பாராட்டுக்கள். நமது பள்ளியில் ஆறாம் வகுப்பு மாணவர்கள் உட்காரக் கூட வகுப்பறை இல்லாது கஷ்டப்படுவது உங்களுக்குத் தெரியாதது அல்ல. உங்களால் முடிந்த உதவிகளை நீங்கள் செய்வீர்கள் என்று நம்புகிறேன். எனது பள்ளிக்கு வகுப்பறை கட்ட பதினைந்தாயிரம் ரூபாயை மகிழ்ச்சியோடு உங்கள் முன் தலைமை ஆசிரியரிடம் அளிக்கிறேன்.''

பலத்த கைதட்டல்களுக்கு இடையில் தலைமை ஆசிரியர் பதினைந்தாயிரம் ரூபாய்க்கான செக்கைப் பெற்றுக் கொண்டார்.



# தீர்ப்பு

ராஜபுரி என்ற அழகான நாட்டை சந்திர காந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். வீரத்திலும், தீரத்திலும் சிறந்து விளங்கிய மன்னன் வீர விளையாட்டுகளை மிகவும் நேசித்து வந்தான். ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பொன்னும், பொருளும் அள்ளிக் கொடுத்து வந்தான்.

வழக்கம் போலவே அந்த ஆண்டும் சித்திரை மாதம் வந்தது. ராஜபுரியும் விளையாட்டுப் போட்டியைச் சந்திக்க விழாக் கோலம் கொண்டது. பல நாட்டு விளையாட்டு வீரர்களும் ராஜபுரியில் வந்து குவிந்தனர்.

சித்திராபுரியை சேர்ந்த குமாரவர்மனும், அழகாபுரியைச் சேர்ந்த நாகதேவனும் மற்ற மல்லர்கள் அனைவரையும் வென்று வெற்றிவாகை சூடினர். அடுத்து குமாரவர்மனும், நாகதேவனும் முதல் இடத்தை அடையப் போட்டியிட்டனர். மக்கள் வியக்கும் வண்ணம் கடுமையான போட்டி நடந்தது. இரண்டு பெரும் மலைகள் மோதியது போல சண்டையிட்டனர். வெற்றி பெற்றவர் யார் என்பதை அறிந்து கொள்வது கூடக் கடினமாக இருந்தது. அந்த அளவுக்கு இருவரும் சம பலத்துடன் இருப்பதாகவே தோன்றியது. எனவே, போட்டியின் முடிவை மறுநாள் அறிவிப்பதாக மன்னர் கூறிச் சென்றார்.

அரண்மனையை அடைந்த மன்னர் மல்யுத்தப் போட்டியைப் பற்றியே மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தார். கடைசியில், முடிவு காணமுடியாமல் அலுத்து தனது மந்திரி மதிவர்மனே இதற்குச் சரியான தீர்ப்பு அளிக்கக் கூடியவர் என்ற முடிவுக்கு வந்தார். மந்திரியின் உதவியை நாடினார்.

சற்று நேரம் யோசித்த மந்திரி, குமாரவர்மனையும், நாகதேவனையும் அழைத்தார். இருவரிடமும் தனித் தனியே ''நீங்கள் வெற்றி பெற்றால் உங்கள் நாட்டுக்கு அதை எவ்வாறு தெரிவிப்பீர்கள் என்பதை ஓர் ஓலைச் சுவடியில் எழுதிக் கொடுங்கள்'' என்றார். இருவரும் எழுதிக் கொடுத்தனர்.

அடுத்த நாள் அரசவை கூடியது. வீரர்களுடன், மக்களும் மன்னரின் முடிவை எதிர் பார்த்திருந்தனர். அரசரின் சார்பில் மந்திரி மதிவர்மன் எழுந்து மக்களை நோக்கிப் பேசினார்.

''விளையாட்டுப் போட்டி என்பது ஒருவருடைய உடல் பலத்தையும், வீரத்தையும், திறனையும் காட்டுவதுதான் என்றாலும் பல நாடுகள் கலந்து கொள்ளும் விளையாட்டுப் போட்டிகளில் வீரன் ஒருவன் தனக்காக மட்டும் அல்லாது தன் நாட்டின் பெருமைக்காகவும் விளையாடுகிறான். இவ்வாறு நாட்டுப் பற்றுடன் விளையாடும் வீரனே சிறந்த வீரன். இந்த முறையிலேயேதான் நான் இந்த மல்யுத்தப் போட்டிக்கான பரிசுக்குரியவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, குமாரவர்மன், நாகதேவனிடம் பெற்ற இரண்டு ஓலைகளையும் உரக்க வாசித்துக் காட்டினார்.

முதலில் நாகதேவனின் ஓலை வாசிக்கப்பட்டது.

''நான் வெற்றி பெற்று விட்டேன்.'' என எழுதப்பட்டிருந்தது. அடுத்து குமாரவர்மனின் ஓலையில், ''சித்திராபுரி வென்று விட்டது'' என்று எழுதப் பட்டிருந்தது.

''எனவே, தனக்காக என்று எண்ணாமல் தன் நாட்டுக்காக விளை யாடி வெற்றி பெற்ற குமாரவர்மனையே மல்யுத்தப் போட்டியில் முதல் பரிசு பெற்றவராக அறிவிக்கிறேன்'' என்றார். நாகதேவன் குமாரவர்மன் உட்பட அரசரோடு சேர்ந்து, அவையே மந்திரியின் தீர்ப்பை ஏற்று மகிழ்ந்தது.

- இரணியல் ராஜா.

---

# ஊருக்கு ஓர் மணி!

**வ**ந்தவாசியில் இலக்கியப் பணியாற்றி வரும் இளைஞர் சா. இரா. மணி, கோகுலம் வாசகர்களுக்குப் புதியவர் அல்ல. தான் எழுதுவதுடன் மற்றவர்களையும் தூண்டி எழுத வைக்கும் இவர் 'பூங்குயில்' என்ற கையெழுத்துப் பத்திரிகையைச் சிறப்பாக நடத்தி வருகிறார். இவர் தனது நண்பர்களுடன் அண்மையில் நடத்திய ''நல்லாசிரியர் பாராட்டு விழா'' வில், விழாவில் பங்கு கொண்டவர் களுக்கும், கலந்து சிறப்பித்த நண்பர்களுக்கும் மரக்கன்று அன்பளிப்பாக வழங்கி, புதிய பயன்மிக்க ஒரு வழக்கத்தைத் தொடங்கி வைத்துள்ளார். ஊருக்கு ஒரு மணி தோன்றினால் நாடே பசுமையாகும்!



## உங்களுக்கான ஒலிப்பேழை

# பேசும் கிளி பாடுகிறது!

ஆங்கிலத்தில் பிரபலமான குழந்தைப் பாடல்கள் எல்லாமே ஒலிப்பேழைகளாக வந்துள்ளன. தமிழில் இத்தகைய மழலைப் பாடல்கள் பல இருந்தும் ஒலிப் பேழைகள் அதிகமாக வெளிவரவில்லையே என்ற குறை மறைந்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களுக்கு இருந்தது.

தென்னாப்பிரிக்காவின் நெட்டால் தமிழ் வைதீக சபையினர் முதன்முதலாக கவிமணி, பாரதி, குழந்தைக் கவிஞர், பே.நா. அப்புசாமி, பெரியசாமித்தூரன் போன்றவர்களின் சில பாடல்களை கிராம போன் இசைத் தட்டுகளாக அமைக்க முயற்சி எடுத்தார்கள். இதற்கு குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு சிறப்பாகத் தொண்டாற்றிய ரவி என்ற சிறுவர் பத்திரிகையின் ஆசிரியை சாந்தலக்ஷ்மி அம்மையார் அவர்கள் இசை அமைத்தார். தமது மாணவிகளைக் கொண்டே பாடவைத்தார். இலங்கையில் இதேபோன்ற ஒரு முயற்சியை யாழ்ப் பாணத்து சிவமணித் தம்பிரான் என்பவர் எடுத்தார். ஆனால் இவை எதிர்பார்த்த அளவுக்கு வணிக முறையில் வெற்றி பெறவில்லை.

குழந்தை இலக்கிய வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் கொண்ட ஏவி.மெய்யப்பச் செட்டியார் அவர்கள் கவிமணி, பாரதி, குழந்தைக் கவிஞர் போன்றவர்களின் பாடல்களை எம்.எஸ். ராஜேஸ்வரியைக் கொண்டு பாட வைத்து ஒலிப் பேழையாக வெளியிட்டார். இதுவும் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை.


பிரபல திரைப்பட நடிகர் ரஜினிகாந்த் அவர்களின் துணைவியார் லதா ரஜினி காந்த் அவர்கள், கவிஞர் உளுந்தூர் பேட்டை சண்முகம் அவர்களைக் கொண்டு எழுதப்பட்ட சில குழந்தைப் பாடல்களை மற்றவர்களுடன் தானும் சேர்ந்து பாடி ''நிலா நிலா ஓடி வா!'' என்ற பெயரில் ஓர் ஒலிப் பேழையை வெளியிட்டார். இதே போல் பிரபல தொலைக்காட்சிக் கலைஞர் திருமதி சந்தியா ராஜகோபால் அவர்களும் ஓர் ஒலிப் பேழையை ''கண் மணிப் பூங்கா'' என்ற பெயரில் வெளியிட்டார்.

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவினால் பாராட்டும், ஊக்கமும் பெற்ற கவிஞர் குழ. கதிரேசன் அவர்கள், சந்தம் தப்பாது தாளம் போடவல்ல பாடல்களைக் குழந்தைகளுக்காகப் படைப்பதில் வல்லவர். கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான இவரது பாடல்கள் அடங்கிய ''மழலைப்பூ'', ''பேசும் கிளி'', ''தொப்பைக் கோழி'' ஆகிய மூன்று ஒலிப் பேழைகளை அண்மையில் நிதிபதி அரு. இலக்குமணன் அவர்கள் வெளியிட்டுள்ளார். முழுக்க முழுக்க குழந்தைகளுக்காகவே எழுதிப் பிரபலமான ஒரு கவிஞரின் குழந்தைப் பாடல்கள் அடங்கிய இப்படிப் பட்ட ஒலிப் பேழைகள் வருவது இதுவே முதல் முறை. சந்தம் கொஞ்சும் இந்தப் பாடல்களைக் கேட்டாலே போதும். குழந்தைகள் தாங்களாகவே தாளம் போடுவார்கள் என்பது உறுதி. இசை அமைத்த கலைஞரையும், பாடியவரையும் எத்தனை பாராட்டினாலும் தகும். ''தேன் வந்து பாயுது காதிலே'' என்ற பாரதி பாடியது இப்படிப் பட்ட ஒலிப்பேழைகள் வரப் போவதை எதிர்பார்த்துத் தானோ என்று கூடத் தோன்றுகிறது. சிறுவர் இலக்கியத் 'தில் ''ஒலிப் பேழை'' என்ற ஓர் புதிய பிரிவை வளமாக்கியுள்ள பெருமைக்கு உரிய பாடலாசிரியர் கவிஞர் குழ. கதிரேசனை எத்தனை பாராட்டினாலும் தகும். இந்த முயற்சி பாராட்டுக்குரியது. பள்ளி விழாக் களிலும், சிறுவர் விழாக்களிலும் போட்டுக் கேட்க முற்றிலும் ஏற்றவை.



பேசும் கிளியே, மழலைப் பூக்கள், தொப்பைக் கோழி ஒவ்வொன்றும் ரூபாய் முப்பது. கிடைக்கும் இடம் : ஐந்திணைப் பதிப் பகம், 279, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

சிறுவர்களுக்கான தமிழ் ஒலிப் பேழைகள் மட்டும் மதிப்புரை செய்யப்படும். இரண்டு ஒலிப் பேழைகளை ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல் என்ற முகவரிக்கு அனுப்பவும்.




# மோதிரம் போட வேண்டும்!

★ ''ஆண்டாள் என்ன சொன்னாள்?'' கதை மறைமுகமாக எங்களைக் கல்வியில் ஆர்வம் காட்டும்படி தூண்டியது! - சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

★ அபிராமியின் அட்டிகையை எழுதும் கூத்தபிரானுக்கு மோதிரம் போட வேண்டும். - தாம்பரம் ஆர். வெங்கடேஷ், தம்மம்பட்டி கிருஷ்ணமூர்த்தி, பட்டீஸ்வரம் கே. கருப்பையன்.

★ 'நான்தான் கம்ப்யூட்டர்' பல அறிவியல் தகவல்களை மிக எளிதாகப் புரிய வைத்தது. - நாகர்கோவில் க. சுரேஷ் குமார், தஞ்சை ஆர். புனிதா, திருவெண்ணெய் நல்லூர் எஸ். ஏ. ரேவதி, மாத்தூர் ஆ. செல்வராஜ், மேலப்பாதி என். இராஜலட்சுமி, ஈரோடு எம். கோமதி.

★ 'மகாதேவனின்' 'பட்டாக பிறந்த கதை'யைப் படித்து திடுக்கிட்டோம். இது 13.10.90 நாளிட்ட தினமணி நாளிதழில் ''சின்னஞ்சிறு கோபு'' என்பவர் எழுதிய தாகும். வார்த்தைக்கு வார்த்தை, வரிக்கு வரி அப்படியே. இனியாவிலும் கொஞ்சம் உஷாராக இருங்கள். - முடிகொண்டநல்லூர் ஜி. சரஸ்வதி, பொன்னமராவதி வ. கிருஷ்ணம்மாள், ஆத்திச்சூடிப்பட்டி பொ. மாணிக்கம், எலவஞ்சாவடி மு. வெங்கடேசன் மற்றும் பலர். (இது குறித்து எழுதியவர்களுக்கு நன்றி. தலையங்கத்தைக் காணவும். - ஆசிரியர்.)

★ 'சேரநம்பி' என்னவானாருங்க? கேள்வி பதில் இல்லாத கோகுலம் இனிப்பில்லாத பால்கோவா மாதிரி இருக்கே! - சாத்தூர். மு. பரசுராமன், திருமுருகன்பூண்டி வெ. லட்சுமணசாமி, உறையூர் வெ. தணிகைவேலன், மற்றும் பலர். (இந்த இதழில் வெளியாகியுள்ளது. - ஆசிரியர்)

★ 'முகமது கண்டெடுத்த புதையல்' படக்கதை படு ஜோர்! - கரியமாணிக்கம் மா(ரி) அரிகிருஷ்ணன், விலியநல்லூர் க. கோபு, சீர்காழி எஸ். கார்த்திகேயன், கிழக்கு தாம்பரம் ஆர். வெங்கடேஷ்.

★ அட்டை அழகு அள்ளிக் கொண்டு போகிறது. உள்ளே புரட்டவே மனம் வரவில்லை. ஏதோ அயல்நாட்டுப் பத்திரிகையைப் பார்ப்பது போல் இருந்தது - தருமபுரி எம். சோமசுந்தரம், மதகடிப்பட்டு பி. தமிழரசன் நண்பர்கள், பழனி எஸ். சையது முகமது நண்பர்கள், குடந்தை சிவஸ்ரீ, விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், மேலப்பாதி எஸ். நாகராஜன்.

★ இதயம் எங்களை அசத்தி விட்டது! - அம்மையார்குப்பம் மா. வெ. கிருஷ்ணன், தம்மம்பட்டி க. கிருஷ்ணமூர்த்தி, கொத்தமங்கலம் கே.பி. இளஞ்சேரன், எலவானாசூர் கோட்டை எம். வேல்முருகன்.

★ 'நான்தான் கோழை' நெகிழச் செய்தது! - சங்கை கே. கலை. பட்டீஸ்வரம், பி. சுந்தர்.


★ பிருந்தாவனக் கவியரங்கம் தாளம் போட்டுப் பாட வைத்தது! - முதுகுளத்தூர் மா. ராசமாணிக்கம், திருப்புறம்பியம் கே. பி. சரவணகுமார்.

★ ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து நண்பர்களுக்கு உதவத் தூண்டியது ''இனியாவது வாங்கிக் கொள்'' - கல்லூரணி அ. பெரியசாமி.

★ மாணிக்க மனிதர் கட்டுரையில் குழந்தைக் கவிஞரின் பெருந்தன்மையை உணர்ந்தோம். - சிதம்பரம் ச. ஞானப் பிரகாசம், குடியாத்தம் ஐஸ்வர்யா, வேலூர் பா. வை. சுவாமிநாதன்.

★ 26 ஆம் பக்க நாய்க்கடி ஜோக் பல பத்திரிகைகளில் பல மாதிரி படித்து அலுத்த ஒன்று! - அரக்கோணம் என். கோபால கிருஷ்ணன்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.




Karishma/SW/6/2416 TM A.

REGISTERED NO. TN MS (S) 381
Registered as Newspaper in Srilanka

